REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK


2023 மே 15 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 113 | Monday 15, May, 2023 | 20பக்கங்கள் | 50/-

## தங்கத்தின் விலையில் திடீரென பாரிய வீழ்ச்சி

### 22 கரட் பவுண் ரூ. 1,58000ஆக பதிவு



இலங்கையில் தங்கத்தின் விலை குறைந்துள்ளதாக தங்க சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்படி, கொழும்பு செட்டியர் தெரு தங்கச் சந்தையில் நேற்று

06

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 15ஆவது பொது பட்டமளிப்பு விழா

### பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க பிரதம பேச்சாளர்



(விரிவான செய்தி 10

### செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்ப வளர்ச்சி குறித்து

## பத்து ஆண்டுகால அபிவிருத்தி திட்டத்தை முன்வைத்தால் ஆதரவளிக்க அரசு தயார்

### கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு




செயற்கை நுண்ணறிவு போன்ற தொழிநுட்ப வளர்ச்சியுடன் உலகம் முழுவதுமே அறிவுப் புரட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் கொழும்பு பல்கலைக்கழகம் 10 ஆண்டுகால அபிவிருத்தித் திட்டத்தை முன்வைத்தால் அதற்கு அரசாங்கம் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் கடந்த 12ஆம் திகதி

06

### வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களால்

# கடந்த 04 மாதங்களில் ரூ.180 கோடி வருமானம்



### ஏப்ரல் மாதத்தில் மட்டும் 45 கோடி ரூபா கிடைத்தது

**கடந்த வருட காலத்துடன் ஒப்பிடுகையில் சுமார் 82.4 வீதமான அதிகரித்த தொகை என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றுள்ளவர்களிடமிருந்து நாட்டுக்கு 180 கோடிக்கும் அதிகமான நிதி வெளிநாட்டு அந்நிய செலாவணியாக கிடைத்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் கடந்த நான்கு மாதங்களில் அவர்கள் மூலம் 1867.2 மில்லியன் டொலர்கள் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் 454 மில்லியன் டொலர் அவ்வாறு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொகையானது கடந்த வருடம் ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் 82.4 வீத அதிகமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளோர் மூலம் இலங்கைக்கு 427.5 மில்லியன் டொலர் அனுப்பப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதத்தில் 407.4 மில்லியன் டொலர்களும் மார்ச் மாதத்தில் 568. 3 மில்லியன் டொலர்களும் இவ்வாறு நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சட்டபூர்வமாக நாட்டுக்கு இவ்வாறு பணத்தை அனுப்பும் வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபடுவோருக்கு வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் மற்றும் விமான நிலையத்தில் தீர்வை வரி நிவாரணம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அவுஸ்திரேலிய அரசினால் இலங்கைக்கு விமானம் அன்பளிப்பு

### ஜனாதிபதியிடம் தூதுவர் வழங்கி வைத்தார்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைக்கு விமானம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

06



டெங்கு பரவல் வெகுவாக அதிகரிப்பு:

### 59 சுகாதார மருத்துவ பிரிவுகள் எச்சரிக்கை வலயங்களாக அறிவிப்பு

03

## நேற்று நள்ளிரவு முதல் சீமெந்து விலை குறைப்பு!

### 50Kg பக்கட்டின் புதிய விலை ரூ. 2600 ஆனது



நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் சீமெந்து விலையை குறைக்க சீமெந்து மொத்த விற்பனையாளர் தீர்மானித்துள்ளனர். அதன்படி, 50 கிலோ கிராம் நிறையுடைய சீமெந்து பொதியின் விலையை 150 ரூபாவால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, தற்போது 2750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் சீமெந்து பொதி 2,600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

## தமிழ் மக்களது அபிலாஷைகளை பூர்த்தி செய்வதே எமது இலக்கு

### நியாயமான தீர்வை பெற்றே தீருவோம் – சம்பந்தன்



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைப் பெற வேண்டும் என்பதே எமது இலக்காகும். அதற்காக அந்த மக்களின் பிரதிநிதிகளாக எமது பூரணமான

06

## சீனி, கோதுமை மா விலை அதிகரிக்கப்பட மாட்டாது



சீனி கோதுமை மா விலை அதிகரிக்கப்பட மாட்டாது என நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர் சங்கங்களுடனான கலந்துரையாடலின் போது, இது தொடர்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இறக்குமதியாளர்களிடம் காணப்படும் சீனி கையிருப்பு தொடர்பில் ஆராயுமாறு நுகர்வோர்

06

## அரசின் சரியான திட்டங்களுக்கு SJB நிபந்தனையற்ற ஆதரவு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



நாட்டுக்கான சரியான பொதுத் தீர்மானங்களை எடுக்கும் போது நிபந்தனையற்ற விதத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். பத்தரமுல்லையில் (13) நடைபெற்ற பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் இளம் உறுப்பினர்களை தெளிவுபடுத்துவதற்கான வேலைத்

06

### சீரற்ற காலநிலை மேலும் தொடரும்;

## சில மாவட்டங்களில் இடியுடன் கூடிய பெருமழைக்கு வாய்ப்பு

### கடலுக்கு செல்லும் மீனவருக்கும் எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை மேலும் சில தினங்களுக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க மேல் மாகாணம் உள்ளிட்ட

06

### உள்வருகை, வெளியேறுதல் குறித்து

## அரசாங்க ஊழியர்களுக்கு இன்று முதல் புதிய நடைமுறை

### அலுவலகங்களில் இயந்திர கைவிரல் பதிவு அமுல்



அரச ஊழியர்கள் வேலைக்குச் செல்லும் போதும், வெளியேறும் போதும் கைரேகை பதிவு செய்வது இன்று (15) முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இது தொடர்பில் அனைத்து நிறுவன தலைவர்களுக்கும் சுற்றறிக்கையை

06

## லக்சம்பேர்க்குடன் இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தம்

### ஜீன் அசெல்போர்னுடன் அலிசப்ரி கலந்துரையாடல்




இலங்கை லக்சம்பேர்க்குடன் இருதரப்பு ஆலோசனைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற இரண்டாவது ஐரோப்பிய யூனியன் இந்தோபசிபிக் அமைச்சர்கள்

06

## புதையல் தோண்டிய ஆறுபேர் அதிரடி கைது

### ஒட்டிசுட்டானில் சம்பவம் பதிவு



முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட கனகரத்தினபுரம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டோர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஆறு பேரை கைது செய்துள்ளதாக ஒட்டிசுட்டான் பொலிஸார் (13) தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கனகரத்தினபுரம்

06

## ஒரே வீட்டில் தங்கியிருந்த நான்கு சிறுவர்கள் மாயம்

### மாத்தறையில் சம்பவம்; பொலிஸார் தீவிர தேடுதல்



மாத்தறை – நெலுவ – தெல்லவ, மியனவத்துர பகுதியில் ஒரே வீட்டில் தங்கியிருந்த பல குடும்பங்களைச் சேர்ந்த நான்கு சிறுவர்கள் நேற்று முன்தினம் இரவு முதல் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு வயது குழந்தை, 10 வயது

06

## பாதையை விட்டு விலகி வான் ஒன்று விபத்தில்

### பதுளையில் 11 பேர் ஆஸ்பத்திரியில்



பதுளை பண்டாரவளை பிரதான வீதியில் ஹாலி எல பிரதேசத்தில் உள்ள தோவ ரஜமஹா ஆலய ஊர்வலத்தில் கலந்துகொண்ட நடனக் குழுவின் மாணவர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று இடம்

06

## தையிட்டி விகாரைக்கு ஆதரவு தெரிவித்து யாழில் பேரணி

### யாழ். சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது



தையிட்டி விகாரைக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாண சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் (13) பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு ஆதரவு தெரிவித்து, 'அனைத்து மதங்களையும் ஒன்றாக மதிக்க வேண்டும்' என்ற

06



அமரர் பரிஏறும் பெருமாள் பிள்ளை (மாணிக்கம்பிள்ளை) வைகுண்டபிராப்தி அடைந்து ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை (13.05.2023) கொழும்பு கொட்டாஞ்சேனை வரதராஜர் விநாயகர் ஆலய ஐங்கரன் மண்டபத்தில் அவரது சேவை நலனை நினைவுகூர்ந்து வி.டி.வி அறக்கட்டளை அஞ்சலிக் கூட்டமொன்றை நடத்தியது. அவரது சமயசமூகப் பணிகளை நினைவுகூர்ந்து அவருக்கு பலரும் அஞ்சலி செலுத்தினார்கள். ஈ. தெய்வநாயகம்பிள்ளை, ஜி. சேனாதிராஜா (சட்டத்தரணி), எஸ். சந்தரமூர்த்தி, ஆர். வைத்தமாநிதி ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள். படம்: எம்.நசார்

# கிழக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழு அலிக்கம்பைக்கு விஜயம்

(ஒலுவில் விசேட நிருபர்)

ஆலையடிவேம்பு பிரதேசத்திற்குட்பட்ட அலிக்கம்பை பிரதேச மக்களின் சுகாதார மேம்பாடு தொடர்பாக கண்டறிவதற்காக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் தலைமையிலான குழு, சனிக்கிழமை (13) அலிக்கம்பை கிராமத்திற்கு விஜயம் செய்து சுகாதார பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஏ.எல். றிபாஸ் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்க விஜயம் செய்த குழுவினர் பிரதேச மக்கள் எதிர்நோக்குகின்ற மருத்துவ தேவைகள் மற்றும் தொற்று நோய்கள் நாட்பட்ட நோய்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில் கிறிஸ்தவ தேவாலயம் மற்றும் குறித்த பிரதேச சிவில் சமூகத்தினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

பிரதேச மக்களுக்கு வைத்திய சேவைகளை வழங்குவதற்கும் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கும் தொற்று நோய்கள் மற்றும் தொற்று நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அலிக்கம்பை பிரதேசத்தில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வைத்தியசாலைக்கான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும், நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்ததும் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



தற்போது அப்பிரதேச மக்களுக்கு அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலை மற்றும் பனங்காடு பிரதேச வைத்தியசாலை ஆகியவற்றின் பங்களிப்புடன் வைத்திய சேவை நடைபெற்று வருவதாகவும், தொடர்ந்து கர்பிணித் தாய்மார்களுக்கான கிளினிக் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

# பயிற்சி நெறியை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்

(முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)

திருகோணமலை லவ்வேன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் 06 மாத கால தொழில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த இளைஞர் யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (12) திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம கலந்து சிறப்பித்தார்.

பாடநெறியை பூர்த்தி செய்த 98 பேருக்கு இதன்போது சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. கணனி, மின்னியல், தச்சு, நீர்க்குழாய் பொருத்துனர், சிகை அலங்காரம் உள்ளிட்ட பல பாடநெறிகளை இவர்கள் பூர்த்தி செய்துள்ளனர்.

இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் சுமித் கொடின்கொடுவ, தேசிய இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியுற்றோர் கௌரவிப்பு



(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைந்த 64 மாணவர்களுக்கு, மட்டக்களப்பு மக்கள் வங்கியின் நிதிப்பங்களிப்பின் மூலம் பதக்கம் அணிவித்து கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, பாடசாலை அதிபர் தலைமையில் வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு நகர மக்கள் வங்கியின் முகாமையாளர் என்.தினேஸ்குமார், உதவி முகாமையாளர் திருமதி.சுதர்ஷினி செந்தூரன், ஆசிரியர்களான எஸ்.சிற்சபேசன்,வை.துவாரகன்,தி

ருமதி.தர்ஷினி ஜெயந்திரன், திருமதி.ஶ்ரீதாரணி நகுலராஜ்,

வங்கியின் உதவிச் செயலாளர் , உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது புலமைப்பரிசில் சித்தியடைந்த 64 மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து கற்றல் உபகரணங்கள் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

# நீர்த்தாவரங்களால் மீன்பிடி பாதிப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை கடற்பரப்பில் ஒதுங்கியுள்ள நீர்த்தாவரங்களினால் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிய வருகின்றது.

சில நாட்களாக திருகோணமலை கடற்பரப்பில் மட்டுமல்லாது மூதூர், கிண்ணியா போன்ற இடங்களில் உள்ள கடற்பரப்புகளில் நீர்த்தாவரங்கள் கரையொதுங்கிவருகின்றன.

அண்மைக்காலமாக பெய்த மழையினால் ஆறுகள் மற்றும் குளங்களில் காணப்பட்ட இந்த நீர்த்தாவரங்கள் மகாவலி கங்கையினூடாக பெருமளவாக அள்ளுண்டு கடலை அடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

இதனால் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களது வலைகளில் சிக்குண்டு வலைகள் சேதமடைவதாகமீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கடற்கரைகளில் கரையொதுங்கியுள்ள இத்தாவரங்களினால் சுற்றுலாப் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக,தெரிவிக்கப்படுகின்ற நிலையில் அவற்றை சுத்தப்படத்துகின்ற நடவடிக்கைகளிலும் சுற்றுலாப்பயணிகள் ஈடுபட்டு வருகின்றார்கள். நீர்த்தாவரக் கழிவுகளை இயற்கை பசளை தயாரிக்க பயன்படுத்த முடியும் எனவும், இதற்கான சரியான திட்டத்தை அரசு முன்னெடுக்க வேண்டும் எனவும் புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

# சம்மாந்துறையில் நடமாடும் சேவை

(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொது மக்கள் நடமாடும் சேவையொன்று செவ்வாய்க்கிழமை 16 இடம்பெறவுள்ளது.

காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ஹனீபா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் காணிப் பிரிவு, சமூக சேவைகள், சமூர்த்தி, மோட்டார் போக்குவரத்து, இறப்பு, பிறப்பு பதிவாளர், ஆட்பதிவு திணைக்களம், மகளிர் அபிவிருத்தி, அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட பிரிவுகளில் பொது மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகள் வழங்கப்படவுள்ளன. சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள பொது மக்கள் தங்களது தீர்க்கப்படாத நீண்டகால பிரச்சினைகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு

(மட்டக்களப்பு குறூப், மட்டக்களப்பு விஷேடநிருபர்கள்)

மட்டக்களப்பு பொது மக்களால் அதிகம் பயன்படுத்தப்பட்டுவரும் பூங்காக்களை சுத்தப்படுத்தி அழகுபடுத்தும் மாநகர சபையின் விசேட செயற்திட்டத்திற்கு அமைவாகவும், தேசிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு அமைவாகவும், மாநகர ஆணையாளரின் பணிப்புரையின் கீழ் மாநகர சபையின் சுகாதார பிரிவினரால் பிரதி சனிக்கிழமை தோறும் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக ஞாயிற்றுக்கிழமை (13) மட்டக்களப்பு நகரின் கோட்டை பூங்கா வளாகம், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை பூங்கா என்பன சுத்தப்படுத்தப்பட்டதுடன், மட்/ அரசினர் ஆசிரியர் கலாசாலையினை ஊடறுத்து செல்லும் கோட்டைமுனை பிரதான வடிகானும் இதன்போது சுத்தம் செய்யப்பட்டது.



இச் சிரமதானப் பணிகளில் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் நா. மதிவண்ணன், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா ஆகியோருடன் சுகாதார பிரிவின் மேற்பார்வையாளர்கள் மற்றும் ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# அக்கரைப்பற்று பிரதேசத்தில் உணவகங்கள் சுற்றிவளைப்பு

ஒலுவில் விசேட நிருபர்

அக்கரைப்பற்று பிரதேசத்தில் பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனை செய்து வரும் உணவகங்கள் கண்டு பிடிக்கப்பட்டு, அதன் உரிமையாளர்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எம்.எப்.ஏ. காதர் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனைக்கமைய அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட உணவகங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் தொடர்ச்சியாக மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போதே விற்பனைக்காக பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள் மற்றும் பாவித்த தேங்காய் எண்ணெயை மீண்டும் பாவனைக்கு பயன்படுத்தப்பட்டது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்டிருந்தாக தெரிவித்தார்.

இச் சுற்றி வளைப்பின் போது கடந்த மாதம் பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனை செய்ததாக இனங்காணப்பட்ட 11 உணவகங்களுக்கு எதிராக அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டு, இதில் 01 உணவகம் நிரந்தரமாக மூடப்பட்டள்ளதாகவும் தெரவித்தார்.

அபராதம விதிக்கப்பட்ட உணவகங்கள் தற்காலியமாக மூடப்பட்டு குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு உணவகம் தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர்களின் அறிக்கையின் பிரகாரம் மீள திறக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

உணவகங்களில் உணவு கையாள்பவர்கள் உரிய மருத்துவ சான்றிதழை தன்வசம் வைத்திருக்கவேண்டுமெனவும் தெரிவித்தார்.

# மூதூரில் குப்பைகளால் துர்நாற்றம்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள 'கொல்லனாற்று' சின்னப் பாலத்திற்கு அருகாமையில் குப்பைகள் கொட்டி வருவதால், இவ்வாற்றங்கரை சூழல் பெரும் சுகாதார சீர்கேடுகளுக்கு உள்ளாகி வருவதுடன், துர்நாற்றமும் வீசுவது கண்டு இவ்வீதி வழியால் பயணிக்கும் பிரயாணிகளும் மற்றும் பொது மக்களும் பெரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பாலத்திற்கு அண்மித்தாக குடியிருப்புக்கள், பாடசாலை, பஸ் தரிப்பிடம், மின்சார சபை மற்றும் பொதுச்சந்தை உள்ளிட்ட இடங்கள் காணப்படுவதுடன் பிரதான மக்கள் போக்குவரத்தும் இப்பாலத்தின் ஊடாக இடம்பெறுகின்றன.

இப்பாலத்தின் அருகில் இரவில் குப்பைகளை கொட்டி விடுவதால் இதனை நாய்கள் மற்றும் காகங்கள் கிளறுவதுடன் நுளம்புகள் பெருகி பெரும் சுகாதார சீர்கேடுகளுக்கும் உள்ளாகி வருகின்றன.

எனவே இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு பொது மக்கள் வேண்டுகிள்றனர்.

# மூதூர் அல் ஹிதாயா புனரமைப்புக்கு நிதி

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும், விஞ்ஞான கூடத்தினை புனரமைப்பு செய்யவும் 07 இலட்சம் ரூபா நிதி உதவி கிடைக்கப் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.எஸ்.ஹில்மி சனிக்கிழமை (13) தெரிவித்தார்.

மூதூர் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு மிக அவசியமாக தேவைப்பட்ட விஞ்ஞான உபகரணப் பொருட்களின் தேவைப்பாட்டையும், இப்பிரிவுக்கான கட்டிட தொகுதியின் புனரமைப்பு தொடர்பிலும் இஸ்லாமிக் ரிலீப் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாறூக் அப்சலிடம் பாடசாலை நிருவாகத்தினர் நேரில் சந்தித்து விளக்கி இருந்தனர்.

இதன் தேவைகளை நேரில் கண்டறிந்த நிறுவனத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட நிருவாகிகள் உரிய பிரிவை பார்வையிட்டதுடன், தற்போது இதன் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருவதுடன், உபகரண பொருள் கொள்வனவுக்கான நிதியும் கிடைக்கப்பெற்றுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

# நடமாடும் சேவையில் 200 பிரச்சினைகளுக்கு தீர்வு

அக்கரைப்பற்று மத்திய நிருபர்

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'நடமாடும் செயலகம்' எனும் நடமாடும் சேவை அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் தலைமையில் வியாழக்கிழமை (11) பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந் நடமாடும் சேவையில் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் பல பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கினார்கள்.

தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, பொதுசன உதவு தொகை, காணி சம்பந்தமான பிரச்சினைகள், பொலிஸ் முறைப்பாடு வழங்கல், பிறப்பு இறப்பு பதிவு வைத்தல் (காலம் கடந்த), வாகன அனுமதிப்பத்திரம் போன்ற பல்வேறு சேவைகளுக்கு பிரதேச செயலாளரினால் தீர்வு வழங்கப்பட்டது.

இதன் போது உதவி பிரதேச செயலாளர் றாசித் யஹ்கியா, திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், காணி ஆணையாளர் திருமதி. இப்திகார் பானு,மாவட்ட காணி ஆணையாளர் கே.எல்.எம்.முஸம்மில், சமுக சேவை உத்தியோகத்தர், மாவட்ட பதிவாளர் மற்றும் நூற்றுக் கணக்கான பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN தினகரன்

2023 மே 15 திங்கட்கிழமை




**தொழுகை நேரம்**
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி


இளைஞர் கோரிய மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது

# கடமையைச் செய்தால் நாட்டின் வெற்றியில் பங்குகொள்ளமுடியும்

## பத்தரமுல்லை நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

'பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவில் பங்கேற்க இளைஞர்களுக்கு வாய்ப்பளித்த முதல் நாடு இலங்கையாகும். இளைஞர் கோரிய மாற்றத்தை நாம் ஏற்படுத்தியுள்ளோம். இன்று கடமையை செய்தால் இன்னும் 25 வருடங்களில் நாடு வெற்றிப் பாதையை எட்டியிருக்கும் போது, நாம் எடுத்த நடவடிக்கையே நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது என இளைஞர் சமூகம் பெருமிதம் கொள்ள முடியும்' என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் இளம் உறுப்பினர்களை தெளிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டபோதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.



இந்த வேலைத் திட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரும் கலந்துக்கொண்டனர்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'இன்று இந்த சபையில் 500 புதிய இளம் உறுப்பினர்கள் இணைந்துகொண்டுள்ளனர். மேற்பார்வையாளர்களாக அன்றி பாராளுமன்ற குழுக்களில் உள்ள இளம் பிரதிநிதிகளாகவே இவர்கள் பங்கெடுத்துள்ளனர். உலகில் முதல் முறையாக இவ்வாறானதொரு செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

பாராளுமன்ற குழுவிலும் அமெரிக்க செனட் குழுவிலும் காங்கிரஸ் குழுவிலும் அவர்களது சபை உறுப்பினர்கள் மாத்திரமே பங்கேற்க முடியும். ஆனால் நமது பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் நிலையியற் கட்டளைகளில் மேற்கொண்ட திருத்தங்கள் காரணமாக இளம் உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கிட்டியுள்ளது. குழு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு மேலதிகமாக உங்களது கருத்துகளும் உள்வாங்கப்படும். சபை அமர்வுகளும் விவாதங்களும் மட்டுமே பாராளுமன்றத்தின் பணிகளென பலரும் நினைக்கிறார்கள். இன்று அநேகமான பாராளுமன்றங்களில் குழுநிலைச் செயற்பாடுகள் மூலமே அதிகளவான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதி வழங்கலை அனுமதித்தல், நிதியை ஈடுபடுத்தல், செலவிடுதல், சட்டத்தை

06

பொலிசாருக்கு மேலதிகமாக படையினருடன்

# கொழும்பில் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தீவிரம்

## பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு மற்றும் அதனையண்டிய நகர்ப்புறங்களில் நேற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்த நிலையில் பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவசர நிலைமைகளில் செயல்பட வேண்டிய முறைமை தொடர்பில் ஒத்திகை பார்க்கும் வகையிலேயே கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த படையினரையும் பொலிசாரையும் மீள அழைப்பது தொடர்பில் இதுவரை எந்த இறுதித் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் பொலிஸ் கலகம் அடக்கும் பிரிவினர் மற்றும் தீயணைப்பு படையினரும் அவற்றில் உள்ளடங்குவதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதே வேளை கொழும்பில் நாசகார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சில தரப்பினர் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்ததாக புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்துள்ள தகவல்களையடுத்தே கொழும்பின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும்

ஹம்பாந்தோட்டை துறைமுகம், போர் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காக சீனாவினால் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்துள்ளதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.



இந்தியாவின் பாதுகாப்பு குறித்து கவனமாக இருக்க வேண்டும் எனவும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மிகவும் நட்பு ரீதியான உறவு உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கமைய இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் விமான சேவைகள் இடம்பெறுவதுடன் தற்போது கப்பல் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் இலங்கை தனது எரிசக்தி துறையை கட்டியெழுப்புவதற்கு இந்தியா உதவுகிறது எனவும் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.12 லட்சம் மதிப்புள்ள

## 30 கிலோ கஞ்சா பறிமுதல்; 2 பேர் கைது

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

வேளாங்கண்ணி அருகே இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.12 லட்சம் மதிப்புள்ள 30 கிலோ உயர் ரக கஞ்சாவை தனிப்படை பொலிசார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டனர்.



நாகை மாவட்ட கடலோர பகுதிகளில் இருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படுவது அடிக்கடி நடக்கிறது. இதனை கண்காணித்து தடுக்கும் முயற்சியில் தனிப்படை பொலிசாரும், கியூ பிரிவு பொலிசாரும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி அருகே உள்ள விழுந்தமாவடியில் இருந்து படகு மூலமாக இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படுவதாக தனிப்படை பொலிசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் நேற்று அதிகாலை கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு உள்ள கடற்கரையில் சந்தேகத்துக்கு இடம் அளிக்கும் வகையில் நின்று கொண்டிருந்த காரில் சோதனை செய்தபோது அதிலிருந்து பல இலட்சம் பெறுமதியான கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சொகுசு காரும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் காணிகள் அபகரிப்பு

# இனப்பிரச்சினை தீர்வு நடவடிக்கைகளில் தொடர்ந்தும் பாதிப்புக்கே வழிவகுக்கும்

## ரவூப் ஹக்கீம் எம்.பி சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடக்கு, கிழக்கு மாகாண பிரதேசங்களில் தொடர்ந்தும் காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகள் இடம் பெறுமானால் அது இனப்பிரச்சினை தீர்வுக்கான நல்லிணக்க செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம். பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



அதே வேளை,திருகோணமலை பிரதேசத்தில் சியம்நிகாய மஹாநாயக்க தேரர்களின் மத வழிபாட்டு நிகழ்வை தடுக்க முற்பட்டால் பாரிய அழிவு ஏற்படும் என சரத் வீரசேகர எம்.பி. தெரிவித்திருக்கும் கூற்று பாரிய அச்சுறுத்தலாகும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அஷ்வசும வேலைத்திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்புகள் அங்குள்ள மக்களை வறுமை நிலைக்குத் தள்ளுவதுடன் வேறு பிரச்சனைகளுக்கும் அது காரணமாக அமையும்.

யுத்தத்துக்குப் பின்னர் காணி அபகரிப்பு பிரச்சினைகள் வடக்கு கிழக்கில் மிகவும் பாரியளவில் இடம்பெற்று வருகின்றன. அதனால்தான் காணி அபகரிப்புகளை உடனடியாக நிறுத்துமாறு தமிழ் அரசியல் கட்சிகளுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக தமிழ் ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருக்கின்றது.

எனினும் தொடர்ந்தும் காணி அபகரிப்புகள் வடக்கு கிழக்கில் இடம் பெற்றுவருவதை காண முடிகின்றது.

மேலும் திருகோணமலையில் சியம்நிகாய மஹாநாயக்க தேரர்களின் மத வழிபாட்டு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அதனை தமிழ் தேசிய கூட்டமைப்பு தடுக்க முற்பட்டால் பாரிய அழிவு ஏற்படும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.இது பாரிய அச்சுறுத்தலாகும்.

இதனை சாதாரணமாக கருத முடியாது. இந்த அச்சுறுத்தலை விடுக்கும் சரத் வீரசேரக எம். பி. தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வை குழுவின் தலைவராக செயற்படுகின்றார் என்பதும் வியப்பே.

இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு தலைவரிடமிருந்து, முன்மாதிரி, அர்ப்பணிப்பை எதிர்பார்க்க முடியுமா என்ற கேள்வியே எழுகிறது.

இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். அதேநேரம் கிழக்கில் சில பிரதேசங்களை பௌத்த மயமாக்கும் சித்து விளையாட்டினால் நாட்டில் தற்போதுள்ள இனப்பிரச்சினை இன்னும் மோசமானதாக மாறலாம்.

06

# பாடசாலைகள் இரண்டு வாரங்களுக்கு விடுமுறை

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்காக அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் இரண்டு வாரங்களுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 11 ஆம் திகதி வரை பாடசாலைகள் விடுமுறை வழங்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான முதல் தவணைக்கான மூன்றாம் தவணை பாடசாலை கல்வி நடவடிக்கை ஜூன் 12 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும்.

இதேவேளை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 29 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

# தேர்தல் இடாப்பு திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பம்; வீடு, வீடாகச் சென்று தகவல்கள் சேகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இவ்வருடத்திற்கான தேர்தல் இடாப்பு திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கிணங்க கிராம சேவை அதிகாரிகள் வீடு வீடாக சென்று வாக்காளர்கள் தொடர்பான தரவுகளை திரட்டும் நடவடிக்கைகள் தற்போது இடம் பெற்று வருவதாகவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டின் நிலவிய கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலை மற்றும் அரசியல் நெருக்கடி நிலை காரணமாக கடந்த இரண்டு வருடங்களிலும் கிராம சேவை அதிகாரிகள் வீடு வீடாக சென்று வாக்காளர்களின் தகவல்களை திரட்டும் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இம்முறை கிராம சேவை அதிகாரிகள் வீடு வீடாக சென்று தரவுகளை திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த ஆனைக்குழு தெரிவித்துள்ளது. அவ்வாறு கிராம சேவை அதிகாரிகள்

06



சுங்க பிரிவில் நிலவும் நெருக்கடி

# தவறுகள் இடம்பெறுமானால் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானம்

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுங்கப் பிரிவில் நிலவும் நெருக்கடிகளுக்கு அதன் பின்புலத்தில் முன்னெடுக்கப்படும் வேறு வேலைத் திட்டங்களே காரணம் என

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர்,

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் கொள்கலன்கள் மூன்று அடிப்படையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. அதேபோன்று கொள்கலன்களை துறைமுகத்திலிருந்து விடுவிக்கும் நடவடிக்கைகள் 24 மணித்தியாலங்களும் நடைபெற்று வருகின்றன.

தமிழ் ,சிங்கள புது வருடம் மற்றும் வெசாக் பண்டிகை விடுமுறைகளே இதற்கு காரணமாகும். அந்த வகையில் அங்கு புதிய நடைமுறைகள் காணப்படுவதாக அறிக்கைகள் மூலம் தெரியவருகிறது.

நெருக்கடிகள் நிலவுகின்ற வேளைகளில் கொள்கலன்கள் அடுத்த யார்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன அவ்வாறு அங்கிருந்து வெளியில் செல்வது சிறந்ததல்ல. அதன் மூலம் மோசடிகள் இடம்பெற இடமுண்டு. அதற்கு இடமளிக்க முடியாது. அவை தொடர்பில் நாம் ஆராய்ந்து வருகின்றோம். ஜனாதிபதியின் ஆலோசனைக்கிணங்க நாம் அறிக்கை யொன்றை அது தொடர்பில் தயாரித்து வருகின்றோம். இம்மாதம் 31ஆம்

06

# 'சுகாதார சுற்றுலா' மூலம் வருமானம் ஈட்ட இலங்கை திட்டம்

## ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க

சுகாதார சுற்றுலா மூலம் இலங்கைக்கு வருமானத்தை ஈட்டும் வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு கொழும்பு அறக்கட்டளையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நமது நாட்டின் அழகிய சூழலுடன், சுகாதார சுற்றுலாவை வருமானம் ஈட்டக்கூடிய ஆதாரமாக நாம் உருவாக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்து மற்றும் அவுஸ்ரேலியாவில் வாழும் பல இலங்கையர்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக மீண்டும் நாட்டுக்கு வருவது தொடர்பில் தான் அறிந்துள்ளதாகவும் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இதை ஒரு வணிக வாய்ப்பாக மாற்றி, நாட்டின் சுகாதார அமைப்பின் இந்த அம்சத்தை மேலும் மேம்படுத்த வேண்டும் என்று சாகல ரத்நாயக்க கூறியுள்ளார்.

# கம்பளை யுவதியின் ஜனாஸா நல்லடக்கம்

கம்பளையில் கொலை செய்யப்பட்ட 22 வயதுடைய யுவதியின் ஜனாஸா நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது. குறித்த பெண்ணின் சடலம் நேற்று முன்தினம் தோண்டி எடுக்கப்பட்ட நிலையில், பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதையடுத்து முறைப்படி குறித்த பெண்ணின் ஜனாஸா நேற்று மாலை 3 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மேலும், யுவதியின் மரணத்திற்கான காரணம், பிரேத பரிசோதனை அறிக்கை வெளிவந்த பின்பே அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று

*மணம் புரிந்து புதுவாழ்வின் பயனை அடையாமல் குடும்பம் நடத்த அஞ்சுகின்றவனின் செயலாற்றல் சிறப்பாக அமைவதில்லை.*

## போதைப்பொருளை முற்றாக ஒழிக்க வேண்டியது அவசியம்!

இன்றைய காலகட்டத்தில் தனிநபர் ஆரோக்கியப் பாதிப்புகளுக்கும் சமூக சீரழிவுகளுக்கும் போதைப்பொருட்கள் முக்கிய பங்காற்றுகின்றன. அவற்றின் அதிகரிப்புக்கும் அவை அதிக பங்களிப்பு நல்கியுள்ளன.

அந்த வகையில் களுத்துறையில் 16 வயது மதிக்கத்தக்க பாடசாலை மாணவியொருவர் அண்மையில் மர்மான முறையில் கொல்லப்பட்டுள்ளார். அதற்கு போதைப்பொருள் பாவனையாளரே காரணமென ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை கண்டி, கம்பளையில் 22 வயது மதிக்கத்தக்க யுவதியொருவர் படுகொலை செய்யப்பட்டு புதைத்து மறைக்கப்பட்டிருந்த சம்பவம் முழு நாட்டிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்தது. இப்படுகொலையை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான ஒருவரே மேற்கொண்டுள்ளார். அதனை அந்நபரே ஏற்றுக்கொண்டும் உள்ளார்.

பயங்கரமான நிலைமையை போதைப்பொருள் பாவனை ஏற்படுத்தியுள்ளது. கொலையையும் செய்ததோடு நின்று விடாது தாமே கொலை செய்து புதைத்ததாகவும் வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளக் கூடியளவுக்கு நிலைமை ஆபத்தாக மாறியுள்ளது. இது சாதாரணமாக நோக்கப்படக் கூடிய ஒரு விடயமல்ல.

போதைப்பொருள் பாவனையாளர்கள் மனிதப் படுகொலைகளை சர்வசாதாரணமாக மேற்கொள்ளக் கூடியளவுக்கு நிலைமை அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. குறித்த யுவதி வழமை போன்று தாம் பணிபுரியும் மருந்தகத்திற்கு சென்று கொண்டிருந்த போது, அவரை இடைமறித்த குறித்த சந்தேக நபர், தமக்கு பணம் தருமாறு கோரியுள்ளார். அந்த யுவதி தம்மிடம் பணமில்லை எனக்கூறி மறுக்கவே இம்மாபாதக செயலை இச்சந்தேக நபர் மேற்கொண்டுள்ளார். அதனை அவர் குரல் பதிவு மூலமும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இவ்விதமான குற்றச்செயல்களில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள ஏனையவர்களும் ஈடுபடலாம். இப்பாவனைக்கு அடிமையாகி உள்ளவர்கள் அவ்வாறான குற்றச்செயலில் ஈடுபட மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையே ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, சில மாதங்களுக்கு முன்னர் களுத்துறை அட்டுளுகமவில் யாதுமறியா அப்பாவி சிறுமியொருவர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான நபரொருவரால் படுகொலை செய்யப்பட்டிருந்தமையும் தெரிந்ததே.

இவ்வாறு நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அப்பாவிகள் கொல்லப்படுவதற்கும் காயங்களுக்கு உள்ளாவதற்கும் போதைப்பொருள் பாவனை முக்கிய காரணமாகியுள்ளது. அதனால் போதைப்பொருள் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தேவையும் அவசியமும் பரவலாக உணரப்பட்டுள்ளது. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி உள்ளவர்களால் ஏற்பட்டுள்ள சமூக, கலாசார சீரழிவுகள் அந்தளவுக்கு சமூகங்களுக்குள் ஆழ அகலமாக ஊடுவி வருகின்றன. போதைப்பொருள் பாவனைக்கு பணம் கிடைக்காத போது திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடக் கூடியவர்களாக இவர்கள் இருப்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளவர்கள் சமூக, கலாசார ரீதியிலான குற்றச்செயல்களில் ஈடுபடக் கூடியவர்களாக இருக்கின்ற அதேநேரம், ஆரோக்கிய ரீதியில் மிக மோசமான பாதிப்புகளுக்கும் தாக்கங்களுக்கும் உள்ளாகக் கூடியவர்களாகவும் உள்ளனர். இதனை மருத்துவத்துறையினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்படி, ஆரோக்கிய ரீதியாகவும சமூக, கலாசார ரீதியாகவும் பாதிப்புக்களையும் தாக்கங்களையும் ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றும் போதைப்பொருள் பாவனை சமூக சீரழிவுகளை ஏற்படுத்துவதற்கும் முக்கிய பங்காற்றுவது தெளிவாகிறது. இது பல்வேறு மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளன.

இந்நிலையில் போதைப்பொருட்கள் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அது தொடர்பிலான சட்ட ஏற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. தண்டனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இருந்தும் கூட போதைப்பொருள் பாவனையும் அதனை அடிப்படையாகக் கொண்ட குற்றங்களும் அதிகரித்த வண்ணமே உள்ளன. இன்றைய காலகட்டத்தில் போதைப்பொருள் குற்றங்கள் ஒரு தொற்றுநோய் போன்று வளர்ச்சி பெற்றுள்ளன. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்பதுதான் சமூக ஆர்வலர்களின் கருத்தாகும்.

அதனால் தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பது போன்று போதைப்பொருள் குற்றங்களையும் கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைக்க வேண்டும். அடிமட்ட கிராமம் முதல் வளர்ச்சி பெற்றுள்ள மாநகரங்கள் வரை இக்குற்றச்செயல் ஊடுருவிக் காணப்படுகின்றது. மக்களின் முழுமையான ஒத்துழைப்பும் ஆதரவும் இன்றி இக்குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவது முடியாத காரியம்.

ஆகவே சமூக சீரழிவுகளை ஒழித்துக் கட்டுவதிலும் போதைப்பொருள் பாவனையால் உடல் உள ரீதியில் தோற்றுவிக்கப்படும் பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ளவதிலும் அதிக சிரத்தை கொள்ள வேண்டும். அதுவே இன்றைய அவசரத் தேவையாக விளங்குகிறது. அதற்காக தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பது போன்று போதைப்பொருள் குற்றங்களைக் கட்டுப்படுத்தவும் ஒத்துழைப்பதும் ஆதரவளிப்பதும் இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# கடந்தகால அரசுகள் சர்வதேச உடன்படிக்கைகளை மீறியதே நாட்டின் மோசமான நிலைக்கு காரணம்

**'இலங்கை சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும், சர்வதேச ஒப்பந்தங்களுக்கு அமைய வேலைத் திட்டத்தை தயாரித்து ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் அந்த உடன்படிக்கைகளை புறக்கணித்து தன்னிச்சையாக செயல்பட்டு, அதிகாரிகளுக்கு தவறான அறிவிப்புகளை வழங்கியமையினாலேயே எமது நாடு தற்போதைய மோசமான நிலைமையை எதிர்நோக்கியுள்ளது'.**



## மீப்பேயில் தெற்காசிய ஆசிரியர் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் புதிய தங்குமிட வளாக திறப்புவிழாவில் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன



போக்குவரத்துத்துறை பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மீப்பேயில் அமைந்துள்ள தெற்காசிய ஆசிரியர் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் (*South Asian center for teacher Development*) புதிய தங்குமிட வளாகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்ததாவது:

"கல்வி தொடர்பாக சர்வதேச மாநாடுகள் மற்றும் சம்மேளனங்களில் எமது நாட்டை பிரதிநிதித்துவம் செய்து நாம் மிகவும் தீவிரமாக யுனெஸ்கோ நிறுவன நடவடிக்கைகளுக்கு பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். அவ்வாறே தெற்காசியாவில் ஆசிரியர்களுக்கான பயிற்சி மத்திய நிலையம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதற்காக அன்றைய யுனெஸ்கோ அமைப்பின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் பெரும் பங்களிப்பை வழங்கினார்கள்.



யுனெஸ்கோவின் நிறைவேற்றுக் குழு இந்த அறிக்கையை முன்வைத்ததன் பின்னர் அப்போதைய சுவிட்சர்லாந்தின் இலங்கைக்கான தூதுவர் மற்றும் எம்மால் இந்த ஆசிரியருக்கான பயிற்சி மத்திய நிலையத்தை இலங்கைக்கு பெற்றுக் கொள்வதற்காக பெரும் போராட்டத்தை மேற்கொள்ள நேரிட்டது. ஏனைய ஆசிய நாடுகளின் ஒப்புதலை இதற்காக பெற்றுக் கொள்வதற்காக தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடல்களையும் நடத்த நேரிட்டது. அதில் இந்தியா, பங்காளதேசம் உள்ளிட்ட ஏனைய நாடுகளின் ஒப்புதலுடன் இலங்கைக்கு இந்த ஆசிரியர் பயிற்சி மத்திய நிலையம் பெற்றுக் கொள்வதற்கான யோசனை முன் வைக்கப்பட்டது.

அதற்காக வாக்கெடுப்பு நடைபெற்ற வேளையில் மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக தங்களுடைய வாக்கினை அளித்தன. ஒரு சந்தர்ப்பத்தில் இந்த நிறுவனத்தின் வரலாறு எழுதப்படும் சந்தர்ப்பத்தில் இந்த உண்மைகள் அதில் உள்ளடக்கப்படும் என நான் நம்புகிறேன்.

அதன் பின்னர் ஆட்சி மாறியவுடன் இந்தத் திட்டம் புறக்கணிக்கப்பட்டது. சர்வதேசரீதியாக ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளித்து திட்டங்களை தயாரித்ததன் பின்னர் ஆட்சிக்கு வரும் மற்றைய அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தை கருத்தில் கொள்ளாமல் நடவடிக்கை எடுப்பது, தன்னிச்சையாக நடவடிக்கைகளை மேற்கொள்வது, அதிகாரிகளுக்கு தவறான ஆலோசனைகளை பெற்றுக் கொடுப்பது போன்றவை சுதந்திரம் பெற்று எழுபத்தைந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் எமது நாடு இவ்வாறான நிலைமைக்கு முகம்கொடுப்பதற்கு காரணங்களாக அமைந்துள்ளன என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நான் உயர் கல்வி அமைச்சராக பணியாற்றும் போது யுனெஸ்கோ அமைப்புக்கு இது தொடர்பாக பதிலளிக்கவும் நேரிட்டது. அவ்வேளையில் ஏற்பட்டிருந்த நிலைமையை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்களிடம் உறுதியளித்தோம்.

தற்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவினால் மீண்டும் இந்த நிறுவனம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு அதனை தெற்காசியாவின் ஆசிரியர்களுக்கு சேவையை மேற்கொள்ள கூடிய வகையில் விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கையை எடுத்ததையிட்டு எனது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மூலம் எதிர்காலத்தில் எமது நாட்டில் மாத்திரமல்ல முழு உலகுக்கும் எடுத்துக்காட்டாக ஆசிரியர் தலைமுறையை முன்னுதாரணமாக உருவாக்க முடியும் என நம்புகிறேன்".

இவ்வாறு அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டார்.

## 'இலங்கை சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும் நிலைமை மாறவில்லை'

பிரதமர் தினேஷ் குணவர்தன, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் *Tareq Md Ariful Islam*, கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

தமிழில்
வி. ஆர். வயலட்



# காத்தான்குடி மில்லத் உயர்தர மகளிர் பாடசாலையில் நூற்றாண்டை நோக்கிய பயணத்தின் ஒன்றுகூடல்

காத்தான்குடி மில்லத் மகளிர் உயர்தர பாடசாலையில் நூற்றாண்டை நோக்கிய பயணத்தில் பழைய மாணவிகளின் ஒன்றுகூடல் சமீபத்தில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது

பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் அதிபர் திருமதி ஜெசிமா முசம்மில் தலைமையில் நடைபெற்ற இந்த ஒன்றுகூடலில் பாடசாலையில் கடமையாற்றிய முன்னாள் அதிபர் திருமதி உதுமா சாஹிப் மற்றும் பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்கள், பாடசாலையின் பழைய மாணவிகள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், பாடசாலையின் ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

'சலாம் மில்லத் தியன்ஸ்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற பாடசாலையின் பழைய மாணவிகளின் ஒன்றுகூடலில் காலையில் பழைய மாணவிகள் வரவேற்கப்பட்டதுடன், காலை கூட்டம் நடைபெற்றது.

காலைக் கூட்டத்துக்கு பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி உதுமா சாஹிப் தலைமை வகித்தார்.

பின்னர் பழைய மாணவிகள் தாம் பாடசாலையில் முன்னர் கல்வி கற்ற வகுப்புகளுக்குச் சென்று தமது அப்போதைய வகுப்பை நினைவு மீட்டுக் கொண்டனர். இதன் போது அவர்களுக்கு அன்று கற்பித்த ஆசிரியர்கள் அங்கு அழைக்கப்பட்டு பழைய சம்பவங்களை நினைவுபடுத்திக் கொண்டனர்.






இதையடுத்து பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் ஒன்றுகூடிய பழைய மாணவிகள் முன்னிலையில் தற்போதைய அதிபர் திருமதி ஜெசிமா முசம்மில், பாடசாலையில் தற்போதைய நிலைமை, கல்வி அடைவுமட்டத்தின் முன்னேற்றம், எதிர்காலத்தின் தேவைப்பாடுகள் போன்ற விபரங்களை எடுத்துக் கூறினார். அதேசமயம் எதிர்காலத்தில் பாடசாலையின் முன்னேற்றத்திற்காக பழைய மாணவிகளின் ஒத்துழைப்புக்களும் உதவியும் தேவைப்படுவதாகவும் அதிபர் குறிப்பிட்டார்.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வின்போது இறுதி நிகழ்வாக பழைய மாணவிகளின் மாணவர் மன்ற நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

எம்.எஸ்.எம். நூர்தீன்
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம் ஸ்தாபிக்கப்பட்டு 25 வருடங்கள் நிறைவு

மட்டக்களப்பு மண்ணில் தடம்பதித்த பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டங்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகி செவ்வாய்க்கிழமை (16) வரை நடைபெறுகின்றன.

மட்டக்களப்பு பாரதிபுரம், 2 ஆம் குறுக்கில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தை தலமையகமாகக் கொண்டு மானிட வாழ்வியலுக்கான நேரிய சிந்தனை, மனஅழுத்த முகாமைத்துவம், தியான பாடநெறிகள், ஆன்மீன எழுச்சி ஊர்வலங்கள் போன்றவை நடத்தப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், இராணுவத்தினர், பொலிஸ் துறையினர், அரச உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் மற்றும் சட்ட நிபுணர்கள் இந்நிலையத்தில் ஆன்மிகப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

'சிறந்ததொரு உலகை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளில் பிரம்ம குமாரிகள் உலக பல்கலைக்கழகமானது ஓர் அரச சார்பற்ற நிறுவனமாக ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து UNICEF இல் ஆலோசகர் அந்தஸ்தைப் பெற்றுள்ளதோடு, ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானத் தூதர் விருதுகளையும் பெற்றுள்ளது.

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலயங்கள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 37/1998 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன், இதன் செயற்பாடுகள் இன, மத, மொழி பேதம் கடந்த இலவசமான சேவையாகும்.

வெள்ளிவிழாக் கொண்டாட்ட நிகழ்வுகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள தவயோகினி தீதீ. மீரா தலைமையில் நடைபெறுகின்றன.

கடந்த சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு அலங்கார ஆன்மீக விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பு காந்தி பூங்காவிலிருந்து ஆரம்பமாகி நகரின் முக்கிய வீதிகள் வளியாக வலம் வந்து நிலயத்தைச் சென்றடைந்தது.

## மட்டக்களப்பில் நான்கு தினங்கள் வெள்ளிவிழா கொண்டாட்டம்

25 வருடங்கள் பிரம்மகுமாரி நிலையத்தில் ஆன்மீக சேவையைப் பூர்த்தி செய்த பணியாளர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நினைவுச் சின்னம் வழங்கியும் , பொன்னாடை போர்த்தியும் மகுடம் சூட்டியும் கௌரவிக்கப்பட்டனர்.



இந்நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் வி.கனகசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். நேற்று மாலை முக்கிய பிரமுவர்களுக்கான ஆன்மீகப் பயிற்சிகள் நடைபெற்றன.

இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தாய்மார்களுக்கான நிகழ்வு நடைபெறும். நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு தந்தையர்களுக்கான பயிற்சி நிகழ்வு மட்டக்களப்பு நகர இராஜயோக நிலையத்தில் நடைபெறும்.




இலங்கையில் பிரம்மகுமாரிகள் அமைப்பிற்கு 2009 இல் முதன் முதலாக மட்டக்களப்பு பாரதிபுரத்தில் நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான காணி அரசினால் வழங்கப்பட்டது. 300 பேர் தங்கக்கூடிய 3 மாடிக் கட்டடம் 2011 நவம்பர் 9 ஆம் திகதி பிரம்குமாரிகள் அமைப்பின் உலக ஆன்மீக பல்கலைக்கழகத்தின் ஆசிய ஒருங்கிணைப்பாளர் தீதீ டொக்டர் நிர்மலா கஜாரியா ம ற்றும் அப்போதைய கிழக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

2011 இல் ஐக்கிய நாடுகள் சபையினால் அமுல்படுத்தப்பட்ட வீதி ஒழுங்கு பாதுகாப்புத் திட்டத்தை மட்டக்களப்பு நிலையம் தலைமை தாங்கி நடத்தியது. 2012 இல் மட்டக்களப்பு இந்து க் கல்லூரி மைதானத்தில் 12 ஜோதிலிங்க தரிசனமும் , இரத பவனியும் மற்றும் ஆன்மீக இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

2013 இல் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் பாசிக்குடாவில் ஆன்மீக கலைக்கூடத்திற்கான அடிக்கல் நடப்பட்டு, 2014 இல் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்தில் பௌர்ணமி தினங்களில் உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் 500 இற்கு மேற்பட்டோர் பார்வையிட்டு ஆன்மீக விளக்கங்களைப் பெறுகின்றனர்.

2017 இல் மொனராகலை மாவட்டத்தில் சிறிகலை,குமாரவத்தை, மரகலை, அலியாவத்தை போகாலயம், நக்கலை, பராவிலை, தேங்காய்மலை, பன்சலவத்தை மற்றும் வெலியாய ஆகிய இடங்களுக்கும் சேவைகள் விஸ்தரிக்கப்படன. மொனராகலையில் ஆரம்பிக்கப்பட்ட இச்சேவையானது 2022 இல் கதிர்காமம் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

2018 இல் கல்லடியில் அங்கத்துவ மாணவர்களுக்கு ஆன்மீகக் கல்வியுடன் கூடிய வாழ்க்கைக்கான வழிகாட்டலுடன் பெண் மாணவர்களுக்காக 'சக்தி பவன்' மற்றும் ஆண்மாணவர்களுக்காக 'பாண்டவ பவன்' எனும் பெயர்களில் பெயரில் தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.


தவயோகினி தீதீ.மீரா

மலையகப் பிரதேசங்களான பதுளை, வெலிமடை, நுவரெலியா, மஸ்கெலியா, பொலநறுவை சொறிவில் பிரதேசத்திலும் சேவை நிலயங்கள் அரம்பிக்கப்பட்டுள்ளன. 2021 இல் மஸ்கெலியா மல்லிகைப்பூ மற்றும் நுவரெலியா டன்சினன் ஆகிய இடங்களில் நிரந்தர புதிய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாப்பயணிகள் மற்றும் பக்தர்களின் நலன் கருதி சிவனொளிபாத அடிவாரம் லக்ஷபாணவில் கண்காட்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. 2023 இல் ஹட்டன் நகரில் ஜோதிலிங்க இரதபவனியும் ஆன்மீகக் கண்காட்சியும் நடைபெற்றன.

இந்த அமைப்பானது 30 உபநிலயங்களையும் மற்றும் 1000 இற்கும் மேற்பட்ட நிலையான ஆன்மீக உறுப்பினங்களையும் கொண்டுள்ளதோடு இந்தியா ராஜஸ்தானில் உள்ள தலமையகத்திற்கு இதுவரை 120 முக்கிய பிரமுகர்கள் சென்று பயிற்சி பெற்று நாடு திரும்பியுள்ளனர்.

மட்டக்களப்பு பாரதிபுரம் பிரதான வீதியில் அமைந்துள்ள சகோதரி மலர் அவர்களின் வீட்டில் ஆன்மீக சேவைகள் ஆரம்பமாகின. பின்பு 2022 இல் நொச்சிமுனை, 2005 இல் மாமாங்கம், 2006 இல் சின்னஉப்போடை, 2007 இல் உபநிலையங்களாக குருக்கள்மடம் மற்றும் ஏறாவூர் ஆகிய இடங்களில் பிரம்மகுமாரிகள் நிலயங்கள் அமைக்கப்பட்டு மனித வாழ்வியலை மேம்படுத்தும் சேவைகள் நடைபெற்றன.

2005 இல் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டதோடு, 2010 இல் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு நிலயங்களில் இருந்தவர்களுக்கு ஆன்மீக பாடநெறிகள் கற்பிக்கப்பட்டன.

சிவனை முன்னிறுத்தி சிவலிங்க தரிசனம் செய்துவரும் இந்நிலையமானது 2008 இல் சகோதரி மாருதியின் முயற்சியினால் மஹாசிவராத்திரியை முன்னிட்டு மட்டக்களப்பில் சிவலிங்க தரிசனம், இரத பவனி மற்றும் 5 ஈச்சரங்களின் மாதிரி உருவக் கண்காட்சி ஆகியவற்றை நடத்தியது.

2009 இல் கரவெட்டி, கொக்கட்டிச்சோலை,களுதாவளை, கல்குடா, வாழைச்சேனை, வாகரை, ஈச்சிலம்பற்று மற்றும் கிரான்குளம் ஆகிய இடங்களில் உபநிலையங்கள் அமைக்கப்பட்டதனால், பிரம்மகுமாரிகள் அமைப்பில் அதிகமான ஆன்மீகக் குடும்பங்கள் இணைந்து வாழ்வியலுக்கான பயிற்சிகளைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



சிவம் பாக்கியநாதன்
மட்டக்களப்பு விஷேட நிருபர்

# அநேக வியாதிகளை தீர்க்கும் அருமருந்தான வெள்ளறுகு

தற்காலத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற நோய்கள் கணக்கிலடங்காதவை. அதைவிட மேலைத்தேய மருந்துகளை தொடர்ச்சியாக உள்ளெடுப்பதால் அதிக பக்கவிளைவுகள் ஏற்படும் என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நம் முன்னோர் கூறியபடி நோய் வந்தபின் சிகிச்சை செய்வதனை விட நோய் வராமல் தடுப்பதே மிக முக்கியமான விடயமாகும்.

இவ்வகையான தடுப்பு முறைகளில் மூலிகைகளின் பாவனை இன்றியமையாத ஒன்றாகும்.

சித்தமருத்துவத்தில் 'வேர் பாரு, தளை பாரு, மிஞ்சினக்கால் மெல்ல மெல்ல பஸ்பம், செந்தூரம் பாரு' என கூறுவார்கள். இவ்வகையில் வெள்ளறுகு மூலிகையானது மனிதனின் ஆரோக்கிய வாழ்வில் பெரும் பங்கு வகிக்கிறது. சாதாரணமாக மக்களால் பயன்படுத்தப்படும் அறுகு அல்லது பாலறுகு போலவே இவ் வெள்ளறுகும் பிள்ளையாருக்கு மிகவும் உகந்தது. பிள்ளையார் கதை காலங்களில் வெள்ளறுகு மாலை பிள்ளையாருக்கு அணிவிக்கப்படுவதை அவதானிக்கலாம்.

ஐப்பசி தொடக்கம் மார்கழி மாதங்களில் வடமேற்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளின் ஈரலிப்பான, நீர்ச்சதுப்புள்ள நிலங்கள், மணல் பாங்கான கடற்கரை, புற்கள் நிறைந்த தரிசுநிலப் பகுதிகள் மற்றும் வயல் பகுதிகளில் இம்மூலிகையானது அதிகளவில் பரவலாகக் காணப்படும். இது மழைகாலத்தில் வளரும் மூலிகையாவதுடன் கிட்டத்தட்ட 40 சென்ரிமீற்றர் உயரத்திற்கு மேல் வளரக்கூடியது. இதன் இலை, பூ, பழம், தண்டு, வேர் ஆகிய பகுதிகளும் மருத்துவ குணங்கள் நிறைந்தவை.



இது *Enicostemma littorale Blume* எனும் தாவரவியற் பெயரைக் கொண்டிருப்பதனுடன் *Gentianaceae* என்ற தாவரக் குடும்பத்தை சார்ந்ததாகவும் காணப்படுகின்றது. மேலும் இது வல்லாரி என்றும் ஆங்கிலத்தில் *Indian gentian* அல்லது *White head* என்றும் அழைக்கப்படுகின்றது. நான்கு கோண வடிவமான தண்டினையும், ஈட்டி வடிவமான உருண்டை வடிவமான வெளிறிய இலைகளை மாற்றடுக்கில் கொண்ட கணுக்களில் 5 இதழ்களுடன் கூடிய வெள்ளை நிற பூக்களையும் கொண்ட செடிவகையைச் சார்ந்த வெள்ளறுகானது காய்ச்சல், வயிற்றுப்புழு போன்ற நிலைமைகளில் பயன்படுத்தப்படுகின்றது.

அத்துடன் பசியை அதிகரிக்கவும், தாது பலத்தை பெருக்கவும், உடலிற்கு வலிமையை உண்டாக்கவும், கருப்பை கோளாறுகளுக்கும் உரிய மருந்தாகவும் பயன்படுகின்றது. சித்த மருத்துவத்தில் வெள்ளறுகானது சூரணம் (பொடி அல்லது தூள்), குடிநீர், பஸ்பம் போன்ற வகைகளில் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றது.

வெள்ளறுகு மூலிகைகளை வேருடன் பிடுங்கி அவற்றை நீரில் நன்கு கழுவி, பின் நிழலில் உலர்த்தி அதனை நுண்ணிய பொடியாக்கி பக்குவமாக காற்றுப்புகாத குப்பியில் அடைத்து வைத்துக் கொண்டு ஒரு தேக்கரண்டி வீதம் தேனில் குழைத்து உள்ளெடுத்து வர இரத்தம் சுத்தியாகும். வயிற்றுப் பொருமல், வயிற்றுப்புண், குடல்புண், வாத நோய்கள், மூட்டு வியாதிகள், கருப்பைக் கோளாறுகள், நரம்புத் தளர்ச்சி, தோல் வியாதிகள் தீரும். இரவில் இரண்டு தேக்கரண்டி கொதித்தாறிய நீரில் உள்ளெடுக்க மலச்சிக்கல் இலகுவில் தணியும்.

வெள்ளறுகு சமூலத்தை ஒரு கைபிடி எடுத்து 8 கோப்பை நீரிலிட்டு ஒரு கோப்பை குடிநீராக்கி 50–100 மில்லிலீற்றர் அருந்திவர நீர்ச்சுருக்கு, வயிற்றுப்புண், குடல் புண், சொறி, சிரங்கு, வெட்டை மற்றும் மூட்டுவாதம் குணமாகும். தேவையான அளவு வெள்ளறுகுடன் சிறிதளவு வெண்மிளகு சேர்த்து நன்கு அரைத்து நீரில் கலந்து வடிகட்டி பசுவெண்ணெய் சேர்த்து அருந்திவர உடல்சூடு தணியும். பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் கோளாறுகளை தவிர்க்க, வெள்ளறுகு சமமூலத்தை நன்கு அரைத்து விழுதாக்கி எலுமிச்சம் பழ அளவு மாதவிடாய் ஏற்பட்ட முதல் 3 நாட்களுக்கு உள்ளுக்கு கொடுத்து வர நிவாரணம் கிடைக்கும். வெள்ளறுகை அரைத்து கால் ஆணிக்கூடு மீது வைத்து பத்து போல் கட்டிவர நாளடைவில் குணம் ஏற்படும்.

நீரிழிவு நோய்களில் பாவிக்கப்படும் மூலிகைகளில் இதுவும் பிரதானமாக அடங்குகிறது. அதிக ஊட்டச்சத்துகளை கொண்டிருப்பதால் நாளாந்தம் இரண்டு வெள்ளறுகு இலைகளை நீரிழிவு நோயாளிகள் உள்ளெடுக்கலாம் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. வெள்ளறுகிற்கு நீரிழிவு நோயில் இரத்தத்தில் குளுக்கோசின் அளவை பேணும் ஆற்றல் இருப்பது பல ஆய்வுகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் வெள்ளறுகு இலைக்குடிநீர் மற்றும் தூள் ஆகியவற்றிற்கு இன்சுலின் அளவைக் கட்டுப்படுத்துதல், இரத்தத்தில் கொழுப்பின் அளவை பேணும் ஆற்றல், ஈரலை பலப்படுத்துதல், வலி நிவாரணி, நீரிழிவு நோயால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களான ந ரம்புத் தளர்ச்சி, சிறுநீரகப் பாதிப்பு போன்றன ஏற்படலை தடுக்கும் ஆற்றல், புழுக்கொல்லி மற்றும் சுரத்தை அகற்றல் போன்ற செயற்பாடுகள் இருப்பதும் ஆய்வுகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வைத்திய கலாநிதி
வினோதா சண்முகராஜா,
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவ அலகு
கலாநிதி
கௌரி ராஜ்குமார்,
சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை,
விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

# பேராசான் நித்தியின் பவளவிழாவில் பங்கெடுக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை பெரும் பாக்கியம்

பேராசான் நித்தியின் பவளவிழாவில் பங்கெடுக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை பெரும் பாக்கியமாகும். அறிஞர்களும் கலைஞர்களும் நம் மண்ணில் இருந்தும் தமிழ்நாடு, நோர்வே ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, கனடா போன்ற நாடுகளில் இருந்தும் இப்பவள விழாவுக்கு நேரில் வந்தமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

அகிலம் பூராவும் பரவி வாழும் எம் தமிழ் உறவுகளிடையே இருந்து இத்தனை கலை, இலக்கிய, கல்வி, அறிவு, சமூகத் தொண்டு, ஊடக மேநிலையாளர்கள் மனமுவந்து வந்து திரண்ட ஒரு பெருவிழாவில் கலந்து கொண்டனர்.

அதே போல நான் நயக்கும் கவிஞரும் எழுத்தாளருமான மு புஷ்பராஜனை என்றாவது நேரில் மீளப்பார்க்கும் வாய்ப்புக் கிடைக்குமா என்றும் நான் ஏங்கியதுண்டு. நித்தியின் பவளவிழாவில் கலந்து சிறப்பிக்க அந்தப் பெருமகன் கனடாவில் இருந்து லண்டன் வந்தமை எனது ஏக்கத்தைத் தீர்த்தது.

இன்று, ஐரோப்பிய புலம்பெயர் தளத்தில் நாடக – ஊடக கலைத் தளங்களில் தங்கள் ஆளுமைச் செழுமையை அருமையாக பதித்துக் கொண்டிருக்கும் சாம் பிரதீபன் – ராஜித்தா தம்பதியரின் மனமுவந்த பங்களிப்பு சிறப்புக்குரியதாகும்.

நித்தியின் பவளவிழாவின் நிகழ்ச்சிகளுக்கு அறிஞர் செ சிறிக்கந்தராசா தலைமை தாங்கினார். இலங்கையில் அரச சட்ட வரைபுத் திணைக்கள தமிழ்ப் பிரிவின் பிரதி ஆணையாளராக நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் அவரை இலங்கையில் பார்த்துப் பழகியிருக்கிறேன். இலங்கையில் அவர் தொடர்ந்தும் பணியில் இருந்திருந்தால் நீதித்துறையில் உச்சபதவிக்குச் சென்றிருப்பார்.



புலத்தில் தமிழ்த் தொண்டிலும் மனிதநேயத் தொண்டிலும் நித்தியோடு கூடிப் பயணம் புரியும் பத்மநாப ஐயர், ஓவியர் கே. கே. ராஜா, நிழற்பட ஓவியர் சாந்தன், சமூக சிந்தனை ஒருங்கிணைப்புத் தொண்டர் பௌஸர் ஆகியோரை விழா அரங்கம் கௌரவிக்கும் வகையில் அவ்வப்போது முதன்மைப்படுத்தியது.

நித்தியின் பவளவிழாவுக்கு நேரில் வந்து பங்கெடுத்து, தமிழினத்தை கலை வழி நின்று ஒன்றுபடுத்தும் அவரின் பங்களிப்புக்காக நன்றி கூற வேண்டும்.

வீடு மீண்ட பின், விழா நினைவு மீட்டலே நெஞ்சை நிறைத்திருந்தது.


ஈழக்கூத்தன் ஏ.சி. தாசீசியஸ்

# வாடிக்கையாளரால் தவறுதலாக விட்டுச்செல்லப்பட்ட பொருட்களை மீட்பதற்கு Uber ஆரம்பித்துள்ள செயலி

இலங்கையின் ஓட்டுநர் உதவி வழங்குநர் செயலியான Uber, தமது வாடிக்கையாளர்களினால் தவறுதலாக விட்டுச் செல்லப்பட்ட பொருட்களின் விபரத்தை அதன் *Lost and Found Index* இன் 2023 பதிப்பில் பகிர்ந்துள்ளது. கடந்த ஆண்டு *Ubers* இல் பயணிகள் விட்டுச் சென்ற பொதுவான மற்றும் தனித்துவமான பொருட்களை பற்றிய விபரங்களையும், பயணிகள் அதிகம் மறக்கும் நேரங்களையும் இந்த வருடாந்தப் பட்டியல் பகிர்ந்து கொள்கிறது.

பலதரப்பட்ட பொருட்களை இலங்கையர்கள் தாம் பயணித்த *Uber* வாகனங்களில் விட்டுச் சென்றுள்ளனர். தரவு போக்கின் (*data trend*) உதவியுடன், *Uber* இன் *Lost and Found Index* ஆனது, பயணிகள் தமது பொருட்களை *Uber* வாகனத்தில் மறந்து விட்டு சென்றால், ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் எவ்வாறு மீளவும் பெற்றுக்கொள்வது என்பது தொடர்பாக வேடிக்கையான ஆனால் பயனுள்ள முறையில் கற்பிப்பதை *Lost and Found Index* நோக்கமாகக் கொண்டுள்ளது.

கைவிடப்பட்டுச் செல்லப்பட்ட பொருட்களின் பட்டியல் குறித்து கருத்து தெரிவித்த *Uber* இன் *Rides* இற்கான இலங்கைக்கான முகாமையாளர் தனுஷிகா சிவநாதன், “உங்கள் கடைசி சவாரியின்போது ஒரு முக்கியமான அல்லது நாம் பொக்கிஷமாகக் கருதும் பொருளை விட்டுவிட்டால் ஏற்படும் பீதியை நாம் அனைவரும் அனுபவித்துள்ளோம். எமது பயணிகள் *Uber* உடன் எப்போதும் தொடர்பு கொண்டு தங்கள் உடைமைகளை மீட்டெடுக்க முயற்சி செய்யலாம். விட்டுச் சென்ற பொருளை மீட்டெடுப்பதற்கான கோரிக்கையை எழுப்ப *Uber* செயலியில் பின்பற்ற வேண்டிய எளிய வழிமுறைகள் உள்ளன" என்றார்.



தொலைந்து போன பொருட்களை மீளப்பெற விரும்பும் பயணிகளுக்கான விரைவான வழிகாட்டி இதோ:

- *Menu* சின்னத்தை அழுத்துங்கள்.
- *Your Trips*என்பதை அழுத்தி, உங்கள் பொருளை விட்டுச் சென்ற பயணத்தைத் தேர்ந்தெடுக்கவும்.
- *Report an issue with this trip* என்பதை அழுத்தவும்.
- *I lost an item* என்பதை அழுத்தவும்.
- *Contact my driver about a lost item* என்பதை அழுத்தவும்.
- கீழே சென்று, உங்களை தொடர்பு கொள்ள விரும்பும் தொலைபேசி எண்ணை உள்ளிடவும். *'Submit'* ஐ அழுத்தவும்.
- நீங்கள் தொலைத்தது உங்கள் கையடக்கத் தொலைபேசியாக இருந்தால், மேலே உங்கள் இலக்கத்திற்குப்பதிலாக உங்கள் நண்பரின் தொலைபேசி இலக்கத்தை உள்ளிடவும்
- உங்கள் தொலைபேசிக்கு ஒரு அழைப்பு வரும். உங்கள் ஓட்டுனரின் கையடக்கத் தொலைபேசி எண்ணுடன் நீங்கள் நேரடியாக இணைவீர்கள். தனியுரிமையைப் பாதுகாக்கும் நோக்குடன் பயணி மற்றும் ஓட்டுநர் இலக்கங்களை அநாமதேயமாக நாம் வைத்திருப்போம்.
- உங்கள் ஓட்டுநர் உங்கள் பொருளைக் கண்டுபிடித்ததை உறுதிசெய்தால், அதனை நீங்கள் பெறுவதற்கு, இருவரும் கலந்து பேசி ஒருவருக்கொருவர் வசதியான நேரத்தையும் இடத்தையும் முடிவு செய்யுங்கள்.
- உங்களால் ஓட்டுனருடன் இணைய முடியாவிட்டால், இழப்பு தொடர்பான புகாரை அளிக்க *'inapp support'* இனை அணுகவும். *Uber* இன் உதவி குழு உங்களுக்கான உதவிகளை வழங்க முன்வரும். ஓட்டுனரை சந்திக்க உங்களுக்கு வசதியான நேரத்தை ஒதுக்க முடியவில்லை எனில், உங்கள் பொருளை மீட்டெடுக்க *Uber Connect* ஐப் பயன்படுத்தவும்.

# இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜூன் மாதம் அமெரிக்கா விஜயம்; வெள்ளைமாளிகை தகவல்

இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஜூன் மாதம் அமெரிக்கா சென்று அமரிக்க அதிபர் ஜோ பைடனை வெள்ளை மாளிகையில் சந்திக்க இருக்கிறார்.

இது குறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், " அமெரிக்கா வருகைதரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, நம் அதிபர் ஜோ பைடன் ஜூன் 22ஆம் திகதியன்று விருந்து அளிக்கிறார். இதில் அதிபரின் மனைவி ஜில் பைடனும் கலந்து கொள்கிறார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்க பயணம் குறித்து பல மாதங்களாக திட்டங்கள் இருந்தது.

இந்நிலையில் அது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு தற்போது வெளியாகியுள்ளது. இந்த சந்திப்பு மூலம் இருநாட்டு நல்லுறவை பேணப்படும் என்று வெள்ளை மாளிகை செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

அதேபோல், பிரதமர் மோடியின் இந்தப் பயணம், சுதந்திரமான, திறந்த, வளமான மற்றும் பாதுகாப்பான இந்தோபசிபிக்கிற்கான இரு நாடுகளின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் மற்றும் பாதுகாப்பு, எரிசக்தி மற்றும் விண்வெளி உள்ளிட்ட துறைகளில் உள்ள கூட்டாண்மையை வலுப்படுத்தும் என்றும் வெள்ளை மாளிகை தரப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே, "இரு நாடுகளுக்கு இடையேயான தொழில்நுட்பம், வர்த்தகம், தொழில், கல்வி, ஆராய்ச்சி, எரிசக்தி, பாதுகாப்பு, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வலுவான இருதரப்பு ஒத்துழைப்பை மறுபரிசீலனை செய்ய கிடைக்கும். இந்தோபசிபிக் மற்றும் குவாட் ஈடுபாட்டை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளை பற்றியும் இருநாட்டு தலைவர்களும் விவாதிப்பார்கள்" என்று இந்திய வெளியுறவு அமைச்சு (MEA) தெரிவித்துள்ளது.

பைடன் அமெரிக்க அதிபராக பதவியேற்ற பின் பிரதமர் மோடி முதல் முறையாக வெள்ளை மாளிகை செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




## தங்கத்தின் விலையில்...

(14) காலை ஒரு பவுண் "22 கரட்" தங்கத்தின் விலை 158,600 ரூபாவாக குறைந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை (12) 161,600 ரூபாவாக பதிவாகி இருந்தது. இதேவேளை, வெள்ளிக்கிழமை 174,000 ரூபாவாக இருந்த ஒரு பவுன் "24 கரட்" தங்கத்தின் விலை தற்போது ரூ. 171,500 ஆக குறைந்துள்ளதாக கொழும்பு செட்டியர் தெரு தங்க சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அவுஸ்திரேலிய அரசினால்...

விமானப்படையினரின் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்தும் வகையில் அவுஸ்திரேலியா அரசாங்கம் மேற்படி விமானத்தை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. அவுஸ்திரேலிய விமானப் படையினருக்கு சொந்தமான கே. ஏ 350 கிங் எயார் என்ற விமானமே இவ்வாறு அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்தது.

## தையிட்டி விகாரைக்கு...

தொனிப்பொருளில் இப்பேரணி தையிட்டி சந்தியிலிருந்து விகாரை வரை முன்னெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பூஜை வழிபாடுகள் மற்றும் மக்களுக்கான மதிய அன்னதானமும் இடம்பெற்றது.

இப்பேரணியில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் விகாரைக்கு ஆதரவு தெரிவித்து பதாகைகளை தாங்கியவாறு கலந்து கொண்டனர்.

இதன்போது யாழ்ப்பாண சிவில் சமூக நிலைய தலைவர் அருண் சித்தார்த் கருத்துரைக்கையில், இலங்கையில் அனைவருக்கும் அனைத்து மதங்களையும் மதிக்கின்ற மத வழிபாடுகளை மேற்கொள்ளும் சுதந்திரம் உண்டு. தையிட்டி விகாரை யாழ்ப்பாண மாவட்ட வரைபடத்தில் 1959ஆம் ஆண்டு விகாரைக்குரிய பகுதி என குறிக்கப்பட்டுள்ள நிலமாகும்.

இது பொதுமக்களின் காணிகள் அல்ல. விகாரை அழிவடைந்த காலத்தில் பொதுமக்கள் அக்காணியை கையகப்படுத்தி, தமது குடியிருப்பினை மேற்கொண்டிருந்தனர். ஆனாலும், அது விகாரைக்குரிய நிலமாகவே காணப்படுகிறது.

பொதுமக்களின் காணியில் விகாரை அமைக்கப்பட்டால், அவர்கள் நீதிமன்றத்தினை நாட முடியும். ஒவ்வொரு மதத்தையும் இனத்தையும் கூறி இனவாதம் மற்றும் மதவாதத்தினை எவரும் தூண்ட முயற்சிக்க வேண்டாம் என தெரிவித்துள்ளார்.

## புதையல் தோண்டிய ...

பேராற்றினை அண்மித்த பகுதியில் தொல்பொருள் திணைக்களத்திற்கு உரித்தான இடத்தில் புதையல் தோண்டப்படுவதாக ஒட்டிசுட்டான் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் குழு அங்கு புதையல் தோண்ட முற்பட்ட குழுவினை கைது செய்துள்ளனர்.

இதன்போது கனகரத்தினபுரத்தினை சேர்ந்த ஒருவர், மாத்தளையினை சேர்ந்த ஒருவர், கிளிநொச்சியினை சேர்ந்த நால்வர் என ஆறு பேரினையே பொலிஸார் இவ்வாறு கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களிமிருந்து புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட சுட்டியல், மண்வெட்டி மற்றும் தொல்பொருள் ஆபரணம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட ஆறு சந்தேகநபர்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது குறித்த சந்தேக நபர்களை (23) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## ஒரே வீட்டில் தங்கியிருந்த....

சிறுவன் உட்பட 13 வயதுடைய சிறுவர்கள் இருவர் என நால்வர் இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

மியன்வத்துர தோட்டத்தில் தற்காலிகமாக பணிபுரிவதற்காக வாடகை வீட்டில் தங்கியிருந்த நிலையிலேயே நேற்றிரவு முதல் சிறுவர்களை காணவில்லை என பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

காணாமல்போன சிறுவர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லையெனவும் சிறுவர்களை கண்டறிவதற்கான பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பத்து ஆண்டுகால...

நடைபெற்ற கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2023ஆம் ஆண்டுக்கான பழைய மாணவர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் 40 ஆண்டு நிறைவை முன்னிட்டு சிகரம் விருது வழங்கும் விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டுக்கும் சமூகத்திற்கும் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கும் தனித்துவமான பணியை ஆற்றும் பழைய மாணவர்களை பாராட்டும் வகையில் வழங்கப்படும் முதலாவது விருது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மல்வத்து தரப்பு அனுநாயக்க வண, திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பேராசிரியர் ஜே.பி. திசாநாயக்க, திலக் கருணாரத்ன உள்ளிட்ட 11 பேர் இங்கு விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். முழுமையான பல்கலைக்கழக கட்டமைப்பிலும் நவீன மயப்படுத்தலின் தேவை இருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு வழங்கக் கூடிய உடனடித் தீர்வுகளை கண்டறியுமாறும் கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.

இந்த 10 வருட கால அபிவிருத்தித் திட்டத்தை விரைவில் தயாரிப்பதற்கு தங்களை அர்ப்பணிக்குமாறு பழைய மாணவர்களிடம் மேலும் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி , அவ்வாறு செய்யாவிட்டால் கொழும்பு பல்கலைக்கழகம் அந்த விசேட செயற்பாட்டிற்கு பங்களிக்கும் வாய்ப்பை இழக்க நேரிடும் என்றும் தெரிவித்தார்.

பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க மற்றும் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எச்.டி. கருணாரத்ன, பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் ஜே.எம்.எஸ். பண்டார உள்ளிட்ட உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சீனி, கோதுமை...

விவகார அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன், இந்த சந்தர்ப்பத்தில் விலை அதிகரிப்பை மேற்கொள்ளாதிருக்குமாறு தாம் விடுத்த கோரிக்கையை இறக்குமதியாளர்கள் ஏற்றுக்கொண்டதற்கமைய, அடுத்த ஒரு மாதத்திற்கு சீனி விலை அதிகரிப்பு தொடர்பான சிக்கல் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கோதுமை மா கிலோகிராம் ஒன்றின் விலையையும் 195 ரூபாவை விட அதிகரிக்காதிருக்கவும் சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன. உலக சந்தையில் கோதுமை மாவின் விலை குறைவடைந்துள்ளமைக்கு அமைய, வரி அதிகரிக்கப்பட்டாலும் கோதுமை மாவின் விலையை அதிகரிக்காதிருக்குமாறு அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், பிரதமரின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட உப குழுவின் ஊடாக முட்டை இறக்குமதி தொடர்பில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வு கிடைக்கும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## அரசின் சரியான...

திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டபோதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்த வேலைத்திட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோரும் கலந்துக்கொண்டனர். இதேவேளை, பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் பங்கேற்க இளைஞர்களுக்கு வாய்ப்பளித்த முதல் நாடு இலங்கையாகும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது தெரிவித்துள்ளார்.

இன்னும் 25 ஆண்டுகளில் நாடு வெற்றிப் பாதையை எட்டியிருக்கும் போது, “நாம் எடுத்த நடவடிக்கையே நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது” என இளைஞர் சமூகம் பெருமிதம் கொள்ள முடியும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். இந்த மாற்றத்தை இளைஞர்களே கோரினர். ஆகையால் இந்த சந்தர்ப்பத்தை கொண்டு உரிய வகையில் இளைஞர்கள் பயனடைவர் என தான் நம்புவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## சில மாவட்டங்களில்...

சில மாகாணங்கள் மற்றும் காலி மாத்தறை உள்ளிட்ட சில மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை , வங்காள விரிகுடாவில் நி லை கொண்டுள்ள சிறு தாழமுக்கம் காரணமாக வங்காள விரிகுடா கடற் பகுதிகளுக்கு மறு அறிவித்தல் வரை மீனவர்கள் செல்லக்கூடாது என அந்த திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் தொடரும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக சில கங்கைகள் மற்றும் நீர்த்தேங்கங்களின் நீர் மட்டம் அதிகரித்து காணப்படுவதால் அந்தப் பகுதிகளுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க மாத்தறை மற்றும் தெவிநு வர பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட ஏழு பிரதேச செயலாளர்கள் பிரிவுகளுக்கு இந்த வெள்ள அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. அந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அந்த திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

## தமிழ் மக்களது ...

பங்களிப்பு தொடரும் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இன்று திங்கட்கிழமை (15) அதிகாரப்பகிர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தை ஆரம்பமாகவுள்ள நிலையில், ஏற்கனவே ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு காலஅவகாசத்தினை வழங்கியிருந்த நிலையில் தற்போது முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தையில் எவ்வளவு தூரம் நம்பகத்தன்மையை கொண்டிருக்கின்றீர்கள் என்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யும் வகையில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் நீண்டகாலமாகவே உறுதியாக இருக்கின்றோம். அதுவே எமது இலக்காகவும் உள்ளது.

அந்த இலக்கை அடைவதற்காக நாம் கிடைத்த அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி வந்துள்ளோம். எதிர்காலத்திலும் அவ்விதமான செயற்பாட்டையே பின்பற்றுவதற்குள்ளோம்.

அந்த வகையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக எம்மை அழைத்துள்ளார். நாம் அந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டுஅதில்பங்கேற்கவுள்ளோம்.

அத்துடன் அச்செயற்பாடு முன்னகர்த்தப்படுவதற்கான அனைத்து விதமான பங்களிப்பினையும் நாம் செய்வோம். எம்மைப்பொறுத்தவரையில் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தினை நாம் பயன்படுத்தாது விட்டவர்கள் என்ற பழிச்சொல்லுக்கு ஆழாகத் தயாரில்லை.

அதேநேரம், தற்போது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கான வழிகளை தேடும் நிலைமைகளே காணப்படுகின்றது.

ஆகவே, இந்தச் சந்தர்ப்பம் இனப்பிரச்சினை தீர்வைக் காண்பதற்கு உகந்தது அல்லதென்று கூறமுடியாது. பொருளாதார ரீதியாக நாடு முன்னேற வேண்டுமாயின் உள்நாட்டில் அமைதியும் நிரந்தரமான சமாதானமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே அடிப்படையான விடயமாகும்.

அந்தவகையில், தற்போதைய சூழலில் இதயசுத்தியுடனான பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு தீர்வினை எட்டுவதில் எவ்விதமான பிரச்சினையும் கிடையாது.

இனப்பிரச்சினை தீர்வுதொடர்பில் தொடர்பில் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் தலைமைகளுடன் பேச்சுக்களை நடத்தப்பட்டு இணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றவிடயம் வலியுறுத்தப்படுவது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டபோது சம்பந்தன் கூறியதாவது, முஸ்லிம் மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமைகளுக்கு உரித்துடையவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் விடயங்களில் நியாயமாக, நீதியாக நடந்து கொள்வதற்கு நாம் எப்போதுமே உறுதியாக உள்ளோம்.

தந்தை செல்வா காலத்திலிருந்தே தமிழ் பேசும் சமூகமாக தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற விடயம் இலங்கை தமிழரசுக்கட்சியினால் பின்பற்றப்பட்டு வருகின்றது என்றார்.

## அரசாங்க ஊழியர்களுக்கு...

அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, 17 லட்சம் அரச ஊழியர்களை பராமரிப்பதற்கு வருடாந்தம் 1.4 ட்ரிலியன் ரூபா செலவாகுவதாக முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். செலவிடப்படும் பணத்துடன் ஒப்பிடும் போது அவர்களால் நாட்டுக்கும் மக்களுக்கும் உண்மையான நன்மை கிடைக்குமா என்பதை நாம் சிந்திக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## லக்சம்பேர்க்குடன்...

மன்றத்தின் ஒரு பகுதியாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன்பின்னர் லக்சம்பேர்க் வெளிவிவகார அமைச்சர் ஜீன் அசெல்போர்னுடனும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்துரையாடினார். இந்த சந்திப்பின் போது விமான சேவைகள் தொடர்பான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது மற்றும் வர்த்தகம், முதலீடுகள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## பாதையை விட்டு விலகி...

பெற்றுள்ளது. இதில் நடன ஆசிரியர் உட்பட பலர் காயமடைந்து பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (14) அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை பிரதேசத்தில் உள்ள கலை நிறுவனம் ஒன்றின் நடன ஆசிரியை மற்றும் மாணவர்கள் குழுவொன்றே விபத்தில் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர்களில் 8 மாணவிகளும் 2 மாணவர்களும் அடங்குவதாகவும் அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பதுளை பொது வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## இனப்பிரச்சினை தீர்வு... 03ஆம் பக்கத் தொடர்

அத்துடன் திருகோணமலை வெள்ளைமணல் பிரதேசத்தில் தொள்ளாயிரம் ஏக்கர் நிலப்பரப்பினை விமானப்படையினர் சுவீகரிப்பதற்கு முயற்சி இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த பிரதேசத்தின் ஒரு பகுதியில் அம்மக்களின் வீடுகள் அமைந்திருக்கின்றன. மறு பகுதியில் கடல் காணப்படுகிறது.அந்த இரண்டுக்கும் இடையில் காணப்படும் பாரிய நிலப்பரப்பை, பாதுகாப்பு தேவைகளுக்காக பெற்றுக் கொள்ளப் போவதாக தெரிவித்துக்கொண்டு விமானப்படை அதனை சுவீகரிக்க திட்டமிட்டு வருகிறது. அங்கு தொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான காணி அபகரிப்பு விடயங்களில் ஜனாதிபதி உரிய கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் இடாப்பு திருத்தும்... 03ஆம் பக்கத் தொடர்

தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வீடுகளுக்கு வரும்போது வீடுகளில் எவரும் இருக்கவில்லையானால் குறித்த வீட்டு உரிமையாளர் உடனடியாக அந்த தகவல்களை கிராம சேவை அதிகாரிக்கு கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த ஆணைக் குழு தெரிவித்துள்ளது

அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில் இம்முறை தேர்தல் வாக்கெடுப்பில் திருத்தங்களை மேற்கொள்வது முக்கியமானது என்றும் அந்த ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் எதிர்வரும் அக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## தவறுகள் இடம்பெறுமானால்... 03ஆம் பக்கத் தொடர்

திகதி அந்த அறிக்கையை நாம் ஜனாதிபதிக்கு ஒப்படைக்கவுள்ளோம்.

நாம் புதிய நடைமுறையொன்றை செயற்படுத்தும் போது அதைவிட மேலான புதிய நடைமுறையொன்றை தவறிழைப் போர் மேற்கொள்கின்றனர். தொடர்ந்தும்அதற்கு இடமளிக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கடமையைச் செய்தால்... 03ஆம் பக்கத் தொடர்

நடைமுறைப்படுத்தல் மற்றும் கூட்டுத்தாபனங்களை கண்காணித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்பார்வைக் குழுக்களின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன. அதனால் சபை அமர்வில் பங்கேற்றல் மற்றும் உரையாற்றுதல் ஆகியவற்றை தவிர்ந்த ஏனைய அனைத்து பணிகளிலும் நீங்கள் பங்கெடுக்க முடியும். இந்த திட்டம் பற்றி கூறியபோது இது சாத்தியப்படாத விடயம் என சிலர் கூறினர். சிலர் இதனால் பயனில்லை நேரம் மட்டுமே வீணாகும் என்றனர். சிலருக்கு திட்டம் எவ்வாறானது என்பதே பெரும் குழப்பமாயிருந்தது. இருப்பினும் சிலர் அச்சமின்றி தங்களது பெயர்களை அனுப்பி வைத்தனர். அவர்களிலிருந்தே சிறந்த 535 பேரை நாம் தெரிவு செய்துள்ளோம். நீங்கள் சாத்தியமாக்கிக் காட்டுங்கள். நீங்கள் சாத்தியமாக்கிக் காட்டிய பின்னர் மற்றையவர்களும் இந்த பணியில் பங்கெடுப்பர்.

முதற் தடவையாக பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை கொண்டு முழுமையாக பயனடைய வேண்டும். இந்த பாராளுமன்றத்தில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இது தொடர்பில் நாம் பொதுநலவாய குழுவினருக்கும் அறிவித்து அவர்களுக்கும் அழைப்பு விடுக்க முடியும். சர்வதேச பாராளுமன்ற சங்கத்தினருக்கு அறிவித்து அவர்களுக்கும் அழைப்பு விடுக்க முடியும். ஐரோப்பிய பாராளுமன்றம் இதுபற்றிய விஷேட அவதானத்தைச் செலுத்தும். இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அமெரிக்காவின் உதவியையும் நாம் பெற்றுக் கொள்ளமுடியும்.அந்தபொறுப்புகள் உங்களையே சார்ந்துள்ளது. பாராளுமன்றத்தின் இளம் பிரதிநிதிகளும் எம்.பிக்களும் இணைந்து இந்த பணிகளை செய்யுங்கள். நாம் அபிவிருத்து அடைந்துவரும் நாடாகவே இருக்க முடியாது. எவ்வாறு நாம் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறுவது என்பதை சிந்திக்க வேண்டும். எமக்கு நல்லதொரு எதிர்காலம் தேவைப்படுகிறது. அதற்காக நல்லதொரு பொருளாதாரமும் அவசியமாகியது. சட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அது பற்றிய உங்களது கருத்துகளை கூறுங்கள். கரு ஜயசூரியவினால் மக்கள் சபைச் சட்டம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளது. அதன்கீழ் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் மக்கள் சபையொன்று உருவாக்கப்படும்.

அதனிலும் பங்கெடுக்க இளையோருக்கு வாய்ப்பளிக்கப்படும். பாராளுமன்றத்திற்கு தெரிவாகும் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அதற்காக கிராம மட்டத்திலுள்ள அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்கான பேச்சுவார்த்தைகள் தேசிய இளைஞர் மன்றத்தினால் முன்னெடுக்கப்படுகிறது. அந்த மாற்றங்களைக் காண இன்னும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அரசியலமைப்புக்கு அமையவே செயற்திட்டங்களை மாற்ற வேண்டும். அடுத்த பாராளுமன்றம் வரும் வரையில் பார்த்துக்கொண்டிருக்காமல் உங்கள் அனைவருக்கும் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த சவாலை நாம் ஏற்றுக்கொண்டு நல்ல தீர்வுகளை பெற்றுக்கொடுப்போம்.




# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கு சம்பள நிர்ணய சபையுடன் பேச்சு நடத்தப்படும்

## நுவரெலியா மாவட்ட பல்கலைக்கழகம்: கொட்டகலையில் அமைக்க நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சம்பள நிர்ணய சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தி தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மலையக பெருந்தோட்டப் பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரினதும் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு, இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போவதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

இதேபோன்று உத்தேச நுவரெலியா பல்கலைக் கழகத்தை கொட்டகலையில் அமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



கொட்டகலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி பகுதியில் இதனை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அப்பகுதியில் பௌத்த பிக்குகளால் வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

அதன் உண்மை நிலையை கண்டறிவதற்காக நாம் அப்பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டோம். நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபரிடமும் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, அதன் பின்னர் நாம் தீர்க்கமான முடிவொன்றை மேற்கொள்வோம்.

இதற்கு, முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட அனைவரின் ஒத்துழைப்பையும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

கடினமான முடிவுகளை எடுக்கும் போது மக்களுக்கு ஏற்படும் சுமைகள் தொடர்பில் அரசாங்கம் முழுமையாக அறிந்துள்ளது.

அந்த சுமையை நிவர்த்தி செய்வதற்காகவே நலன்புரி திட்டங்கள் போன்றவை நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சர்வமத குழுவினரின் கலந்துரையாடல்



**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

நுவரெலியா மாவட்ட சர்வ மத குழுவின் தேவையின் பற்றிய கலந்துரையாடல்,ஹற்றன் அஜந்தா விருந்தினர் விடுதி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்கழ்வில் சர்வமதத்தைச் சேர்ந்த மதத்தலைவர்கள், மற்றும் பௌத்த,ஹிந்து, இஸ்லாமிய, கிறித்தவ மாவட்ட ரீதியிலுள்ள உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதில் பங்கேற்ற அனைவரும் நுவரெலியா மாவட்டத்தில் சர்வமத சகவாழ்வு நல்லிணக்கத்தை கட்டி எழுப்ப வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றினர்.

இதனைத் தொடர்ந்து இவர்களின் கருத்துக்கள் எழுத்து மூலம் பெறப்பட்டன. பின்னர்,குழுக்களின் தலைவர்கள் தங்களது கருத்துக்களை சகலருக்கும் விளக்கமாக எடுத்து கூறினர் இக்கருத்தரங்கு சுமார் ஐந்து மணித்தியாலம் இடம் பெற்றது.

காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வு மாலை 3 மணிக்கு வரை இடம் பெற்றது.

# சாமிமலை பகுதியில் பாற்பண்ணை நிலையம் உள்ளூர் இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

பலபேருக்கு தொழில் வழங்கும் வகையில் பின் தங்கிய பகுதியான சாமிமலை நகரில்,பாற்பண்ணை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

மஸ்கெலியா சாமிமலை பகுதிகளில் பாற்பண்ணை நடத்தும் பண்ணையாளர்களிடமிருந்து சேகரிக்கப்படும் பால் மூலம் பல் வேறு பொருட்களை தயாரித்து விற்பனை செய்யும் நோக்கில் இந்நிலையம் திறக்கப்பட்டது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் வெளியூர்களு

க்கும் அனுப்பப்படவுள்ளன.

சாமிமலை பகுதியிலுள்ள கவரவலை தோட்டத்தில் சிறிதாக ஆரம்பிக்க பட்ட இந்த தொழிற்சாலை, தற்போது பல விதமான தொழில் நுட்ப கட்டமைப்புடன் புதிய கட்டட தொகுதியில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், இலங்கை மத்திய வங்கி நுவரெலியா கிளை முகாமையாளர்கள் மற்றும் ஏனைய வர்த்தக வங்கி முகாமையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

வெளிநாட்டு முதலீட்டாளர் திரு. மெரியோ ரோன் கோரி, அவருடன் இணைந்து இவ்வேலை திட்டத்தின் திட்டமிடல் முகாமையாளர் திருமதி. ஹரஷிக்கா ஹெலன் கொட மற்றும் இப்பண்ணையின் உரிமையாளர், அவரது தந்தை திரு.தங்கவேல் ஆகியோர் இணைந்து புதிய தொழிற்சாலையின் நாடாவை வெட்டி வைபவ ரீதியாக திறந்து வைத்தனர். இங்கு உரையாற்றிய வெளிநாட்டு முதலீட்டாளர் திரு.மெரியோ ரோன் கோனி, இலங்கையில் பின் தங்கிய பகுதியான சாமிமலை நகரில் இவ்வாறான நிலையம் ஆரம்பிக்கப்பட்டமை மகிழ்ச்சி. இப்பகுதியிலுள்ள பண்ணையாளர்களால் உற்பத்தி செய்யப்படும் திரவ பாலை கொள்முதல் செய்து, கட்டிப்பால், தயிர் நெய், மற்றும் ஏனைய பொருட்களை சந்தைப் படுத்தல் வேண்டும். தற்போது இந்த வேலைத் திட்டம் சிறப்பாக அமைந்துள்ளது தொடர்ந்து நல்ல முறையில் இதனைக் கொண்டு செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

## ரொத்தஸ் கொலனியில் வாழும் மக்களுக்கு குடி நீர் வசதிகள்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

ஹற்றன், ரொத்தஸ் கொலனியில் வாழும் மக்களுக்கு குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்கான ஆரம்பக்கட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமையவும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரனின் வழிகாட்டலின் கீழும், குறித்த பகுதிக்கு குழுவொன்று நேரில் விஜயம் மேற்கொண்டது.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் இணைப்பு செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் தலைமையிலான இந்த குழுவில், நுவரெலியா பிராந்தியத்தின் சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் அதிகாரி உட்பட பலர் இடம்பெற்றிருந்தனர்.

இதன்போது,குடிநீர் திட்டத்தை முன்னெடுப்பதற்கான உரிய இடம் அடையாளம் காணப்பட்டது, இடத்துக்குரிய ஒதுக்கீட்டு அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் அடுத்தக் கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

தோட்ட மக்களுடனும் அமைச்சின் பிரதிநிதிகள் இதுகுறித்து கலந்துரையாடி, கருத்துகளை கேட்டறிந்துகொண்டனர்.

ரொத்தஸ் கொலனியில் வாழும் சுமார் 600 குடும்பங்கள், தமக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பச்சை கொழுந்தின் விலை குறைந்ததால் தோட்ட உரிமையாளர்கள் பாதிப்பு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பச்சை கொழுந்தின் விலை ஒரு கிலோவிற்கு 4050 ரூபா அளவில் வீழ்ச்சியடைந்துள்ளமையால், பலாங்கொடை பிரதேசத்தில் உள்ள சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.பச்சைக் கொழுந்தின் விலை.வீழ்ச்சியின் காரணமாக தேயிலை உற்பத்தி வருமானம் குறைந்துள்ளதாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். தேயிலை உற்பத்திக்கு பயன்படுத்தும் உரத்தின் விலையை மேலும் குறைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த ஜனவரி பெப்ரவரி மாதங்களில் 220230 ஆகிய விலைக்கு இருந்த பச்சை கொழுந்து ஒரு கிலோவின் விலை, தற்பொழுது 170180 ரூபாவுக்கு இடையில் குறைந்துள்ளதாக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

# இரத்தினக்கல் ஆபரண பயிற்சி நிறுவனத்தின் பிராந்திய அலுவலகம் பதுளையில் திறப்பு

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனத்தின் புதிய பிராந்திய அலுவலகம் ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசனாயக மற்றும் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் நேற்று (14) பதுளை ரேஸ்கோர்ஸ் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இரத்தினக்கற்கள் அதிகம் உள்ள ஊவா மாகாணத்தைச் சேர்ந்த சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் இரத்தினக்கல் தொழில் பற்றி அறிந்து கொள்வதற்கும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கும் இந்நிறுவனத்தினூடாக வாய்ப்பு கிடைக்கவுள்ளது. இங்கு, டிப்ளோமா உள்ளிட்ட பல பாடநெறிகளும் நடத்தப்படவுள்ளன.



ஊவா மாகாணத்தைச் சேர்ந்த சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் இரத்தினக்கல் வியாபாரிகள் கற்களின் சரியான விலையை அறிந்துகொள்ளல், விற்பனை செய்தல் மற்றும் இரத்தின வகைகளை அடையாளம் காண்பது உள்ளிட்ட பல சேவைகளை இந்நிறுவனம் வழங்கவுள்ளது.

அதேவேளை பதுளை மாவட்ட சுரங்கத் தொழிலாளர்களுக்கு இரத்தினக்கல் அகழ்வதற்குத் தேவையான உரிமங்களும் இங்கு வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் ஆர்.எச்.சி.பிரியந்தி, இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மங்கள விஜேநாயக்க, இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள், ஊவா மாகாண சபை அமைச்சின் செயலாளர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் இரத்தினக்கல் வர்த்தகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


NSB

**தேசிய சேமிப்பு வங்கி**

**விலைமனுக் கோரல்**

**பெறுகை அறிவித்தல் இல: என்.எஸ்.பீ/பி.டி/ஐ.டி.ஈ/2023/06**

இங்கு குறிப்பிடப்படும் டெண்டருக்கான பண்டங்களை வழங்கல் விநியோகித்தல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்களிற்காக அங்கீகாரம் பெற்ற உற்பத்தியாளர்களிடமிருந்து/ வழங்குநர்களிடமிருந்து அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற தேசிய முகவர்களிடமிருந்து முத்திரைக்குறி இடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| Description of the procurement | Purchase of Core Router 04 Nos |
| Method of Procurement | National Competitive Bidding (NCB) |
| Applicable Non-refundable Tender Fee | Rs. 8,000/- |
| Value of Bid Bond to be submitted | Rs. 260,000/- |
| Last Date & Time of Issuing Bid Documents | 06/06/2023 at 3.00 p.m. |
| Date & Time of Closing of Tender | 07/06/2023 at 10.00 a.m. |

1. எந்தவொரு விலைமனுதாரர் சார்பாகவும் முகவரொருவர் அல்லது உபமுகவரொருவர் அல்லது நியமனம் செய்யப்பட்ட எந்தவொரு நபரும் இதற்காக விண்ணப்பிக்க முன்னர், 1987 இலக்கம் 03 என்ற பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்வது கட்டாயமாகும் என்பதுடன், அவர் பெயரில் ஒப்பந்தத்தைப் பதிவு செய்தல் கட்டாயமாகும்.
2. 2023.05.15 முதல் 2023.06.06 வரை வார வேலை நாட்களில் மு.ப. 08.30 முதல் பி.ப. 03.00 வரை இதற்கான விலைமனுப் படிவங்களை கொழும்பு 03, காலி வீதி இலக்கம் 255 இல் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவின் முகாமையாளரிடம் எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.
3. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட கேள்வி ஆவணங்களுடன், கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 120 நாட்கள் செல்லுபடியாகும். வணிக வங்கியொன்றினால் வழங்கப்படும், தேசிய சேமிப்பு வங்கி ஏற்றுக்கொள்ளும் வங்கிப் பிணையமொன்று/ கேள்வி வைப்பொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. குறித்த தினத்தன்று மு.ப. 10.00 இற்கு கேள்வி விண்ணப்பங்கள் மூடப்பட்டு உடனடியாக அவை திறக்கப்படுவதுடன் மு.ப. 10.00 இன் பின்னர் கிடைக்கப்பெறும் டெண்டர் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்
5. அனைத்துக் கேள்விகளையும் அல்லது பெறுகையொன்றை அல்லது அதன் பகுதி ஒன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது காரணமெதனையும் முன்வைக்காமல் நிராகரிக்கும் உரிமை தேசிய சேமிப்பு வங்கிக்கு உரித்தாகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் - (வழங்கல்) இடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**தாபனப் பெறுகைக் குழு - பிரதான,**
**தேசிய சேமிப்பு வங்கி**
**இல. 255, காலி வீதி, கொழும்பு- 03.**


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.05.13
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5113 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,039,049.00
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 9 3 4 1 9 8

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1461 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 320,785,262.00
ஆங்கில எழுத்து K — சுப்பர் இலக்கம் 18 — வெற்றி இலக்கங்கள் 19 33 68 76
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் 422 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,684,478.00
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 10 15 31 53 — விசேட இலக்கினம் கடகம்

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1143 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 89,870,963.20
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 08 11 23 71

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1568 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,887,040.40
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 8 9 6 9 8 5

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் 3355 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,028,917.44
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 12 41 57 64

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.05.12
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5112 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 1 3 9 5 3 4

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1460 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 320,725,586.00
ஆங்கில எழுத்து C — சுப்பர் இலக்கம் 11 — வெற்றி இலக்கங்கள் 05 52 67 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் 421 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,656,565.20
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 16 23 25 37 — விசேட இலக்கினம் ரிஷபம்

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1142 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 89,668,349.60
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 19 23 42 61

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1567 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,887,040.40
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 8 6 6 0 0 5

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் 3354 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 102,638,670.24
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 29 40 47 76

## சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் கருத்திட்டம்

## கமத்தொழில் அமைச்சு

சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் கருத்திட்டத்தினால் பின்வரும் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்காக 2023-05-14ஆம் திகதிய சண்டே ஒப்சேர்வர் பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. இயைபுடைய தகைமைகள், அனுபவம் மற்றும் விண்ணப்பிக்கும் நடைமுறை, சம்பள அளவு தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்துகொள்வதற்கு தயவுசெய்து https://www.agrimin.gov.lk. எனும் இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும். குறித்த இணைய பக்கத்தை பயன்படுத்தி உங்களது விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரிக்குச் சமர்ப்பிக்குமாறு SARP கருத்திட்டம் கேட்டுக்கொள்கின்றது.

### 01. சிரேஷ்ட கருத்திட்டப் பொறியியலாளர் (PS 03) - 01 பதவி

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2023-05-29**

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் கருத்திட்டம்,**
**2/2/1, கந்தவத்த வீதி, பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

## தேசிய போட்டி கேள்வி முறைமை

## கேள்வி அழைப்பு

### மருத்துவ வழங்கல் பிரிவு – சுகாதார அமைச்சு

மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கீழ்க்காணும் இயந்திராதிகளைக் கொள்வனவு செய்வதற்காக திறந்த விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| | உருப்படி | கொள்வனவு செய்யும் அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் பிணைப் பெறுமதி |
|---|---|---|---|
| 01 | பற்றரியினால் செயற்படும் பாரம் தூக்கும் இயந்திரம் (Fork Lift) | 03 | 5000/- |
| 02 | கை பாரம் தூக்கும் இயந்திரம் (Hand Pallet Truck) | 10 | 1000/- |

கேள்வி ஆவணங்களை 2023.05.16 முதல் 2023.06.05ம் திகதி பி.ப. 2.00 வரை மருத்துவ வழங்கல்கள் பிரிவின் வழங்கல்கள் கிளையில் பெற்றுக் கொள்ளலாம். குறித்த நிறுவனத்தினால் கேள்வி ஆவணங்களை வங்குமாறு மேற்கொள்ளப்படும் வேண்டுதல் கடிதம், வியாபார பதிவு பற்றிய சான்றிதழின் பிரதியொன்றை மற்றும் மீளளிக்கப்படாத பற்றரி மூலம் செயற்படும் பாரம் தூக்கும் இயந்திரம் (Fork Lift) இற்காக ரூ. 5000/- தொகையும், கை பாரம் தாங்கும் இயந்திரம் (Hand Pallet Truck) இற்கு ரூ. 1000/- உம் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்த பின்னர் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2023.06.06 பி.ப. 2.00 ஆவதுடன் கேள்விகள் திறத்தல், மருத்துவ வழங்கல்கள் பிரிவின் கணக்காளர் (வழங்கல்கள்) அலுவலகத்தில் அந்நேரத்திலேயே இடம்பெறும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

கேள்வி ஆவணங்கள் பெற்றுக் கொண்ட பின்னர் குறித்த இடங்களின் பரிசீலனை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை மருத்துவ வழங்கல் பிரிவில் மேற்கொள்ளலாம். தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும். இது பற்றிய மேலதிக தகவல்களை மருத்துவ வழங்கல் பிரிவின் கணக்காளர் (வழங்கல்கள்) இடம் தொ.பே.இல. 0112692468 மூலம் விசாரித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மருத்துவ வழங்கல்கள் பிரிவு,**
**357, வண. பத்தேகம விமலவங்ஷ ஹிமி மாவத்த,**
**கொழும்பு-10.**

## கேள்விக்கான அழைப்பு

**(இலங்கை அரசின் மானிய செயற்றிட்டம்)**

### விவசாயத் திணைக்களம் - பழைய கலஹா வீதி, பேராதனை

பேராதனை விவசாயத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கீழ்க்காணும் நிர்மாணங்கள் மற்றும் பழுது பார்த்தல்களுக்காக, கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள சீடா 0 CIDA பதிவுள்ள கேள்விதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

2023.05.15 முதல் 2023.05.29 பி.ப. 2.00 வரை அலுவலக நாட்களில் இத் திணைக்களத்தின் செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையத்தில் கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்த்து அட்டவணையில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை செலத்திய பின்னர் பெற்றுக் கொள்ளக்கூடியதுடன் 2023.05.30 மு.ப. 10.30 இற்கு முன் இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் மூலம் ஒப்படைக்கலாம். அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும் அதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

மேற்படி வேலை சம்பந்தமாக மேலதிக தேவையான தகவல்களை தேவைப்படின் விவசாயத் திணைக்களத்தின் செயற்றிட்ட மற்றும் பயிற்சி நிலையத்திற்கு வருகைதந்து அல்லது கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் விசாரித்து அறியலாம் கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் உறையில் இடது பக்க மேல் மூலையில் திணைக்களத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி நேரத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

| கேள்வி இலக்கம் | நிர்மாணங்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள் | CIDA பதிவு வகுதி | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக செலுத்து வதாயின் ரூ. சதம் | வங்கிப் பிணை சமர்ப்பிப் பதாயின் ரூ. சதம் |
| செதி/ப/06/02/ 2023-57 | கன்னொடுவ விவசாய வர்த்தக அபிவிருத்தி அலுவலக கட்டிடம் பழுது பார்த்தல் (ரூ. 5,160,115.10) | C6 C7 C8 | 2,500.00 | 51,500.00 | 103,000.00 |
| செதி/ப/06/02/ 2023-61 | இரத்தினபுரி, கரபிங்ச விவசாய கல்லூரியின் புதிய கேட்போர் கூடத்தின் பின் பக்கம் பக்கச்சுவரை நிர்மாணித்தல் (ரூ. 8,260,000.00) | C6 C7 C8 | 3,500.00 | 82,500.00 | 165,000.00 |
| செதி/ப/06/02/ 2023-69 | பிபில பூங்காப் பயிர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் விடுதியின் கூரையை பழுதுபார்த்தல் (ரூ. 4,759,155.00) | C7 C8 C9 | 2,500.00 | 47,500.00 | 95,000.00 |

**தலைவர்,**
**பிரதெச பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட மற்றும் நிலையம்,**
**விவசாயத் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி,**
**பேராதனை**
**தொ.பே. இலக்கம். 081-2389127**
**பெக்ஸ்: 081-2389127**

## கடற்றொழில் அமைச்சு

**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

NAQDA

## விலைமனுக்கோரல்

### பெறுகை அறிவித்தல்

01. இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (மேஜர்) பின்வரும் சேவையினை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் | மனுப் பாதுகாப்பு தொகை (SLR) மற்றும் செல்லுபடியாகும் காலம் | மீளச் செலுத்தப்படாத கட்டண பெறுமதி (SLR) | முன்மனுக் கூட்டம் | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் மூடப்படும் திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் மூடப்படும் திகதி / நேரம் |
|---|---|---|---|---|---|
| NQ/DPC/2023/ NCB/G/11 நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி சபைக்கான மீன் தீவனம் வழங்கல் மற்றும் விநியோகம் செய்வதற்கான பெறுகை - 2023 | மனுப்பாதுகாப்புத் தொகை ஏல ஆவணத்தின் II - ஏலத் தரவுத் தாள் (BDS) இன் ITB உட்பிரிவு 20.2 இன் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. (2023.10.04 வரை) | ரூ. 20,000.00 | 2023.05.29 (மு.ப.11.00 (NAQDA தலைமை ஆலவலகத்தில்) | 2023.06.05 பி.ப.3.00 | 2023.06.06. பி.ப.2.00 |
| NQ/DPC/2023/ NCB/G/07 வெளீர் தூள் (Bleach Powder) வழங்கல் மற்றும் விநியோகம் செய்வதற்கான பெறுகை | ரூ.125,000.00 (2023.10.04 வரை) | ரூ. 3,500.00 | - | 2023.06.05 பி.ப. 3.00 | 2023.06. 06. பி.ப.2.00 |

02. தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை NAQDA உத்தியோகபூர்வ (www.naqda.gov.lk) மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
**திணைக்களத்தின் கொள்முதல் குழு - (மேஜர்),**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.
2023.05.15

## இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**கடன் தொடர்பு இல. 81217541**

இல.17, மொரகெட்டிய சந்தி, செவனகல எனும் முகவரியையுடைய திரு.பங்கம கமச்சிகே மனோஜ் மதுரங்க என்பவர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.02.10ஆம் திகதி 2319ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.02.06ஆம் திகதி “தினமின”, “தினகரன்”, மற்றும் “டெய்லி நியூஸ்” ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவினையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த எம்/எஸ் T&H ஒக்ஷன், ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.05.30ஆம் திகதி மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

1. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளை, வெலிகம பிரதேச சபை மற்றும் வெலிகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கம்புறுகமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் கம்புறுகமுவையில் அமைந்துள்ள விதானகேகொரடுவ எனப்படும் போகஹகொரடுவ என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ.எச்.பீ. நிஹால் சில்வா தயாரித்த 2006 மே 19ஆம் திகதிய 2759ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு A என அடையாளமிடப்பட்ட காணி குறித்த வரைபடத்தின்படி வடக்கில் ஊஸ்வத்தவினையும் கிழக்கில் வீடுகளுக்குச் செல்லும் காலி மாத்தறை பிரதான வீதியையும் தெற்கில் பரன வத்த எனப்படும் தெலபுகாஹ வத்தவினையும் (தெலபுகேவத்த என பதியப்பட்டுள்ளது) மேற்கில் வலவ்வ வத்த மற்றும் கோபிலகேவத்தவினையும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் பூஜ்ஜியம் எட்டு (ஏ0.றூ01.பே0.8) பரப்பளவுடன் இக்காணி, தோட்டங்கள்,மண் மற்றும் அக்காணியில் காணப்படும் அனைத்தும் P130/129 எனும் இலக்கத்தின் கீழ் மாத்தறை காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.
ஆர்.ஏ.கே.சி. ரூபசிங்ஹ
முகாமையாளர்
இலங்கை வங்கி
எம்பிலிப்பிட்டிய
திகதி: 2023.04.03

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

# ராதாகிருஷ்ண ஆலய கும்பாபிஷேக நிகழ்வுகள் பக்திபூர்வ ஆர்வத்துடன் களைகட்டுகின்றன

**கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீரா–தாகிருஷ்ண ஆலய மஹா கும்பாபிஷேகம் இவ்வருட இறுதியில் நடைபெற மும்முர ஏற்பாடுகள் நடைபெற்–றுவரும் நிலையில் மக்களின் பக்திபூர்வ ஆர்வத்தால் கும்பாபிஷேக நிகழ்வுகள் களைகட்டுவதைக்காணக்–கூடியதாக இருக்கிறது.**

இதேவேளை நாட்டில் செல்வச்செழிப்பு, அமைதி, மகிழ்ச்சி நிலவவேண்டுமென கும்பாபிஷேக நிகழ்வுகளின் ஓர் அம்சமாக பக்தர்கள் பிரார்த்தனை செய்தும் வருகின்றனர்.



கொழும்பு, கொட்டாஞ்சேனை புதுச்செட்டித் தெருவையும், ஜெம்பட்டா வீதியையும் இணைத்து பிரமாண்டமாக உருவாகியுள்ளது ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் ராஜகோபாலர் வடிவத்தில் ராதையுடன் இணைந்த ராதா ராஜகோபாலரும், ஜகந்நாதர், பலராமர், சுபத்ரா, கிருஷ்ண சைதன்யர், கௌரநித்தாய் ஆகியோரும் எழுந்தருளுவர்.



மூலமூர்த்தியாக விளங்கும் ராஜகோபாலர், இந்தியாதிருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் இருந்து 1982 ஆம் ஆண்டு வருகை தந்து, பிரதிஷ்டா சிரோன்மணி ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாத குருக்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டு பக்தர்களுக்கு வாத்சல்ய குழந்தையாக ஆட்சி புரிந்து 1990ஆம் ஆண்டு அங்கிருந்து வருகை தந்த ஸ்ரீமதி ராதா ராணியுடன் இணைந்து ராதா ராஜா கோபாலராக திருக்கல்யாணம் கண்டு அருளினார்.

ஜகந்நாத், சுபத்ரா, பலராம் மூவரும் ஜகந்நாத் ஷேத்திரத்திலிருந்து வரவழைக்கப்பட்டு, 1996ஆம் ஆண்டு ஸ்ரீல பிரபுபாதாவின் நூற்றாண்டு விழாவன்று பிரதிஷ்டை செய்யப்பட்டு, பீடத்தில் எழுந்தருளினர்.

இவர்கள் 1999 ஆம் ஆண்டு முதன் முதலாக கொழும்பு புதுச்செட்டித் தெருவில் இருந்து இரதயாத்திரையாகப் புறப்பட்டு வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷன் மண்டபம் வரை சென்று, அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்து மீண்டும் வருகை புரிந்தனர்.

நாட்டில் அமைதி வேண்டி ஆரம்பிக்க;பட்ட இந்த இரத யாத்திரை, தொடர்ந்து 2017ஆம் ஆண்டு வரை விமர்சையாக நடந்து வந்தது. எதிர்வரும் காலத்தில் பகவான் ; திருவருளுடன் கும்பாபிஷேகம் கண்டு, ஸ்திரமாக நிலைகொண்ட பின், இந்த இரதயாத்திரை மீண்டும் தொடர்ந்து நிகழ வேண்டும் என்பதே பக்தர்களின் ஆசையும் எதிர்பார்ப்புமாகும்.

புதிதாக அமையும் ஆலயத்தில் கலியுக அவதாரமாகிய ஸ்ரீ கிருஷ்ண சைத்தன்ய மஹாபிரபுவும், அவரது அன்புக்குரிய நித்தியானந்த பிரபுவும் கௌர நிதாய் வடிவில் ராஜகோபாலரின் ஒரு பக்கத்தில் எழுந்தருளுவர்.

புதுச்செட்டித்தெரு வாயில் வழியாக ஆலயத்துக்கு வரும்போது முதலில் நாம் காண்பது ஆஞ்சநேயர் திருவுருவம். இலங்கையை வாலில் இட்ட தீயால் எரித்தவர், ஆனால் வாலில் இருந்த வெப்பம் அவரை சுடவில்லை குளிர்ச்சி தந்தது.

ராமபிரானின் சேவையில் பதிவிரதா தர்மத்தை கடைபிடித்த சீதா பிராட்டியைக் கண்டுபிடித்து, பின் அரக்கர்களை அழித்து, தான் வந்த நோக்கத்தை நிறைவேற்ற, ராமபிரானுக்கு தலையாய கைங்கரியம் செய்தவர் ஆஞ்சநேயர். அவரைப் பார்த்து திரும்பும் பொழுது, இராமர் சந்நிதி காணப்படுகின்றது. இராமர் சந்நிதிக்கான திருஉருவங்;களும் வெங்கடேஸ்வரர் சந்நிதிக்கான திருவுருவங்களும் கட்சிலா விக்கிரங்களாக இந்தியாவிலிருந்து வருகைபுரிந்துள்ளனர்.

ஆலயம் அமைப்பதில் ஏற்பட்ட பின்னடைவுகளை நீக்கவும் தோஷங்களை போக்கவும் பக்தவத்சலனான நரசிம்மமூர்த்தி சந்நிதியும், வடகிழக்கு பக்கத்தில் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்தின் நிலைபற்றி வடிவமைப்பாளர் விஷ்வஸ்ரீ சந்தனகுமார் ஸ்தபதி பல தகவல்களைத் தெரிவித்தார். அதன்படி கோவிலின் பிரதான கோபுரம் 61 அடி உயரத்தில் அமைகிறது. 7 தலங்கள் (நிலைகள்) கொண்ட கோபுரம் அமைந்துள்ளது. வர்ணப்பூச்சி வேலைகளும் நிறைவடைந்துவிட்டன.

பிரதான மண்டபத்தில் பகவானின் தசாவதார வடிவங்கள் காட்சியளிக்கின்றன.

ஏனைய பல இறுதிக்கட்ட வேலைகளுக்கு பக்தர்களின் உதவிகளும் வரவேற்கப்படுகின்றன. இத்திருப்பணியில் பக்தர்கள் அனைவரும் பங்கு கொண்டு இறை அருளை பெற்றுக்கொள்ளுமாறு சந்தன குமார் ஸ்தபதியும் ஆலய பக்தர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். ஆலயத்துடன் தொடர்புகொள்ளள தொலைபேசி இலக்கம்: 011 2433325 ஹரே கிருஷ்ணா.

கிருஷ்ணப்பிரியன்
**ஆர். ராஜலிங்கம்**

## மானுடவியல்
(தொடர்)



### சாக்கிய நாயனார்

116

என்றிங்ஙனம் நாளாந்த அநுபவத்தை மறித்துணர்வதன் மூலமும், இதைத் தொடர்ந்து மேலெழக் கூடும், இன்பதுன்ப மயக்கம் என்பது என்ன? அது வந்ததெங்ஙனம்? அதிற் கட்டுண்ணவேண்டி யேற்பட்டதேன்? இவற்றிலிருந்து அறுதியாக விடுபடும் மார்க்கமுண்டா? அது எவ்வகையிற் கைகூடும்? என்ற விசாரங்களை யிட்டுச் சுருதி யுக்தி அநுபவங்களுக்கிணங்க ஆராய்தல் மூலமும் உயிர், வினை, கடவுள், பந்தம், மோக்ஷம் என்றிங்ஙனம் யதார்த்த ரீதியில் ஆன்ம விமோசனத்துக்கு உத்தரவாதமளிக்குந் தரவுகளைப் பெற்று அவை அனைத்தையும் ஏற்றுக்கொள்ளுஞ் சமயம் எதுவெனக் கண்டறிதலே மேற்குறித்த உபாயமாகும்.



ஒருகாலத்திற் சமயவாதப் பிரதிவாதங்களுக்குப் பிரசித்த நிலையமாயிருந்த காஞ்சீபுரத்தைச் சென்றடைந்து ஞான விசாரணை மேற்கொண்டிருந்த சாக்கியநாயனார் அன்று அங்கு மேல்நிலையதாகக் கருதப்பட்ட பௌத்தத்திற் சேர்ந்திருந்து கொண்டு அதுவும் அதன் சம்பந்தியாகிய சமணமும் மற்றுமுள்ள பிரமவாத தத்துவங்களும் ஆன்ம விமோசனம் பற்றிக் கூறுந் தரவுகளிலும் அவற்றின் பொருந்துமாற்றிலும் திருப்தி காணாது, தாமே தம்மளவில் மேற்கண்ட வகையில் நெடுநாளாகச் சிந்தித்துப் பெற்ற தெளிவின் அடிப்படையில், வினை, வினைப் பயன், வினைசெய்வோன், வினைப்பலனைச் சேர்ப்போன் என்ற நால்வேறு தரவுகளும் பூரணமாக ஏற்றுக் கொள்ளப்படாதவிடத்து ஞான விசாரணை கடை போக மாட்டாது எனக் கண்டுகொண்டார். அதன்மேல், சகல சமயங்களுள்ளும் எதன்பால் இந்நான்கும் ஐய விபரீதங்களுக்கிடமில்லாமற் செம்பாகமாக இடம் பெற்றுள்ளன எனக்காணும் ஆய்வில் இறங்கி அதன் பேறாக, அது சைவ சமயத்திலேயே எனும் முடிவுக்கு வந்தார். அது அவர் புராணத்தில், "செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுஞ் சேர்ப்பானும் மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக் கொண்டே இவ்வியல்பு சைவ நெறியல்லவற்றுக் கில்லையென உய்வகையாற் பொருள் சிவனென்றருளாலே உணர்ந்திருந்தார்" என வரும்.




திருவருள் கைகூட்டுதலால் உண்மைச் சமயமாகிய சைவம் பிரதிபாதிக்கும் சிவனே மெய்ப்பொருளெனத் தெரிந்து கொண்ட நாயனார் பூர்வத்தில் தமக்கு விட்ட குறையாயிருந்து தற்போது முழுமையாக வாய்க்கும் தியான ஒருக்கத்தினாலே, தம்மில் விளங்குஞ் சிவனோடு "ஏகனாய் நின்றே இணையடிகள் தாமுணரும்" உயர்பெருஞ் சைவாநுபவநிலை எய்தப்பெற்றுவிட்டபோதும். (தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

## "யுகரிஷியின் ஆன்மீக சிந்தனைகள் - 38



*கஷ்ட காலங்களில் மனிதன் வீணாக கலங்கியும், அமைதியின்றியும் தனது ஆற்றலை வீணடித்து விடுகிறான். அவ்வாறு அவன் வீணடிக்கும் ஆற்றலின் ஒரு பகுதியை நிதானமாக அமைதியுடன் சிந்தித்து செயலாற்றினால் எவ்வளவு பெரிய துன்பத்திலிருந்தும் மிக எளிதாக அவன் வெளிவர முடியும். துன்பம் வந்ததும் துவண்டு விடக்கூடாது. துன்பத்தை வெல்லும் வழியை யோசிக்காமல், துவண்டு போய் தம் திறமைகளை வீணாக்கக் கூடாது. எதிர்கொள்ள வேண்டிய கடமைகளை ஆற்றாமல், என்ன செய்வது', 'எங்க போவது 'எப்படி தப்பிப்பது' என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தால் நமக்கு வந்த சிறு துன்பம் கூட நூறு மடங்கு வளர்ந்து விடும்.*

*வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்களை நடுநிலை உணர்வுடனும் தைரியமாக எதிர்கொள்ளவேண்டும். இன்பதுன்பங்களைநம்வாழ்க்கைப் பாதையில் கடந்து செல்லும் பாதசாரிகளைப் போல் பாவிக்க வேண்டும். அவைகள் எவ்விதத்திலும் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று உணர வேண்டும்.*

*அமைதியான மனமும். பேதலிக்காத அறிவும் மனிதனின் இரு பெரும் சக்திகளாகும். இவை இரண்டின் உதவியைக் கொண்டு பெரும் இக்கட்டான சூழ்நிலையைக் கூட நாம் எதிர்கொள்ள முடியும். துன்பங்கள் வரலாம், போகலாம். சூழ்நிலைகள் மாறலாம். வாழ்க்கையை சுகமானதாக ஆக்கவும். திருப்திகரமாக அமைப்பதற்கும் மனிதன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வீணடிக்கக் கூடாது.*

*பரந்து விரிந்து கிடக்கும் ஆசைகளில். நல்லெண்ணங்கள் மட்டுமே விருப்பம் என்கிற வரையறைக்குள் வருகின்றன. நல்லெண்ணங்களால் உருவாகும் நல்ல விருப்பங்கள் அபரிதமான சக்தி உடையவையாகும். நற்காரியம் செய்ய விரும்பும் அல்லது மேன்மையான லட்சியத்தை அடைய விரும்பும் ஒருவன், தனக்கெதிராக லட்சக்கணக்கான விரோதிகள் வந்தாலும், பலவித அசௌகர்யங்கள் உண்டானாலும், தான் கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைந்தே தீருவான்.*

*நல்ல எண்ணம் கொண்டவன். தான் கொண்ட குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்ற முயற்சியில் இடைவிடாது. தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பான். தன் குறிக்கோளும், முயற்சியும் ஒன்று சேரும் போது அவனிடம் ஓர் ஆன்மீக ஊற்று உருவாகி, அதன் மூலம் தன் லட்சியத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டே இருப்பான்.*

*நல்ல விருப்பங்களை கொண்ட மனிதனிடம் நம்பிக்கை. உற்சாகம், துணிவு, செயலாற்றும் தன்மை ஆகியவைகளுக்கு குறைவிருக்காது. வெற்றி பெறுவதற்கான குணங்கள் அவனிடம் நிறைந்திருக்கும். தோல்வி என்பதே அவனை நெருங்காது. தீய எண்ணம் கொண்டவனின் விருப்பம், நஞ்சு போல் நம் சக்தியினை அழித்து விடும்.*

# ஆதி கதிர்காமம் கபில்வத்தை யாத்திரை ஆரம்பம்

*காரைதீவு குறுப் நிருபர் சகா*

*இலங்கையில் சித்தர்களின் தாய் வீடு என்று போற்றப்படும் ஆதி கதிர்காமம் கபில்வத்தைக்கான அற்புதமான, அமானுஷ்யமான, ஆபத்தான கபில்வத்தை காட்டுவழி யாத்திரை (13) சனிக்கிழமை காலை மொனராகலையிலிருந்து ஆரம்பமாகியது.*

*சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான 30 பக்தர்கள் அடங்கிய குழுவினர் இதில் பங்கு பற்றுகின்றனர்.*

*சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் உப தலைவர் மனோகரன் ஏற்பாட்டில் மற்றும் நமசிவாய சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகளின் வழிகாட்டலில் யாத்திரை ஆரம்பமாகியது.*

*சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரு தினங்களும் கபில்வத்தையில்*




*தங்கியிருந்து வழிபாட்டியற்றுவார்கள்.*

***கபில்வத்தையின் மகத்துவம்!***

*எந்த வித வெளியுலக தொடர்புமே இல்லாத சித்தர்களின் புனித பூமி,முருக பெருமான் தவமியற்றி, அற்புத சக்திகளை பெற்று ஆதி சமாதியாகி ஒளியில் கலந்த அற்புத இடம், நவகோடி சித்தர்களுக்கும் முருக பெருமான் தவத்தை கற்று கொடுத்த இடம், போகர் பெருமான் ஆதியில் தவமியற்றிய தபோவனம்,*

*★ கதிர்காமத்தில் ஆதியில் இருந்த போகர் பெருமான் நவ பாஷாணங்களை கொண்டு உருவாக்கிய நவ பாஷாண வேல், நவாக்ஷரி யந்திரத்தை மறைத்து வைத்த இடம், கஜபாகு மன்னன் முதன் முதலில் இலங்கையில் கண்ணகி வழிபாடு நடத்திய இடம், இன்று வரை இலங்கையில் சிம்மாசனத்தில் அமரும் அரசர்கள், அமைச்சர்கள் யாராக இருந்தாலும் இங்கு சென்று வழிபாடு நடத்திய பின் தான் பதவியில் அமர்வது சாசனமாகவே உள்ளது, (முதல் முதலில் சிங்கள வரலாற்றில் துட்டகைமுனு இங்கு தொடங்கி வைத்தான், இன்று வரை வேற்று கிரக வாசிகள் வந்து இறங்கும் அற்புத இடமாக இந்த இடம் போற்றப்படுகிறது.*

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

### தானம், தர்மம், அறம்

**19632) தானம், தர்மம் இரண்டும் ஒன்றா?** *இல்லை*

**தர்மம் என்பது என்ன?** *தர்மம் என்பது யாரும் கேட்காமல், அவருக்கே தெரியாமல் அவருக்கு செய்யக் கூடிய நன்மையாகும்.*

**19633) பசியால் வாடும் ஒருவர் தன் பசியை கூறி கேட்டால் அது என்ன?** *தானம்,*

**19634) இதில் எது புண்ணிய கணக்கில் சேரும்?** *தர்மம்*

*அவன் பசி அறிந்து அவன் கேட்காமலே அவனுக்கு உணவு அல்லது உதவி செய்வது தர்மமாகும்.*

**19635) தர்மம் என்றால் என்ன? தானம் என்றால் என்ன? அறம் என்றால் என்ன?**

*இருப்பதில் கொடுப்பது "தானம்". இருப்பதையே கொடுப்பது "தர்மம்" கொடுப்பதையும் தக்க இடம்நோக்கிக் கொடுப்பது "அறம்"..!*

**19636) தன்னிடம் இருந்த பொன் பொருளை, அள்ளி அள்ளி "வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாமல்" கொடுத்த "கொடை" யானது என்ன?** *தானம்*

**19637) அப்படி கொடுத்தவர் யார்?** *"கர்ணன்"*

*தனக்கென ஒன்றே ஒன்றுதான் உள்ளது, அதை இழந்துவிட்டால் மீண்டும் பெறமுடியாது என்னும் சூழலைக் கொண்ட, "கவச குண்டலம்"*

**19638) அந்தணன் உருவில், இந்திரன் வந்து, தந்திரம் செய்தபோது, அதனை அறுத்தெடுத்துக் கொடுத்தமை என்ன?** *"தர்மம்"*



இலங்கை மன்னன் ஆறாவது பராக்கிரமபாகு (கி.பி 1410 – 1482 ) கி.பி 1448 இல் சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயத்திற்கு யாத்திரை மேற்கொண்டு திருப்பணிகள் செய்ததுடன் இவ் ஆலயத்திற்கு மானியமாக பல கிராமங்களை வழங்கியது தொடர்பான தமிழ் கல்வெட்டு ஆலயத்தின் கர்ப்பக்கிரக சுவரில் காணப்படுவதை ( ஒருபகுதியை ) படத்தில் காணலாம். ( படம்: வடகொழும்பு தினகரன் நிருபர்)





முல்லைத்தீவு நெடுங்கேணி மாமடுச்சந்தி கற்பகா அறநெறிப் பாடசாலை 04 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இணைப்பாளர் அ. இரத்தினராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மாவிற்கு, சிவஸ்ரீ ஞானசுதன் ரூப சர்மா பொன்னாடை போர்த்தி ஞாபகார்த்த சின்னம் வழங்கினார்.

# கிழக்கின் குரல்









# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 15 வது பொது பட்டமளிப்பு விழா

## பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க பிரதம அதிதி













**(அட்டாளைச்சேனை தினகரன், சாய்ந்தமருது விசேட, ஒலுவில் கிழக்கு தினகரன்,கல்முனை மத்திய தினகரன், நிந்தவூர் குறூப் நிருபர்கள்)**

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதினைந்தாவது பொதுப் பட்டமளிப்பு விழா பல்கலைக்கழகத்தின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த இரண்டு தினங்களாக இடம்பெற்றது.

ஐந்து அமர்வுகள் கொண்டதாக இரண்டு நாட்கள் இடம்பெற்ற இப்பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழகத்தின் வேந்தர் பாயிஸ் முஸ்தபா முன்னிலையில் இடம்பெற்ற இப் பட்டமளிப்பு விழாவின், முதல் நாள் அமர்வின்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பாரியாரும், களனி பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி சிரேஷ்ட விரிவுரையாருமான பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு பட்டமளிப்புக்கான சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

இதேவேளை, முதல் நாள் நிகழ்வான கடந்த சனிக்கிழமை மூன்றாவது அமர்வின்போது உயர் நீதிமன்ற நீதியரசர் திலீப் நவாஸ் விஷேட உரையாற்றினார். இதுதவிர, கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் த. ஜெயசிங்கம் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பட்டமளிப்பு தொடர்பான உரைகளை நிகழ்த்தினர்.

கலை கலாசார பீடம், வர்த்தக முகாமைத்துவ பீடம், தொழில்நுட்ப பீடம், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடம், பொறியியல் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் போன்றவற்றில் பட்டக் கல்வியினை மேற்கொண்ட மாணவர்கள் இதன்போது பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை, இப்பல்கலைக்கழகத்தின் வியாபார நிருவாகம், முகாமைத்துவம், தமிழ் ஆகிய துறைகளில் பட்டப்பின் கற்கைகளை மேற்கொண்டவர்களுக்கான முதுமாணி, முதுதத்துவமாணி உள்ளிட்ட பட்டங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

முதல் நாளின் முதலாம் அமர்வின்போது கலை கலாசார, தொழில்நுட்ப பீடங்களைச் சேர்ந்த 395 மாணவர்கள் தமக்கான பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இரண்டாம் அமர்வில் வர்த்தக முகாமைத்துவ பீடத்தினைச் சேர்ந்த 371 மாணவர்களும், மூன்றாம் அமர்வின்போது இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தினைச் சேர்ந்த 380 மாணவர்களும் தமக்கான பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

அத்தோடு, இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை நான்காவது அமர்வின்போது பிரயோக விஞ்ஞானம், பொறியியல் ஆகிய பீடங்களைச் சேர்ந்த 332 மாணவர்கள் தத்தமது பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். ஐந்தாவது அமர்வில் கலை கலாசார முகாமைத்துவ வர்த்தக பீடங்களில் இணைந்து கல்வி கற்ற 374 வெளிவாரி மாணவர்களும் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இப்பட்டமளிப்பு விழாவின் போது மாணவர்களின் உயர் அடைவு மட்டத்தினை மையப்படுத்தி விஷேட விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன. கலை கலாசார பீடத்தில் 2015/2016 ஆம் கல்வி ஆண்டின் அரசியல் மற்றும் சமாதான கற்கையில் சிறந்த மாணவருக்கான கலாநிதி எம்.எல்.ஏ.காதர் விருதினை முகம்மட் அலி பாத்திமா அஸ்மியா பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, 2015/2016 ஆம் கல்வி ஆண்டின் தமிழ்த்துறையில் சிறந்த மாணவருக்கான பேராசிரியர் கைலாசபதி விருதினை முகம்மட் ஹூசைன் பாத்திமா றிஸ்லா பெற்றுக் கொண்டார். அத்தோடு இதே கல்வி ஆண்டின் இந்து கலாசார கற்கைக்கான சிறந்த மாணவருக்கான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஞாபகார்த்த சிறப்பு விருதினை பேபி சாலினி இராமக்கவுண்டர் பெற்றுக் கொண்டார்.

## மீன் பிடி படகுகள் உடைந்து சேதம்

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

மட்டக்களப்பு பூநொச்சிமுனை கடலில் சனிக்கிழமை (13) நள்ளிரவு ஏற்பட்ட பாரிய கடல் அலையினால் சில மீன் பிடி படகுகள் உடைந்து சேதமடைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுழல் காற்றுடன் பாரிய அலை ஏற்பட்டுள்ளது. இதனால் இரு இயந்திர மீன்பிடி படகுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், ஒரு மீன்பிடி படகின் இயந்திரமும் சேதமடைந்துள்ளது.

இதுபோன்று காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரையிலும் மீன்பிடி படகுகள் சேதமடைந்துள்ளதாக, மீனவர்கள் தெரிவித்தனர்.

## கிண்ணியாவில் விஞ்ஞான செய்முறை பயிற்சி பட்டறை

**(கிண்ணியா தினகரன் நிருபர்)**

க.பொ.த.சாதாரண தர பரீட்சை எழுத இருக்கும் கிண்ணியா கல்வி வலயத்திற்கு உட்பட்ட மாணவர்களுக்கான விஞ்ஞான செய்முறைப் பயிற்சி பட்டறை கிண்ணியா மத்திய கல்லூரியில் வெள்ளிக்கிழமை (12) மிக சிறப்பாக நடைபெற்றது.

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.நஷுஹர்கான் இந்நிகழ்வில் அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார். அதேவேளை, கிண்ணியா வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். நிஜாமுதீன் விசேட அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இப்பயிற்சிப் பட்டறையில் கிண்ணியா வலயத்தைச் சேர்ந்த சுமார் 1500 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றி பயன்பெற்றார்கள்.

## கசிப்புடன் நால்வர் கைது

**(மட்டக்களப்பு குறூப் நிருபர்)**

பெண்ணொருவர் உட்பட நால்வர் 34750 மில்லி லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம்.சியாம் தெரிவித்தார்.

இச் சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிற்குட்பட்ட நொச்சிமுனையில் இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில், மாவட்ட இரகசிய தகவல் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய போதை வஸ்து ஒழிப்பு பிரிவினர் சனிக்கிழமை (13) மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின்போது நாவற்குடா நொச்சிமுனை 5ஆம் குறுக்குத் தெருவில் நீர்நிலையொன்றினுள் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த கசிப்பு கொள்கலன்களை பொலிசார் மீட்டுள்ளதுடன், சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

## மருதமுனையில் மீன்பிடி வலைகள் வழங்கி வைப்பு



**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**

மருதமுனை மக்பூலியா கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு இலவசமாக மீன்பிடி வலைகளை வழங்கி வைக்கும் நிகழ்வு, மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.எம். பாறூக் தலைமையில் வியாழக்கிழமை (11) நடைபெற்றது.

மருதமுனை பிரதேசத்தில் உள்ள கரை வலை மற்றும் நன்னீர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் மீன்பிடி அமைச்சுக்கு வழங்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, கல்முனை மாவட்ட மீன்பிடி காரியாலயத்தின் ஊடாக ஒரு தொகுதி வலைகள் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாகத் அலி, கல்முனை வலய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.ரி.ஆதம்பாவா, சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மலிகா கலிலூர் றஹீம், மீன்பிடி காரியாலய நீரியல் வள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. தூபா உட்பட மீனவர் சங்க உறுப்பினர்கள், மீனவர் குடும்பத்தினர் என பலர் இதில் கலந்து கொண்டனர்.

## கண் சத்திர சிகிச்சைக்கான இயந்திரம் அன்பளிப்பு

**(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)**



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் நீண்ட நாள் குறையாக இருந்து வரும், கண் சத்திர சிகிச்சைக்கான நுணுக்குக்காட்டி இயந்திரம் ஒன்று, கொமேர்சியல் வங்கியின் சமூக நலன் பிரிவால் வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை அத்தியட்சகர் மற்றும் ஆஸ்பத்திரி குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நவீன இயந்திரத்தை வைபவ ரீதியாக கையளிக்கும் வைபவம் சென்ற வாரம் வைத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ். ரீ.ஆர்.ரஜாப் தலைமையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் கொமேர்சியல் வங்கியின் கிழக்கு பிராந்திய முகாமையாளர் அருளம்பலம் ஜெயகுமார், கிளை முகாமையாளர் கே.சாந்திகுமார் ஆகியோர் இந்த மைக்ரோஸ்கோப் இயந்திரத்தை வைத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ். ரீ.ஆர்.ரஜாப்பிடம் கையளித்தனர்.. இந் நிகழ்வில் கொமேர்சியல் வங்கியின் கிழக்கு பிராந்திய முகாமையாளர் அருளம்பலம் ஜெயகுமார், கொமேர்சியல் வங்கி சமூக அபிவிருத்திகளுக்கு ஆற்றிவரும் அளப்பரிய மனிதாபிமான சேவைகளை கௌரவித்து அன்னாருக்கு வைத்தியட்சகர் டாக்டர் ரஜாப் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார்.

## இளம் கர்ப்பிணி தாய் மரணம்

**(கந்தளாய் தினகரன் நிருபர்)**

திருகோணமலை பாட்டாளிபுரக் கிராமத்தைச் சேர்ந்த இளம் கர்ப்பிணித் தாயொருவர், குழந்தை பிரசவத்துக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

24 வயதுடைய பெண் ஒருவரே வெள்ளிக்கிழமை (12) உயிரிழந்துள்ளார். மூதூர் தள வைத்தியசாலையில் விசேட பெண் வைத்திய நிபுணர், வருகைதராமையால் மிகவும் ஆபத்தான முறையில் குழந்தையினை பிரசவித்ததன் பின்னர், அதீத குருதிப் போக்கு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து குழந்தையும் தாயும் திருகோணமலை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் குறித்த பெண்ணின் மரணத்துக்கு நீதி கோரி குடும்பத்தினர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வடக்கின் உதயம்

## ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் தீ பற்றியதால், பயணித்தோர் பதற்றம்



(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா நகர மத்தியில் நேற்று (13 ) மாலை மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீ பற்றி எரிந்தது. இதன்போது, அதில் பயணித்தவர்கள் எவ்வித பாதிப்புமின்றி உயிர் தப்பினர்.

ஏ9 வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்த ரிவிஎஸ் ரக மோட்டார் சைக்கிள், மணிக்கூட்டு கோபுரத்திற்கு அண்மித்த பகுதியில் சென்ற போது திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. அதில், பயணித்த கணவன், மனைவி, பிள்ளை உடனடியாக மோட்டர் சைக்கிளிலிருந்து இறங்கியதால், அவர்களுக்கு எவ்வித உயிராபத்துகளும் ஏற்படவில்லை.

தீ பற்றிய மோட்டார் சைக்கிளின் தீயை கடும் போராட்டத்திற்கு மத்தியில், பொதுமக்கள் கட்டுப்படுத்தினர்.

இதேவேளை, மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் இச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

## இந்திய மீனவர்களால் ஏற்படும் அழிவுகள் இழப்பீடுகள் எதற்கும் ஈடாகாதவை

இந்திய மீனவர்களால் ஏற்படுத்தப்படும் அழிவுகளுக்கு இழப்பீடுகள் எவையும் ஈடாக அமையாதென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சிலாபத்துக்கு விஜயம் (13) மேற்கொண்ட அமைச்சர்,அங்குள்ள கடற்றொழிலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர்,

இலங்கையின் கடல் வளங்களை அழிக்கும் வகையில் இந்தியக் கடற்றொழிலாளர்கள் மேற்கொள்ளும் சட்டவிரோத இழுவைமடி வலைத் தொழிலை கட்டுப்படுத்த வேண்டும். இவர்களால் ஏற்படுத்தப்படும் அழிவுகளுக்கு இலங்கையர்களுக்கு இழப்பீடுகள் வழங்குவது மட்டும் போதுமானதல்ல.



இந்திய கடற்றொழிலாளர்கள் எல்லைதாண்டி ஊடுருவிச் செய்யும் அத்துமீறல்களால்,சிலாபம், புத்தளம் பிரதேச கடற்றொழிலாளர்கள் மாத்திரமன்றி வட மாகாண கடற்றொழிலாளர்களும் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர். இலங்கையின் கடல்வளங்களை கணப்பொழுதில் அள்ளிச் செல்லும் இச்செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது. இவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியம்.

இந்திய கடற்றொழிலாளர்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்குவதாக தெரிவிக்கப்பட்ட சந்தேகத்தை நிராகரித்த அமைச்சர், உள்ளூர் மீனவர்களின் நலன்களுக்கு எதிராக அரசாங்கம் எதையும் செய்யாது என உறுதியளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது, இலங்கை கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

சிலாபம் மீன் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள சந்தை கட்டிடத்தில் வியாபார நடவடிக்கையை முன்னெடுத்தல், சிலாபம் துறைமுகத்தில் பொருத்தப்பட்டிருந்த வானொலி தொடர்பாடல் கருவியை பழுதுபார்த்து செயற்படுத்தல், பேர்ள் எக்ஸ்பிரஸ் நட்டஈட்டினை சிலாபம் கடற்றொழிலாளர்களுக்கும் கிடைக்கச் செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

## மின்சார சபையினரின் அசமந்தம்; வவுனியாவில் மக்கள் அவதி

(ஓமந்தை விஷேட நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மாகாறம்பைக்குளம், காத்தார்சின்னக்குளம், சிறிராமபுரம் ஆகிய கிராமங்களின் ஒரு பகுதியில்,நான்கு நாட்கள் தொடர்ச்சியாக மின்சாரம் தடைப்பட்டதால்,மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகினர்.

மேலும்,பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், மின்சாரத்தை மூலதனமாக கொண்டு தொழில் புரியும் பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டது.

மின்சாரம் தடைப்பட்டிருப்பது தொடர்பாக வவுனியா மின்சார சபை மற்றும் வட மாகாண மின்சார சபையின் வாடிக்கையாளர் சேவை நிலையத்திற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இருந்தபோதும்,எவ்வித பயனும் கிடைக்கவில்லை என மக்கள் கவலை தெரிவித்தனர்.

## முள்ளிவாய்க்காலை நோக்கி அமைதிப் பவனி

(மாங்குளம் குறூப் நிருபர்)

முள்ளிவாய்க்கால் (2009) நினைவுகளை அனுஷ்டிக்கும் வகையில் இம்மாதம் 12 முதல், 18 வரை விஷேட வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வருடந்தோறும் அனுஷ்டிக்கப்படும் இந்நிகழ்வுகள் இம்முறையும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன. இதனையொட்டி,



முள்ளிவாய்க்கால் முற்றத்திலே மாபெரும் நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம்பெறுவது வழக்கம். இதன் ஒரு அங்கமாக, முல்லைத்தீவிலிருந்து முள்ளிவாய்க்கால் நோக்கிய அமைதி ஊர்வலமும் கடந்த 12இல், ஆரம்பமாகியுள்ளது. நேற்று முன்தினம் 12 காலை தொடங்கிய இந்த ஊர்திப் பவனி வவுனியா சென்று, அங்கிருந்து மன்னாரையடைந்து வெள்ளாங்குளம் ஊடாக மல்லாவி நகரை அடைந்தது.

இந் நிலையில் நேற்று (14) காலை மல்லாவி நகரிலிருந்து மூன்று நாள் பயணம் ஆரம்பிக்கப்பட்டது

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளுக்கும் செல்லும் இந்த ஊர்தி மீண்டும் கிளிநொச்சி மாவட்டம் ஊடாக முள்ளிவாய்க்கால் முற்றத்தை மே 18 வந்தடையுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## மன்னார் தம்பபவனி காற்றுச்சக்தி செயற்றிட்டத்திற்கு மக்கள் எதிர்ப்பு



(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் தம்பவனி காற்றுச்சக்தி செயற்திட்டத்தை விரிவாக்கும் திட்டத்துக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.இந்த உத்தேச திட்டம் சுற்றாடலுக்கு ஏற்படுத்தும் பாதிப்புக்கள் குறித்து கருத்துக்களை தெரிவிக்குமாறு பொது மக்கள் கோரப்பட்டிருந்தனர். இந்தக் கோரிக்கையை கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆர். ஏ.எஸ்.ரணவிக்க விடுத்திருந்தார். இந்நிலையிலேயே, இத்திட்டத்தின் முதலாம் கட்டத்திட்டத்துக்கு எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

இதற்கமைய மன்னார் மாவட்டத்திலிருந்து சுமார் ஏழாயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள், மன்னார் தம்பவனி காற்றுச் சக்தி செயற்றிட்டத்தின் கொள்ளளவை விரிவுப்படுத்தப்பட வேண்டாமென, கையெழுத்திட்டு மன்னார் பிரஜைகள் குழுவினூடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளனர்.

## ஒட்டுசுட்டானில் புதையல் தோண்ட முற்பட்ட சந்தேகத்தில் ஆறுபேர் கைது

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

ஒட்டுசுட்டானில் புதையல் தோண்ட முற்பட்ட சந்தேகத்தில் ஆறுபேர் கைது செய்யப்பட்டனர். கனகரத்தினபுரம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டோர்களே (13) இவ்வாறு கைதாகினர்.

கனகரத்தினபுரம் பேராற்றினை அண்மித்த பகுதியில் தொல்பொருள் திணைக்களத்திற்கு உரித்தான இடத்தில், புதையல் தோண்டப்படுவதாக ஒட்டிசுட்டான் பொலிஸாருக்கு கிடைத்தது. இதையடுத்து, அவ்விடத்திற்கு சென்ற பொலிஸ் குழுவினர், அங்கு புதையல் தோண்ட முற்பட்ட குழுவினை கைது செய்தனர். கைதானவர்களில், கனகரத்தினபுரம், மாத்தளையைச் சேர்ந்த தலா ஒவ்வொருவரும்,கிளிநொச்சியைச்சேர்ந்த நால்வரும் உள்ளடங்குகின்றனர்.

இவர்களிடமிருந்து புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட சுத்தியல், மண்வெட்டி மற்றும் தொல்பொருள் ஆபரணம் ஒன்றும் மீட்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட ஆறு பேரும், சான்றுப் பொருட்களுடன் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்களை 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது மேலதிக விசாரணைகளை ஒட்டிசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவதாண்டவ நிகழ்வுகள்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில்,சிவதாண்டவம் நடன நிகழ்வு இடம்பெற்றது. இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமய தொண்டர் சபையின் கலை பண்பாட்டுப் பிரிவின் ஒழுங்கமைப்பில், இந்நிகழ்வு இடம்பெற்றது. கடந்த (10)இல், ஆதிலிங்கேஸ்வர பெருமான் ஆலயத்தின் 12ஆம் நாள் மண்டலாபிஷேக பெருவிழா இடம்பெற்ற நிலையில், அதனையொட்டிய சிவதாண்டவ நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றன.



## குமுதினியின் நினைவேந்தல் நிகழ்வு ஆத்மசாந்தி வேண்டி பூஜை, திருப்பலிகள்

(கோப்பாய் குறூப் நிருபர்)

குமுதினி படுகொலையின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று (15) திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வு இன்று காலை குமுதினியில் படுகொலை செய்யப்பட்ட நினைவாலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8 .15 மணியளவில் நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி திருப்பலியும் , சமநேரத்தில் மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள வீரபத்திர பிள்ளையார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி சிறப்பு பூஜையும் இடம்பெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து காலை குமுதினி படுகொலை நினைவேந்தல் குழுமத்தின் நெடுந்தீவு பிரதேச தலைவர் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறுவுள்ளன. நினைவுத் தூபிக்கான நினைவுச் சுடர் ஏற்றல் மற்றும் மலர் அஞ்சலி செலுத்துதல் ஆகிய நிகழ்வுகளுடன் பசுந்தீவு ருத்திரனின் "குருதியின் குமுறல்கள்" என்ற கவிதை நூலும் இன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நிகழ்வின் இறுதியில் நினைவாலய வளாகத்தில் நினைவு மரநடுகையும் இடம்பெறவுள்ளது.

## சுகாதார சீர்கேடுகள்: சில உணவகங்களுக்கு சீல்

(யாழ். விசேட நிருபர்)

யாழ். ந கர் பகுதியை அண்மித்த பகுதி யில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த இரு உணவகங்களுக்கு நீதிமன்ற உத்தரவின் கீழ், பொது சுகாதார பரிசோதகரால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

யாழ். நகர் பகுதியில் உள்ள உணவகங்களில், யாழ். மாநகர சபை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனை மேற்கொண்டனர்.இதன்போது, சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரு உணவகங்களுக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளையடுத்து உணவக உரிமையாளர்களை தலா ஒரு இலட்ச ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்று, இரண்டு உணவகங்களுக்கு சீல் வைக்குமாறு உத்தரவிட்டது. இதுகுறித்த வழக்கு எதிர்வரும் ஜூன் (28) திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை யாழ். ஆனைப்பந்தி பகுதியில் அமைந்திருந்த கொத்துக் கடையும் யாழ்.நீதிமன்ற உத்தரவில் கடந்த வெள்ளிக்கிழமை சீல் வைக்கப்பட்டது.

யாழ். நகர் பகுதியை அண்டிய பகுதிகளில் இயங்கி வந்த மூன்று உணவகங்களுக்கு நீதிமன்ற உத்தரவில் சீல் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை தமிழரசுக்கட்சி கூட்டத்தில் இருவருக்கிடையில் மோதல்

(யாழ். விசேட நிருபர்)

இலங்கை தமிழரசு கட்சி கூட்டத்தில், தன்மீது தாக்குதல் நடத்தப்பட்ட தாகக் கூறிய ஒருவர், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னரே, இவர் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருகிறார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதி கிளைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில், கட்சி உறுப்பினர் இருவருக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதையடுத்தே, இந்நபர் தாக்கப்பட்டார். தாக்கப்பட்டவர்,பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## சத்துணவுத் திட்டத்தில் முறைகேடுகளா? உரிய விசாரணையின் பின்னர் நடவடிக்கை

### வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர்

(கோப்பாய் குறூப் நிருபர்)

வட மாகாண பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற சத்துணவு திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெறுவதாக வடமாகாண கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அ.உமா மகேஸ்வரன் தெரிவித்தார்.

வட மாகாண பாடசாலைகளில் மதிய நேர சத்துணவு திட்டத்தில் முறைகேடுகள் இடம் பெறுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.இது தொடர்பில் அவரிடம் வினவிய போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்படும் மதியநேர சத்துணவு திட்டத்தில்,முறைகேடுகள் இடம்பெறுவதுவாக எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடமாகாண பாடசாலைகள் சிலவற்றிலும் இம்முறைகேடுகள் இடம்பெறுவது பற்றித் தெரிய வந்துள்ளது. தீவக வலயப் பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சத்துணவு திட்டத்தில், முறைகேடு இடம் பெற்றமை தொடர்பில் ஆதாரங்களுடன் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

குறித்த பாடசாலையின் அதிபரே மாணவர்களுக்காக வழங்கப்படும் சத்துணவு நிதியை முறைகேடாக கையாண்டுள்ளார். இது தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

அது மட்டுமல்லாது மேலும் சில பாடசாலைகள் தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இம்முறைப்பாடுகளை வழங்கியவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி ஆதாரங்களை பெற்றுக் கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறான நிலையில் பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவுத் திட்டத்தை கண்காணிப்பதற்கும் சோதனையிடுவதற்கும் விசேட குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



தென்மராட்சிமந்துவில் சின்னச்சந்தைப் பகுதியிலிருந்த 150 வருடங்கள் பழமை வாய்ந்த புளிய மரம், அண்மையில் அடியோடு முறிந்து விழுந்துள்ளது. விழுந்து கிடக்கும் மரத்தை படத்தில் காணலாம். (படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)



ஆத்ம ஞானி அஸ்ஸெய்யிது ஜமாலியா கலீல் அவுன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுசைனிய்யுல் அல் ஹாஷிம்மிய்யின் 88 வது பிறந்த தின விழா கடந்தவாரம் இலங்கை, டுபாய், சிங்கப்பூர் உட்பட இந்தியாவின் பல பகுதிகளிலும் மனித நேய மத நல்லிணக்க, சமரச விழாவாக அவர்களது பக்தர்களால் கொண்டாடப்பட்டது. இலங்கையில் வெலிகமயிலுள்ள அவரது இல்லத்திற்கு டுபாயிலிருந்து வருகை தந்த கலீஃபா எம். ஜே. முஹம்மது இக்பால், இ யூ மு லீக் ஆலோசகர் வெள்ளம் ஜி. எம். ஜே. அப்துல் ரஃவூப், அஸ் செய்யது யாஸீன் அலி மௌலானா, வெளிகம மேனிலைப் பள்ளி இயக்குநர் செய்யிது வாரிஸ் அலி மௌலானா ஆகியோர் வாழ்த்து பெற்றனர். (படம்: திருச்சி ஷாகுல் ஹமித்)



கொழும்பு மொரட்டுவ ராவத்தாவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரத்ன, மனோ கணேசன் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.



தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அன்னையர் தினத்தையொட்டி நேற்று கோபாலபுரம் இல்லத்திற்குச் சென்று தனது தாயார் தயாளு அம்மாளுக்கு வாழ்த்து தெரிவித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார்.
(படம்: திருச்சி ஷாகுல் ஹமித்)


**இலங்கை சனநாயக, சோஷலிச குடியரசு**

# செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு (PIU) – வடமத்திய மாகாணம்
# சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம் – மேலதிக நிதி (HSEP/AF)

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| | |
|---|---|
| **திகதி:** | 2023 மே 15 |
| **கடன்/மானிய இல. மற்றும் தலைப்பு** | கடன் 4121-SRI - சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | **1.** HSEP(AF)/PIU/NCP/POL/W-9/2023/01<br>W-9 (AF) வேலைகளுக்கான பெறுகை – பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள 4 எண்ணிக்கையான PMCU/DH என்பவற்றின் நிர்மாணம் / புதுப்பித்தல் |
| **தொகுதிகள் (Lots)** | Lot. A: பக்கமூன DHB<br>Lot. B: வெஹெரகல PMCU<br>Lot. C: அத்தனகடவல DHC<br>Lot. E: ஜயந்திபுர DHC |
| **விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள்** | 2023 ஜூன் 13 |

1. சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக (மேலதிக நிதியிடல்) இலங்கை சனநாயக, சோஷலிச குடியரசு அரசாங்கமானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) நிதியுதவியைப் பெற்றுள்ளது. இந்நிதியின் ஒரு பகுதியானது மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்த கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள அங்கத்துவ நாடுகளும் இவ்விலைமனுக்கோரலில் பங்குபெற்றலாம்.

2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள தற்போதுள்ள கட்டிடங்களின் புனருத்தாரண வேலைகள் மற்றும் வசதிகள் மற்றும் சுகாதார நிலையங்களின் நான்கு ஆரம்ப சுகாதார பராமரிப்பு அலகுகளுக்கான (PMCU) சில புதிய நிர்மாணங்கள் உட்பட்ட நிர்மாணங்கள் மற்றும் பூர்த்தியாக்கல் வேலைகளுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சின் செயலாளர் அலுவலகத்தின் கீழ் (வேலை கொள்வோர்), கொழும்பு-08, இல. 3/19, கின்சி வீதி, சுகாதார முறைமைகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின், செயற்றிட்டப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| தொ. இல. | ஒப்பந்தத்தின் பெயர் | லொட் | சுகாதார நிலையத்தின் பெயர் | வகுதி |
|---|---|---|---|---|
| 1. | **HSEP(An/PIU/NCP/POL/W-9/ 2023/01**<br>W-9 (AF) வேலைகளுக்கான பெறுகை – பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள 4 எண்ணிக்கையான PMCU/DH என்பவற்றின் நிர்மாணம் / புதுப்பித்தல் | LOT A | பக்கமூன | DHB |
| | | LOT B | வெஹெரகல | PMCU |
| | | LOT C | அத்தனகடவல | DHC |
| | | LOT E | ஜயந்திபுர | DHC |

3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிலையான விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பாவித்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகை வழிகாட்டிகளுக்கமைவாக ஒரு கடித உறையுடன் ஒற்றைக் கட்ட செயல்முறைக்கமைய திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் விலைமனு ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ள தகுதி வாய்ந்த நாடுகளுக்கு திறக்கப்பட்டுள்ளன.

4. பின்வரும் தகைமைகளுடன் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மட்டும் இந்த விலைமனுக் கோரலில் பங்குபற்றலாம்.

**அ. நிதியிடல்**

(i) முன்னைய நிதியியல் ஆற்றுகை –விலைமனுதாரரின் தற்போதைய நிதி நிலைமையை விபரப்படுத்துவதற்காக கடந்த மூன்று வருடங்களுக்கான (2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022) கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள்: கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கை

- கூட்டாண்மை மற்றும் ஏக உரிமையாளர்கள்: கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கை அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்ட வருமான வரி திரும்பல் கடிதத்துடன் பட்டயக் கணக்காளர் / அங்கீகரிக்கப்பட்ட கணக்காளரினால் சான்றுபடுத்தப்பட்ட நிதி அறிக்கை

(ii) சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு – விலைமனுதாரரின் (பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள் உட்பட) ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வானது (பின்வரும் அட்டவணையைப் பார்க்க) நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது கடந்த 3 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறாக பிரயோகிக்கப்படும்)

| லொட் இல. | சுகாதார நிலையத்தின் பெயர் - தொகுதிகள் | இலங்கை ரூபா (மில்.) |
|---|---|---|
| LOT A | பக்கமூன DHB | 91.24 |
| LOT B | வெஹெரகல PMCU | 41.97 |
| LOT C | அத்தனகடவல DHC | 90.70 |
| LOT E | ஜயந்திபுர DHC | 108.69 |

(iii) நிதியிடல் வளம் - விலைமனுதாரர் (ஏற்புடையதாக இருந்தால் - பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள்) கீழே காட்டப்பட்டுள்ள வகையில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒப்பந்தங்களின் நிதியியல் கடப்பாட்டு பொறுப்புகள் தவிர்த்து இந்த ஒப்பந்தத்திற்கான மொத்தத் தேவைப்பாடாக அல்லது அதிகமாகக் கொண்டிருத்தல் வேண்டும். (கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறாக பிரயோகிக்கப்படும்)

| லொட் இல. | சுகாதார நிலையத்தின் பெயர் - தொகுதிகள் | இலங்கை ரூபா (மில்.) |
|---|---|---|
| LOT A | பக்கமூன DHB | 13.12 |
| LOT B | வெஹெரகல PMCU | 7.24 |
| LOT C | அத்தனகடவல DHC | 13.04 |
| LOT E | ஜயந்திபுர DHC | 15.62 |

**ஆ. அனுபவம்**

(i) இதனையொத்த தன்மை மற்றும் அளவுடனான ஒப்பந்தங்கள் - விலைமனுதாரர் (பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள் உட்பட – ஏற்புடையதானால்) இதனையொத்த உத்தேச வேலைகளில் கடந்த 5 வருடங்களில் திருப்திகரமாக அல்லது போதுமான அளவில் ஒப்பந்தக்காரராக அல்லது இணை பங்குதாரராக அல்லது உப ஒப்பந்தக்காரராக ஆகக்குறைந்தது ஒரு ஒப்பந்தத்தையாவது சித்திகரமான முறையில் பங்குபற்றி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் பங்குபற்றல் பெறுமதி பின்வரும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் மேற்பட்டதாக இருத்தல் வேண்டும். (கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறாக பிரயோகிக்கப்படும்)

| லொட் இல. | சுகாதார நிலையத்தின் பெயர் - தொகுதிகள் | இலங்கை ரூபா (மில்.) |
|---|---|---|
| LOT A | பக்கமூன DHB | 36.50 |
| LOT B | வெஹெரகல PMCU | 16.79 |
| LOT C | அத்தனகடவல DHC | 36.28 |
| LOT E | ஜயந்திபுர DHC | 43.48 |

(ii) ஒரு விலைமனுதாரர் பல வெற்றிகரமான (குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கணிசமான பதில்களைப் பெறும்) விலைக்கோரல்களைச் சமர்ப்பித்தால், விலைமனுதாரரின் திறன் மதிப்பீட்டுக் கொள்ளளவை மதிப்பீடு செய்வதற்கு பின்வரும் தேவைப்பாடுகளை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

- சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு
- நிதியியல் வளங்கள்
- ஒதுக்க வேண்டிய உபகரணங்கள் மற்றும்
- பணிக்கமர்த்த வேண்டிய ஆளணியினர்

முழுமையான தகவுத்திறன் தகைமைகள் விலைமனு ஆவணங்களில் விபரப்படுத்தப்பட்டுள்ளன.

5. மேலதிக தகவலைப் பெறுவதற்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிப்பதற்கும் விலைமனுதாரர்கள் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00) பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

**செயற்றிட்ட பொறியியலாளர்,**
**சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம்,**
**பழைய MOH கட்டிடம்,**
**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**பண்டாரநாயக்க மாவத்தை,**
**அனுராதபுரம், இலங்கை.**
**மின்னஞ்சல் : pe.hsep.ncp@gmail.com**
**தொலைபேசி/ தொலைநகல்: 025-2227308**

6. ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றை நிறைவேற்றல் வேண்டும்.

- W-9 (AF) வேலைகளுக்கான பெறுகை – பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள 4 எண்ணிக்கையான PMCU/DH என்பவற்றின் நிர்மாணம் / புதுப்பித்தல் எனும் வேலைக்கு விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்குமாறு மேற்படி முகவரிக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்தல்.
- மீளளிக்கப்படாத கட்டணமாக பின்வரும் 08ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை 2023 ஜூன் 09ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் செலுத்தல் வேண்டும்.
- பணக் கொடுப்பனவு முறையானது வங்கி வரைவாக அல்லது செயற்றிட்டப் பணிப்பாளர், சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம், இல. 3/19, கின்சி வீதி, கொழும்பு-08 எனும் பெயருக்கு காசாளரால் சான்றுபடுத்திய காசோலையாக அல்லது கொழும்பு-10, ரீஜன்ட் வீதி, இலங்கை வங்கியின் 7040799 எனும் கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணமாக நேரடியாக வைப்புச் செய்தல் வேண்டும்.

7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் வேலைக் கொள்வோரால் 2023 ஜூன் 02ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இடம்பெறும். சகல விலைமனுதாரர்களும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு திட்டவட்டமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

8. உங்கள் விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு:

**செயற்றிட்ட பொறியியலாளர்,**
**சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம்,**
**பழைய MOH கட்டிடம்,**
**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**பண்டாரநாயக்க மாவத்தை,**
**அனுராதபுரம், இலங்கை.**

எனும் முகவரிக்கு இறுதித் தினமான 2023 ஜூன் 13ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெறப்பட்ட வங்கி உத்தரவாதத்துடன் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விலைமனுப் பிணை முறியொன்றுடன் அனுப்புதல் வேண்டும். இந்தப் பிணை முறியானது விலைமனு படிவத்தின் 4ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள வடிவில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் ''செயற்றிட்டப் பணிப்பாளர், சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம் - மேலதிக நிதியிடல்'' எனும் பெயரில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

| லொட் | சுகாதார நிலையத்தின் பெயர் | விலைமனுப் பிணை முறி இல. ரூபா | மீளளிக்கப்படாத கட்டணம் இல. ரூபா |
|---|---|---|---|
| LOT- A | பக்கமூன DHB | 900,000.00 | 12,000.00 |
| LOT- B | வெஹெரகல PMCU | 400,000.00 | 6,000.00 |
| LOT -C | அத்தனகடவல DHC | 900,000.00 | 11,500.00 |
| LOT -E | ஜயந்திபுர DHC | 1,080,000.00 | 13,500.00 |

9. சமுகமளித்திருக்கும் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் இறுதி வேளையின் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும்.

10 விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும். (2023 ஒக்டோபர் 11ஆம் திகதி வரை) விலைமனு பிணை முறியானது விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 148 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். (2023 நவம்பர் 08ஆம் திகதி வரை)

11. விலைமனுக்களின் தயாரிப்பு அல்லது ஒப்படைப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கிரயச் செலவுகள் அல்லது செலவினங்களுக்கு சுகாதார அமைச்சின் சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம் அல்லது வடமத்திய மாகாண சபையின் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் அல்லது சுகாதார அமைச்சு எவ்விதத்திலும் பொறுப்பாகமாட்டாது.

12. உள்நாட்டு விலைமனுதாரர்கள் ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு முன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
**சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம் - மேலதிக நிதியிடல்,**
**இல. 3/19, கின்சி வீதி,**
**கொழும்பு-08, இலங்கை.**
**தொலைபேசி இல. +94 112 697 173, தொலைநகல் இல. +94 112 697 163**
**மின்னஞ்சல்: pmu@hsep.lk**
**திகதி: 2023 மே 15**






வானொலி, மேடை, திரைப்படம் என நீண்டகாலமாக கலைப்பணி புரிந்த கலாபூஷணம், கலைமாமணி கே. சந்திரசேகரன் அவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் கடந்த சனிக் கிழமை நடைபெற்றது. இதில் பாராளுமன்ற உறுப் பினர் மனோ கணேசன், புரவலர் ஹாசிம் உமர் உட்பட பலர் அஞ்சலி செலுத்தினார்கள்.



தென்னிந் தியாவில் உள்ள UNHCR அமைப்பின் கள அலுவலகத் தலைவர் எஸ்.வலன் மைக்கேலை துணை உயர் ஆணையர் டாக்டர் வெங்கடேஷ்வரன் அ ண்மையில் சந்தித்தார். இவர்கள் தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் தொடர்பான பிரச்சினை கள் மற்றும் குறிப்பாக அவர்களின் தன்னார்வத் திருப்பி அனுப்பும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்தார்கள். UNHCR அகதிகள் திருப்பி அனுப் பும் திட்டத்தின் (RRP) கீழ் இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதில் நெருக்கமான ஒத்துழைப் புடன் பணிபுரிந்து வருகிறது.

## முத்தமிழறிஞர் கருணாநிதி
# நூற்றாண்டு கட்டுரைப் போட்டி திகதி நீடிப்பு



தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் முத்தமிழ் அறிஞருமான கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களின் ஜனன தின நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கொழும்பில் மாபெரும் விழாவொன்று நடை பெறவுள்ளது. அதனை முன்னிட்டு கட்டுரை உள்ளிட்ட போட்டிகளும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

"தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்றுத்தந்து பெருமை சேர்த்த முத்தமிழ் அறிஞர் மு கருணாநிதிக்கு புகழாரம்" என்ற தலைப்பில் 1000 1200 தமிழ் சொற்களுக்கு உள்ளடங்கியதாக கட்டுரைகள் இடம்பெற வேண்டும். பாடசாலைகளில் 912 வகுப்புக ளில் கற்கும் மாணவர்கள் (பாடசாலை அதி பரின் சிபாரிசுடனும்) மற்றும் ஏனைய தமிழ் ஆர்வலர்களும் தனியாகவும் ஆக்கங்களை கட தாசியில் ஒரு பக்கமாக டைப் செய்து தங்களது முழு விபரங்களையும் உள்ளடக்கியதாக மின் னஞ்சலில் mkmocolombo@gmail.com முகவ ரிக்கு அல்லது தபாலில் முத்தமிழறிஞர் ஞாப கார்த்த மன்ற செயலாளர், 215/9/E, Park Road, Colombo 05 என்ற விலாசத்திற்கு அல்லது +94718350350/ +94777304078/ +9476969859 ஆகிய வாட்ஸ்அப் இலக்கங்களுக்கு Pdf ஆக மேமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப் பிவைக்க வேண்டும். ஜூன் மாதம் மூன்றாம் திகதி காலை கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத் தில் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் தலை மையில் நடைபெறவுள்ள கலைஞர் மு. கரு ணாநிதியின் நூற்றாண்டு விழாவில் வைத்து போட்டியாளர்களுக்கான பரிசுகள் சான்றிதழ்க ளும் வழங்கப்படும்.

அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பாரா ளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்திலிருந்து திமுக பிரதிநிதிகள், கலைஞர்கள், ஊடகவிய லாளர்கள் பலரும் கலந்துகொள்ள இந்நிகழ் வில் தினகரன் ஆசிரியர் தே. செந்தில்வேலவர் முன்னிலை வகிப்பதோடு இலங்கை இந்திய செய்தி தொடர்பாளர் மணவை அசோகன் ஏற் பாட்டாளராக செயற்படுகிறார்.

# கஞ்சாவுடன் கைதானோருக்கு விளக்கமறியல்

**(பாலமுனை தினகரன் நிருபர்)**

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இருவரை எதிர் வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதூர் நகரில் 1050 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவரும், ஹிஜிரா வீதியில் 1100 மில்லி கிராம் கஞ்சாவுடன் இன்னுமொருவரும் கைது செய் யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசங்களுக்குச் சென்று நபர்களை கைது செய்து ஞாயிற்றுக்கிழமை (14) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே சந்தேக நபர்களுக்கு இந்த விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.


ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Pradeshiya Sanwardhana Bank

# மீட்கப்படாத தங்க ஆபரணங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள், அலுவலகங்கள் மற்றும் அடகு மத்திய நிலையங்களில் அடகு மேற்கொள்ளப்பட்டு, 2023-06-16ம் திகதி வரை மீட்கப்படாத தங்க ஆபரணங்களை 2023-06-17ம் திகதி முதல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிராந்திய அலுவலகங்களில், மாவட்ட அலுவலகங்களில் மற்றும் கிளைகளில் பகிரங்க ஏல விற்பனை மேற்கொள்ளப்படும்.

**அனைத்து ஏல விற்பனைகளும் முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.**

| அடகு பெற்றுக்கொள்ளப்பட்ட இறுதித் திகதி | அடகு காலம் | அடிப்படையாக கொண்ட திகதி | பூர்த்தியாகிய காலம் |
|---|---|---|---|
| 2022.04.30 | 12 மாத காலத்திற்கு அடகு வைக்கப்பட்டவை | 2023.04.30 | 01 வருடம் பூர்த்தியாகியது |
| 2022.10.31 | 06 மாதங்களிற்கு அடகு வைக்கப்பட்டவை | 2023.04.30 | 06 மாதங்கள் பூர்த்தியாகியது |
| 2023.01.31 | 03 மாதங்களிற்கு அடகு வைக்கப்பட்டவை | 2023.04.30 | 03 மாதங்கள் பூர்த்தியாகியது |

**பிராந்திய அலுவலகம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மத்திய (தொ.இ 0812214115/6/7) | வடமத்திய (தொ.இ 0252223080/ 0252225214) | வடமேல் (தொ.இ 0372231880) | சப்ரகமுவ (தொ.இ 0452224566) | ஊவா (தொ.இ 0552223635) | மேல் (தொ.இ 0332248731 0332248583) | கிழக்கு (தொ.இ 0652225881) | தென் (தொ.இ 0412226208/9) |

**மாவட்ட அலுவலகம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கண்டி (தொ.இ 0812214115/6/7 0812214124) | பொலன்னறுவை (தொ.இ 0272223212) | குருநாகல் (தொ.இ 0372268323/ 03722668181) | இரத்தினபுரி (தொ.இ 0452230512) | மொனராகலை (தொ.இ 0552273930) | அம்பாறை (தொ.இ 0632223420) | கம்பஹா/ கொழும்பு (தொ.இ 0332234922) | ஹம்பாந்தோட்டை (தொ.இ 0472240647/8) |
| மாத்தளை (தொ.இ 0662051332/3) | அநுராதபுரம் (தொ.இல 0252223080) | புத்தளம் (தொ.இ 0322223448/ 0322223689) | கேகாலை (தொ.இ 0352230333) | பதுளை (தொ.இ 0552224192) | மட்டக்களப்பு (தொ.இ 0652225845) | களுத்துறை (தொ.இ 0342264276 0342262526) | மாத்தறை (தொ.இ 0412231585) |
| நுவரெலியா (தொ.இ 0522224552 0522222630) | வட மாவட்டம் (தொ.இ 0212280180) | | | | | | காலி (தொ.இ 0912222458) |

**மேல் மாகாணம்**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அஹலவத்தை | பதுரலிய | அவிஸ்ஸாவளை | பேருவளை | புளத்சிங்கள | திவுலப்பிட்டி | தொடங்கொட | கம்பஹா | கோணப்பொல | ஹோமாகம | ஹொறணை | இங்கிரிய |
| ஜா- எல | களுத்துறை | மீகஹதென்ன | மில்லனிய | மினுவங்கொட | மீரிகம | மிரிஸ்வத்தை | மொறகஹஹேன | மொறந்துட்டுவ | நிட்டம்புவ | நீர்கொழும்பு | பாணந்துறை |
| பிலியந்தலை | றாகம | வாத்துவ | வலகெதற | வறக்காகொட | களனி | கிரிந்திவெல | கொலன்னாவ | மதுகம | மாவரமண்டிய | நுகேகொட | |

**மத்திய மாகாணம்**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அக்கரப்பத்தனை | தம்புள்ளை | தந்துரே | தவுலகல | கலேவெல | நுவரெலியா | கினிஹத்ஹேன | ஹதறலியத்த | ஹங்குரன்கெத்த | ஹேதெனிய | உடுதும்பர | உடவெல |
| கட்டுகஸ்தோட்டை | கண்டி இரண்டாம் நகர கிளை | கண்டி | கொடகல | லக்கலை | மனிக்கின்ன | மாறஸ்ஸண | செங்கடகல | மாத்தளை | மொறயாய | வத்தேகம | வில்கமுவ |
| நில்தண்டாஹின்ன | நாவலப்பிட்டி | நாஉல | கம்பளை | பேராதெனிய | பூஜாப்பிட்டி | பூண்டுலோயா | றத்தோட்டை | றிகில்லகஸ்கட | தெல்தெனிய | | |

**வடமத்திய மாகாணம்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுர புதிய நகரம் | அநுராதபுரம் | அறலகண்வில | பக்கமுண | கலென்பிந்துனுவெவ | சுன்னாகம் | சிறிபுர | போகஸ்வேவ | கல்நேவ | கதுருவெல | கிளிநொச்சி |
| ஹிங்குரக்கொட | யாழ்ப்பாணம் | கோணப்பத்திராவ | கதுருவெல புதிய நகரம் | கஹடகஸ்திகிலிய | கெக்கிராவ | திறப்பன | செவணப்பிட்டிய | மன்னார் | மன்னம்பிட்டி | மிஹிந்தலை |
| பொலன்னறுவை | தம்புத்தேகம நகரம் | புலஸ்திகம | ரம்பேவ | கனகராயன்குளம் | கல்அமுண | தலாவ | தம்புத்தேகம | வவுனியா | மெதிரிகிரிய | மதவாச்சி |

**வடமேல் மாகாணம்**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பண்டுவஸ்நுவர | அளவ்வ | அம்பன்பொல | ஆனமடுவ | போவத்தை | சிலாபம் | தும்மலசூரிய | கல்கமுவ | கிரிஉல்ல | அத்துகல்புர | இப்பாகமுவ | கிரிமெட்டியான |
| குளியாப்பிட்டி | குருநாகல் | மஹவெவ | மாஹோ | மாம்புரி | மாவத்தகம | மெல்சிறிபுர | முந்தல | நாறம்மல | நாத்தாண்டியா | நவகத்தேகம | நிக்கவரட்டிய |
| பாலக்குடா | பன்னல | பறகஹதெனிய | பரகும்புர | பொல்பிட்டிகம | பொத்துகர | புத்தளம் | றிதிகம | புனித அனாபுர | வாரியப்பொல | கற்பிட்டி | வென்னப்புவ |

**சப்ரகமுவ மாகாணம்**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரனாயக | பலாங்கொடை | புலத்கொஹுபிட்டிய | தெஹியோவிற்ற | தெரணியகல | தேவாலேகம | எஹெலியகொட | எம்பிலிப்பிட்டிய | எரத்ன | கொடக்காவெல | ஹெம்மத்தகம | கஹவத்தை |
| கலவான | கேகாலை | கேகாலை இரண்டாம் நகரம் | கிரியெல்ல | கிதுல்கல | கொலன்ன | கொட்டியாக்கும்புர | குருவிற்ற | மாவனல்லை | நெலுந்தெனிய | நிவித்திகல | பல்மடுல்ல |
| பிடகல்தெனிய | பொதுபிட்டிய | புலிங்குபிட்டிய | றக்குவான | றம்புக்கண | இரத்தினபுரி | றுவண்வல்ல | ஸ்ரீ பாலபத்தல | வறக்காபொல | வெலிகேபொல | யட்டியாந்தோட்டை | |

**ஊவா மாகாணம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வெல்லவாய | படல்கும்புர | பதுளை | பண்டாரவளை | பிபில | போகஹகும்புர | புத்தல | தியத்தலாவ | கிராந்துருகோட்டே |
| லுணுகல | மடுல்ல | மஹியங்கனை | ஊவா மாலிகாதன்ன | மெதகம | மீகஹகிவுல | மொனராகலை | பஸ்ஸறை | றிதிமாலியத்த |
| ஊவா பறணகம | வெலிமடை | ஹப்புத்தளை | ஹல்துமுல்ல | செவணகல | சியம்பலாண்டுவ | தனமல்வில | கந்தகெட்டிய | |

**கிழக்கு மாகாணம்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வாழைச்சேனை | அக்கரைப்பற்று | அம்பாறை | தெஹியத்தகண்டி | கல்முனை | சம்மாந்துறை | மஹாஓயா | கொக்கட்டிச்சோலை | திருகோணமலை இரண்டாம் நகரம் | பொத்துவில் | தமண |
| திருகோணமலை | செங்கலடி | ஏறாவூர் | களுவாஞ்சிக்குடி | நிந்தவூர் | மட்டக்களப்பு | கந்தளாய் | காத்தான்குடி | மட்டக்களப்பு இரண்டாம் நகரம் | மூதூர் | உஹண |

**தென் மாகாணம்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யக்கலமுல்லை | அங்குணகொலபெலெஸ்ஸ | அஹங்கம | அக்மீமண | அக்குரஸ்ஸ | வெலிகம | பத்தேகம | பலபிட்டி | பறவாக்கும்புக | பட்டபொல | பெலியத்த |
| தெய்யந்தர | ஹம்பாந்தோட்டை இரண்டாம் கிளை | தெவிநுவர | திக்வெல்ல | அல்பிட்டி | காலி | கந்தற | கோணகல்புர | ஹக்மண | ஹம்பாந்தோட்டை | மாத்தறை நகரம் |
| இமதுவ | கேகணதுற | களுவெல்ல | கம்புறுகமுவ | மொறவக்க | கரந்தெனிய | கராப்பிட்டி | கடுவாண | கிரிந்த | லுணுகம்வெஹெர | மாவரல |
| மிரிஸ்ஸ | கம்புறுப்பிட்டி | நெலுவ | பம்புரண | பிற்றபத்தர | பிற்றிகல | றண்ண | சூரியவெவ | தங்காலை | தல்கஸ்வல | திஸ்ஸமஹராம |
| உடுகம | ஊறகஸ்மங் சந்தி | ஊறுபொக்க | தெனியாய | வராப்பிட்டி | வீரக்கெட்டிய | மித்தெனிய | ஹிக்கடுவை | வலஸ்முல்லை | திஹகொட | அம்பலாந்தோட்டை |

**குறிப்பு :** லங்காபுத்ர அபிவிருத்தி வங்கிக்குரிய இக்கிளைகள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

ஹம்பாந்தோட்டை இரண்டாம் நகர கிளை - ஹம்பாந்தோட்டை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.
கதுருவெல இரண்டாம் நகர கிளை - கதுருவெல கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.
கேகாலை இரண்டாம் நகர கிளை - கேகாலை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.
திருகோணமலை இரண்டாம் நகர கிளை - திருகோணமலை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

**ஏல விற்பனைத் திகதியினைப் பிற்போடுதல், ஒன்றிணைத்து மேற்கொள்ளுதல் அல்லது இரத்து செய்தல் போன்ற அதிகாரம் வங்கிக்கே உரித்தாகும்.**

**பிரதி பொது முகாமையாளர்**
**கடன் அறவீடுகள்**
**பிரதேச அபிவிருத்தி வங்கி**
**தலைமை அலுவலகம்**
**இல. 933, கண்டி வீதி, வெதமுல்லை, களனி**
**2023.05.15**

CargillsBank
வாழ்க்கைக்கு உயிரூட்டும் வங்கி

# வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி
# 31 மார்ச் 2023 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான நிதிநிலை அறிக்கைகள்

## வருமானக் கூற்று

| | முடிவடைந்த மூன்று மாதங்களுக்கு | | |
|---|---|---|---|
| | 31-03-2023 ரூ. ' 000 | 31-03-2022 ரூ. ' 000 | மாற்றம் % |
| வட்டி வருமானம் | 2,705,381 | 1,271,307 | 113 |
| கழி: வட்டிச் செலவினங்கள் | (1,842,303) | (704,052) | (162) |
| **தேறிய வட்டி வருமானம்** | 863,078 | 567,255 | 52 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 338,717 | 227,551 | 49 |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | (111,410) | (82,272) | (35) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | 227,307 | 145,279 | 56 |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | 1,689 | 29,417 | (94) |
| நிதியியல் முதலீடு மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | 8,192 | 1,104 | 642 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் - தேறிய * | 114,217 | 183,314 | (38) |
| **மொத்த ஏனைய வருமானம்** | 124,098 | 213,835 | (42) |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | 1,214,483 | 926,369 | 31 |
| **கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு** | | | |
| வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் | (250,571) | (403,385) | 38 |
| நிதிச் சொத்துக்கள் மற்றும் ஏனையவை | (27,622) | (2,989) | (824) |
| **மொத்தக் கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு** | (278,193) | (406,374) | 32 |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | 936,290 | 519,995 | 80 |
| பணியாளர் செலவுகள் | (264,664) | (229,861) | (15) |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | (82,127) | (96,385) | 15 |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்கள் | (330,482) | (224,960) | (47) |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | (677,273) | (551,206) | (23) |
| **நிதிச் சேவைகள் மூலமான வரிக்கு முந்திய செயற்படு இலாபம்/(நட்டம்)** | 259,017 | (31,211) | 930 |
| நிதிச் சேவைகள் மீதான வரி | (85,119) | (35,131) | (142) |
| **வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | 173,898 | (66,342) | 362 |
| கழி: வரிச் செலவினங்கள் | (67,432) | 8,034 | (939) |
| **வருடத்திகான இலாம்/(நட்டம்)** | 106,466 | (58,308) | 283 |
| பங்கொன்றின் இலாபம்/(நட்டம்) - ரூ. | 0.12 | (0.07) | 283 |

## ஏனைய விரிவான வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டக் கூற்று

| | முடிவடைந்த மூன்று மாதங்களுக்கு | | |
|---|---|---|---|
| | 31-03-2023 ரூ. ' 000 | 31-03-2022 ரூ. ' 000 | மாற்றம் % |
| **காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்)** | 106,466 | (58,308) | 283 |
| **வரி நீங்கலான ஏனைய விரிவான வருமானம்** | | | |
| **இலாபம்/(நட்டம்) ஆக மறுவகைப்படுத்தப்படாத பொருட்கள்** | | | |
| திறைசேரி உண்டியல்கள் | 66,388 | (17,734) | 474 |
| திறைசேரி பத்திரங்கள் | 156,908 | (69,410) | 326 |
| விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏனைய தொகுக்கப்பட்ட வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் மூலமான முதலீட்டின் தேறிய இலாபம்/(நட்டம்) | 223,296 | (87,144) | 356 |
| மேலே தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து | (66,989) | 20,915 | (420) |
| | 156,307 | (66,229) | 336 |
| **காலப்பகுதிக்கான வரி நீங்கலாக ஏனைய விரிவான வருமானம்** | 156,307 | (66,229) | 336 |
| **காலப்பகுதிக்கான வரி நீங்கலாக மொத்த ஏனைய விரிவான வருமானம்/(செலவினம்)** | 262,773 | (124,537) | 311 |

## நிதி நிலைமைக் கூற்று

| திகதிக்கு | 31-03-2023 | 31-12-2022 | |
|---|---|---|---|
| | ரூ. ' 000 | (கணக்காய்வுக்கு உட்பட்டது ரூ. ' 000 | மாற்றம் % |
| **சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 1,690,342 | 1,232,272 | 37 |
| மத்திய வங்கிகளுடனான மீதிகள் | 1,423,799 | 1,311,926 | 9 |
| வங்கிகளுடனான பணியமர்த்தல்கள் | 108,046 | - | - |
| நிதி உபகரணங்களிலிருந்து பெறப்பட்டவை | 1,659 | - | - |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் சொத்துகள் - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 38,980,386 | 35,960,082 | 8 |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் சொத்துகள் - கடன் மற்றும் ஏனைய கடன் பத்திரங்கள் | 1,951,983 | 1,996,950 | (2) |
| ஏனைய தொகுக்கப்பட்ட வருமானம் ஊடாக நியாய மதிப்பீட்டில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துகள் | 12,808,748 | 10,253,496 | 25 |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 435,223 | 475,178 | (8) |
| அருவச் சொத்துக்கள் | 313,537 | 335,150 | (6) |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 821,301 | 955,721 | (14) |
| ஏனைய சொத்துக்கள் | 1,108,546 | 1,232,034 | (10) |
| **மொத்தச் சொத்துக்கள்** | 59,643,570 | 53,752,809 | 11 |
| **பொறுப்புக்கள் மற்றும் பங்கு மூலதனம்** | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | 461,462 | 514,193 | (10) |
| நிதி உபகரணங்களிலிருந்து பெறப்பட்டவை | - | 30 | (100) |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் பொறுப்புக்கள் - வைப்புக்களின் காரணமாக | 45,354,453 | 37,802,680 | 20 |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் பொறுப்புக்கள் - ஏனைய கடன் பத்திர உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 2,116,031 | 3,688,924 | (43) |
| ஓய்வூதிய நலப் பொறுப்புக்கள் | 98,901 | 96,806 | 2 |
| குத்தகைப் பொறுப்பு | 326,987 | 340,542 | (4) |
| ஏனைய பொறுப்புக்கள் | 1,302,657 | 1,589,329 | (18) |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 49,660,491 | 44,032,504 | 13 |
| **பங்கு மூலதனம்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 11,394,421 | 11,394,421 | - |
| பிற பங்கு செயற்கருவி | 56,774 | 56,774 | - |
| நியதிச் சட்ட ஒதுக்கம் | 23,556 | (132,751) | 118 |
| ஏனைய விரிவான வருமான இருப்பு மூலம் நியாயப் பெறுமதி | (1,491,672) | (1,598,139) | 7 |
| திரண்ட நட்டம் | 9,983,079 | 9,720,305 | 3 |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்கு மூலதனம்** | 59,643,570 | 53,752,809 | 11 |
| **எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்** | 18,867,718 | 22,292,738 | |
| **சாதாரண பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள் மதிப்பு (ரூ.)** | 11.30 | 11.01 | |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 585 | 598 | |
| கிளைகளின் எண்ணிக்கை | 23 | 23 | |

### உறுதிப்படுத்தல்கள்:

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்க இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஒப்பம்)
**டீ.கஜநாயக்க**
தலைவர் - நிதி

கார்கில்ஸ் வங்கியைச் சேர்ந்த முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் தலைவர் ஆகிய நாங்கள் கையொப்பமிட்டு கூட்டாக அத்தாட்சிப்படுத்துவதாவது,
(அ) இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கும் உரிய படிவம் மற்றும் பொருள் கூறல்களுக்கு இணங்க மேற்கூறப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும்,
(ஆ) இந்த அறிக்கைகளில் உள்ள தகவல்கள் வங்கியின் கணக்ககாய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

(ஒப்பம்)
**கே பி எஸ் பண்டார**
முகாமைத்துவப் பணிப்பாளர்

(ஒப்பம்)
**ஆர் ஏ இபெல்**
தலைவர்

12/05/2023
கொழும்பு

## காசுப்பாய்ச்சல் கூற்று

| | முடிவடைந்த மூன்று மாதங்களுக்கு | |
|---|---|---|
| | 31-03-2023 ரூ. ' 000 | 31-03-2022 ரூ. ' 000 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | |
| வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்) | 173,898 | (66,342) |
| ***சீராக்கங்கள்:*** | | |
| வரிக்கு முந்திய இலாபம் உள்ளடக்கப்பட்ட காசு அல்லாதவைகள் | 377,858 | 553,160 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் மற்றும் இதர சொத்துக்கள் விற்பனையின் இலாபங்கள்/(நட்டங்கள்) | (10,113) | (8,814) |
| பங்கிலாப வருமானம் | - | 314 |
| பங்குலாப வருமானம் | (373) | - |
| ஈவுத்தொகை வருமானம் | (5,330) | (1,146) |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் விற்பனையில் ஆதாயங்கள்/(இழப்புகள்) | (5,578,162) | (2,381,867) |
| குறிப்பிட்ட நன்மை வழங்கல் திட்டத்தின் கீழ் செலுத்தியவை | 7,230,371 | 1,385,888 |
| **செயற்பாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் மாற்றங்களுக்கு முன்னரான செயற்படு இலாபம்** | 2,188,149 | (518,807) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய கொள்வனவு | (10,794) | (7,466) |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனையின் மூலம் இலாபங்கள் | - | 391 |
| கடன் பத்திரங்களில் முதலீடு | - | (150,000) |
| அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு | (9,776) | (12,605) |
| பெற்ற பங்குலாபம் | 373 | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்திய) காசுப்பாய்ச்சல்** | (20,197) | (169,680) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| செலுத்திய குத்தகைப் பொறுப்பு | | |
| மீள்கொள்முதல் அடிப்படையில் விற்பனை செய்யப்படும் பத்திரங்களின் மாற்றம் | (13,556) | (44,072) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்திய) தேறிய காசு** | (1,687,000) | 1,038,430 |
| | (1,700,556) | 994,358 |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | 467,396 | 305,871 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 1,260,340 | 1,222,459 |
| **காலமுடிவின் போது காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | 1,727,736 | 1,528,330 |
| குறைவு: குறைபாடு | (37,394) | (10,500) |
| **நிதி நிலை அறிக்கையின்படி ரொக்கம் மற்றும் பணத்திற்குச் சமமானவை (நிகரம்)** | 1,690,342 | 1,517,830 |

## பங்கு மாற்றங்களின் கூற்று

| | உரிமை மூலதனம் | நியதிச் சட்ட இருப்புக்கள் | பிற விரிவான வருமான இருப்பு மூலம் நியாயமான பெறுமதி | திரட்டப்பட்ட இழப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ. ' 000 | ரூ. ' 000 | ரூ. ' 000 | ரூ. ' 000 | ரூ. ' 000 |
| 2022.01.01 திகதியன்று மீதி - கணக்காய்வு செய்யப்பட்டது | 11,394,421 | 32,386 | (46,132) | (2,055,814) | 9,324,861 |
| **31.03.2022 உடன் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான மொத்த விரிவான வருமானம்** | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | (58,310) | (58,310) |
| ஏனைய விபரமான வருமானம்/(நட்டம்), தேறிய வரி | - | - | (66,229) | - | (66,229) |
| **காலப்பகுதிக்கான மொத்த விபரமான வருமானம்** | - | - | (66,229) | (58,310) | (124,539) |
| **வங்கி உரிமையாளர்களுடனான பரிவர்த்தனைகள் பங்களிப்புகள் மற்றும் விநியோகங்கள்** | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | - | - |
| ஏனைய விபரமான வருமானம்/(நட்டம்), தேறிய வரி | - | - | - | - | - |
| **காலப்பகுதிக்கான மொத்த விபரமான வருமானம்** | - | - | - | - | - |
| **31.03.2022 திகதியன்று மீதி** | 11,394,421 | 32,386 | (112,361) | (2,114,124) | 9,200,323 |
| **2022.04.01 இல் இருந்து 2022.12.31 வரையான மொத்த முழுமையான வருமானம்** | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | 546,074 | 546,074 |
| ஏனைய விபரமான வருமானம்/(நட்டம்), தேறிய வரி | - | - | (20,390) | (5,701) | (26,091) |
| **காலப்பகுதிக்கான மொத்த விபரமான வருமானம்** | - | - | (20,390) | 540,373 | 519,983 |
| **வங்கி உரிமையாளர்களுடனான பரிவர்த்தனைகள் பங்களிப்புகள் மற்றும் விநியோகங்கள்** | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | - | - |
| ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்), தேறிய வரி | - | 24,388 | - | (24,388) | - |
| **காலப்பகுதிக்கான மொத்த விரிவான வருமானம்** | - | 24,388 | - | (24,388) | - |
- ஒப்பந்தக்காரரினால் பல வைத்தியசாலைகளிற்கு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் பொழுது, அவ் வைத்தியசாலைகளின் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பெறுமானங்களின் கூட்டுத் தொகைக்குச் சமமான அல்லது மேற்பட்ட பெறுமானத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்றாக இருத்தல் வேண்டும். மேலும், நீங்கள் விண்ணப்பிக்கும் வைத்தியசாலையின் பிரகாரம் பெறுமதி பின்வருமாறு அமைதல் வேண்டும்.

  ஆராய்ச்சி வைத்தியசாலைகள் - ரூபா 500,000.00
- அரசுடன் இணைந்த நிறுவனமொன்று விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதாயின் இச் சான்றிதழுக்குப் பதிலாக நிறுவனத் தலைவரினால், இவ் ஒப்பந்தத்தை சித்திகரமாக மேற்கொள்வதற்காக சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் போதுமானதாகும்.

VI. அண்மித்த ஆண்டில் தம் வியாபாரப் பதிவுப் பெயரில், சுத்திகரிப்புச் சேவையை வழங்கல் தொடர்பாக, பணியிலமர்த்தப்பட்ட அனைத்து ஊழியர்களினதும் ஊழியர் சேமநல நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் இற்கு சந்தாப்பணம் செலுத்தப்பட்டுள்ளதென இலங்கை மத்திய வங்கியினால்/ ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் வழங்கப்பட்ட கடிதங்கள்/ பற்றுச்சீட்டுக்கள்/ பணவரவு அறிவிப்புக்கள் 2021/2022 ஆண்டிற்கான கிட்டிய கடந்த 12 மாதங்களிற்கான கொடுப்பனவு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

VII. அண்மித்த மதிப்பீட்டு ஆண்டுக்கான சுத்திகரிப்பு நிறுவனத்தின் பெயரில் (VAT) பெசேவ/ வருமானவரி செலுத்தியுள்ளதென ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். (வ/ப கம்பனியொன்றெனின் கம்பனியின் பெயரிலும், தனிநபர்/ கூட்டு வியாபார நிறுவனமானது அனைத்து பங்குடைமையாளர்களின் பெயர்களிலும் அண்மித்த வருடத்திற்கான வருமானவரி, வட் வரி, செலுத்தப்பட்டமைக்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (2021/ 2022 ஆண்டிற்காக மாத்திரம்)

VIII. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விலைமனுப்பிணையமொன்று காசாக அல்லது இலங்கை மத்திய வங்கி அனுமதிக்கும் நிதி நிறுவனமொன்றினால்/ காப்புறுதி நிறுவனமொன்றினால் ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம' என்ற முகவரியில் அமைந்துள்ள ஆயுர்வேத ஆணையாளரின் பெயரில் வரையப்பட்ட மற்றும் விலைமனுக்கள் மூடப்படும் தினத்திலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் வண்ணம் பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுப் பிணையமொன்று விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (2023.06.08 முதல் 2023.10.04) வரை செல்லுபடியாகுதல் வேண்டும்.

இதற்காக ஆர்வமுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்கள் அதற்கான விலைமனுப்படிவங்களை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம இல் அமைந்துள்ள ஆயுர்வேத திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் வழங்கல் பிரிவில் பரீட்சித்துப்பார்த்துப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுப்படிவங்கள் வழங்கப்படும் இறுதித் தினம் மற்றும் நேரம் : 2023 ஜூன் 06 அன்று பி.ப. 2.30

கேள்விகள் மூடப்படும் திகதி மற்றும் நேரம் : 2023 ஜூன் 08 அன்று மு.ப. 10.30

03. பெறுகைக் கட்டணம்:

1. ஆயுர்வேத திணைக்களத்தின், ஆணையாளருக்கு, மீளளிக்கப்படாத மேற்படி படிவக்கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுடன் எழுத்துருவ விண்ணப்பமொன்று மற்றும் தம் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றைச் சமர்ப்பித்து 2023.05.15 முதல் 2023.06.06 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம என்ற முகவரியிலுள்ள ஆயுர்வேத திணைக்களத்தின் வழங்கல் பிரிவில் விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது
2. supply@ayurveda.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் எழுத்துருவ விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து இதற்கான விண்ணப்பப்படிவங்களை தரவிறக்கம் செய்து கொள்ளலாம். (வழங்கல் பிரிவின் 0112847556 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து இதற்கான விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.)
3. இப் பெறுகைக் கட்டணமானது, ஆயுர்வேத திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அப்பற்றுச் சீட்டின், மூலப்பிரதியானது விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். அல்லது 'ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேத திணைக்களம்' என்ற பெயரில் இலங்கை வங்கி மஹரகம கிளையின் 7041294 என்ற கணக்கிற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டு விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.
4. ஒவ்வொரு நிறுவனத்தினதும் வழங்கல் அல்லது சேவைகளிற்காக தனித்தனியாக விலைமனுப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விலைமனுப் பிணையங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், விலைமனு ஆவணங்கள் இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரதியையும் தனித்தனி உறைகளில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வழங்கலின் சேவையின் பெயர் மற்றும் உரிய நிறுவனத்தின் பெயர் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு, ஒருறையில் மூலப் பிரதி எனவும், மற்றைய உறையில் இரண்டாம் பிரதி எனவும் குறிப்பிட்டு அவ்விரு பிரதிகளையும் ஒரு தபாலுறையில் உள்ளிட்டு, தலைவர், பெறுகைக்குழு, ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது ஆயுர்வேத திணைக்கத்தின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில், நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம்.
5. அனைத்து விலைமனு ஆவணங்களும் 2023 ஜூன் 08 அன்று மு.ப. 10.30 இற்கு மூடப்படுவதுடன், உடனடியாக அவை திறக்கப்படுவதனால், கேள்விதாரர்கள் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னர் அச்சமயத்தில் சமுகமளித்திருக்கலாம். பதிவுத் தபால் அனுப்பப்படும் விலைமனுக்கள் 2023 ஜூன் 08 அன்று மு.ப. 10.30 இற்கு ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படுவதனால் அவை இத்திணைக்களத்திற்கு கிடைத்தனவா என்பது பற்றி விண்ணப்பதாரர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.
6. பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானம் என்பதனை கவனித்தல் வேண்டும்.

**ஆயுர்வேத ஆணையாளர்**
**பெறுகைக்குழுவின் தலைவர்,**
**ஆயுர்வேத திணைக்களம்,**
**பழைய கொட்டாவ வீதி,**
**நாவின்ன, மஹரகம.**



# 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல : DIVMH/LAND/ACQUR/9/10
காணி அமைச்சின் இலக்கம் : 4-3/12/2018/MS/373

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழக்குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்டஈட்டு பரீட்சைகள் 2022.06.21 ஆந் திகதி மஹவ பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2023.01.23ஆம் திகதிய அன்று 2316/06 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும். அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை நான் இத்தால் அறிவிக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | குருநாகல் | | |
| பிரதேச செயலாளர் பிரிவில் | மஹவ | | |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | 220 கடம்பாவ | | |
| ஆரம்ப வரைபட இல. | காணியின் பெயர் | துண்டு இலக்கம் | விஸ்தீரணம் |
| 1943 இல் பிற்சேர்க்கை இல.10, தாள் இலக்கம் 12 | கடம்பாவ | 451 | 0.1586 ஹெக்டயார் |

**பி. எம். சதுன். ஆர். சம்பத்**
**பிரதேச செயலாளர்**
**மஹவ**

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு உலர்ந்த ஔடதங்களை வழங்குவதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரல் – 2023

### இரண்டாம் காலாண்டு

இத் திணைக்களம் விநியோகிக்கும் கேள்வி மாதிரிப்பத்திரம் மூலம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக கீழே குறிப்பிடப்படுமாறு 'மீளளிக்கப்படாத' கேள்விக் கட்டணங்களை இத் திணைக்களத்திற்கு காசாக செலுத்தி உத்தியோகபூர்வ பற்றுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களுடன் பிரதேச செயலாளரினால் விநியோகிக்கப்படும் சொத்துச் சான்றிதழின் (பொது 170 மாதிரி) மூலப் பிரதியையும், கேள்விப் பிணைமுறிக் கட்டணத்தையும் செலுத்தி இருப்பதும் கட்டாயமாகும்.

| வழங்கல்கள் தன்மை | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை ரூ. | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | இப் பத்திரிகை அறிவித்தல் தினம் முதல் 6 மாதத்திற்குள் விநியோகிக்கப்படும் சொத்து சான்றிதழ் |
|---|---|---|---|
| ஊவா மாகாண ஆயுர்வேத மத்திய களஞ்சியத்திற்கு உலர்ந்த ஔடதங்களை வழங்குதல் | காசாக செலுத்துவதாயின் 100,000.00<br>வங்கிப் பிணைமுறியின் மூலமாயின் 200,000.00 (இப் பிணை முறி கேள்விப் பத்திரம் திறக்கப்படும் தினம் முதல் 120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்.) | 2,000/- | 500,000/- |

கேள்வி மாதிரிப் பத்திரங்களை 2023.05.16 முதல் 2023.06.06 பி.ப. 2.00 வரை அரச வேலை நாட்களில் இத் திணைக்கள அலுவலகத்தல் பெற்றுக் கொள்ளலாம்.

பொறியிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அத்துடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக வேறுவேறு உறைகளில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'உலர்ந்த ஔடதங்களை வழங்குதல் - 2023, இரண்டாம் காலாண்டு, தியத்தலாவ ஆயுர்வேத திணைக்களம்' என்று குறிப்பிட்டு 2023.06.07 பி.ப. 2.00 இற்கு முன்பு தலைவர், பெறுகைக் குழு, ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களம், தியத்தலாவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது பெறுகைக் குழுவின் தலைவரின் அறையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் திறக்கப்படுவதுடன், இவ் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளல், நிராகரித்தல் அல்லது அதன் ஒரு பகுதியை மாத்திரம் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முழுமையான உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது. இது பற்றிய மேலதிக விபரங்களை தொலைபேசி இல. 0572229173 என்ற இலக்கம் மூலம் திருமதி. அநுபமாவை அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களம்.**
**தியத்தலாவ.**

# பெறுகை அறிவித்தல்

### சுகாதார அமைச்சு

## மாவட்ட பொது வைத்தியசாலை - நீர்கொழும்பு

### ஆய்வுகூட உபகரணங்கள் வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல் – 2023

நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலை, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல் எனும் வேலைக்காக 2023 மே மாதம் 15ஆம் திகதி முதல் 2023 ஜுன் மாதம் 05ஆம் திகதி பி.ப. 1.30 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | உபகரணத்தின் பெயர் | எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 01 | Binocular Microscope | 01 | 30,000.00 |
| 02 | Hot Oven Sterilizer | 01 | 18,000.00 |
| 03 | Floating Water Bath | 01 | 15,000.00 |
| 04 | Centrifuge 15mm | 01 | 22,500.00 |
| 05 | Centrifuge 13mm | 02 | 22,500.00 |
| 06 | Slide Storing Cabinet - | 01 | 7,500.00 |
| 07 | Wax Block Storing Cabinet | 01 | 7,500.00 |

I. விலைமனு ஆவணங்களை 2023 மே மாதம் 15ஆம் திகதி முதல் 2023 ஜுன் மாதம் 05ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரையில் நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.
II. விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் திகதி: 2023-06-05ஆம் திகதி பி.ப. 01.30
III. விலைமனுக்கள் திறக்கப்படுதல் - 2023-06-05ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு

01. பெறுகை நடவடிக்கைகளுக்கான மீளளிக்கப்படாத கட்டணமாக 2500.00 ரூபாவை நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலை சிறாப்பருக்குச் செலுத்திய அல்லது இலங்கை வங்கியின் 7040797 எனும் கணக்கிலத்திற்கு வரவு வைத்து குறித்த பற்றுச்சீட்டை விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு இயைபான உபகரணங்களை இலங்கைச் சந்தைக்கு வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களினால் பெயரிடப்பட்ட முகவர் / அதிகாரபூர்வ பிரதிநிதிகள் மட்டுமே தகைமை பெறுவர்.
03. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் மருத்துவ உபகரணங்களின் மாதிரிகளுக்கு தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியாகும் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.
04. நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையினால் ஏற்றுக்கொள்ளப்படாத விலைக்கோரல் ஆவணங்கள் மற்றும் விலைக்கோரல் ஆவணக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாத விலைக்கோரல் ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை பதிவுத் தபாலில் ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, நீர்கொழும்பு'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
அல்லாவிடில் நேரில் கொண்டுவந்து இந்த வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த உபகரணத்தின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**மருத்துவர் ஜீ.பீ.என். பத்திரன,**
**பணிப்பாளர்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, நீர்கொழும்பு.**

# Invitation to Bidders

| | |
|---|---|
| **Procurement Name** | Procurement of Renting the Rooftops of Selected Buildings of Northern Provincial Council for implementation of Rooftop Solar PV Systems |
| **Procurement No.** | NPC/Solar/01 |
| **Deadline for Submission of Bids** | 10:00 hours on 12th June 2023 |

The Chairman, Procurement Committee, NPC ("the Employer") now invites sealed bids from eligible bidders through National Competitive Bidding (NCB).

To obtain further information with regard to key qualification requirements, method of purchasing the bidding documents, delivery and closing of bids, the bidders shall refer Invitation for Bids published in the Daily News on 12.05.2023 Page No. 13 and Northern Provincial Council web page **(https://np.gov.lk)**.

**Chairman,**
**Procurement Committee,**
**Chief Secretary's Secretariat, NP,**
**Provincial Council Complex,**
**A9 Road, Kaithady,**
**Jaffna.**

## கொலொன்ன பிரதேச சபை

# பாவனைக்கு உட்படுத்தப்படாத வாகனங்களின் ஏல விற்பனை

கொலொன்ன பிரதேச சபைக்கு உரித்தான பாவனைக்கு உட்படுத்தப்படாத வாகனங்களின் ஏல விற்பனைக்கான விலைமனுக் கோரல் பின்வரும் தினங்களில் கொலொன்ன பிரதேச சபையின் வளாகத்தில் மேற்கொள்ளப்படும்.

**விலைமனுக் கோரலின்**

I. மாதிரிப் படிவங்களை வழங்கல் : 2023.05.11 முதல் 2023.05.31 அன்று பி.ப. 3.00 வரை
II. ஏற்றுக்கொள்ளல் : 2023.06.01 அன்று மு.ப. 10.00 வரை
III. திறத்தல் : 2023.06.01 அன்று மு.ப. 10.15

மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் விலைமனுப்பிணையத்திற்கான அட்டவணை பின்வருமாறு:

| தொடர் இலக்கம் | வாகனத்தின் இலக்கம் | வகுதி | உற்பத்தி ஆண்டு | மீளளிக்கப் படும் கேள்விப் பிணையம் ரூபா | மீளளிக்கப் படாத மாதிரிப் படிவக் கட்டணம் ரூபா | ஆகக் குறைந்த கேள்வி |
|---|---|---|---|---|---|---|
| 03 | SG RC XXXX | STAND ARD TRACTER | 2011 | 9,850.00 | 1,500.00 | 985,000.00 |

- வாகனங்களைப் பரீட்சித்தல் 2023.05.11 முதல் 2023.05.31 வரை அலுவலக நேரங்களில் சபையின் வளாகத்தில் மேற்கொள்ளப்படலாம்.
- கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானம் கொலொன்ன பிரதேச சபைக்கு உரித்தாகும். மேலதிக விபரங்களை கொலொன்ன பிரதேச சபையின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தொ.பே. இலக்கம் :- 045-2260275**

**செயலாளர் மற்றும் அதிகாரங்கள்,**
**கருமங்கள் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அலுவலர்,**
**கொலொன்ன பிரதேச சபை,**
**கொலொன்ன.**

## இலங்கை திரிபோஷ லிமிட்டட்

# திரிபோஷ தொழிற்சாலையில் இருந்து அகற்றப்பட்ட கழிவுகளை விற்பனை செய்வதற்கான கேள்வி கோரல் (அரை ஆண்டு) – 2023/ 2024

**கேள்வி இல. :- SLTL/TB/06/2023**

01. இலங்கை திரிபோஷ கம்பனியின் பெறுகைக் குழுவின் தலைவரால் ஜா-எல திரிபோஷ தொழிற்சாலையில் இருந்து அகற்றப்பட்ட கழிவுகளை விற்பனை செய்வதற்காக கீழ்க்காணும் பொருட்களை அகற்றுவதற்காக 2023 மே 30 பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. திரிபோஷ தொழிற்சாலையில் இருந்து அகற்றப்பட்ட கழிவுகள்**

I. கூட்டி அகற்றப்பட்ட சோளம் சோயா கலவை - உலதந்த (துண்டு/ துகள்களாக)
II. கூட்டி அகற்றப்பட்ட சோள சோயா கலவை - ஈரமான (துண்டு / துகள்களாக) Grade 1 C (ஈரமான) மற்றும் Grade II (திரவம்)
III. திரிபோசமா (Powder)
IV. அ. சோயா உமி (Soya Hulls) Grade 1 மற்றும் சோயா உமி (Soya Hulls) Grade II
ஆ. சோளம் (உமி, துண்டுகள்) (Maize Hulls)

**02. வேறு கழிவுகள்**

1. பாவிக்கப்பட்ட வெற்று பால் உறை (தாள்) Used Paper Bags
II. பாவிக்கப்பட்ட கொருகேடட் பெட்டி மற்றும் காட்போட் Used Corrugated Boxes & Card Board
III. அகற்றப்பட்ட தாள் - Waste Polythene
IV. பாவிக்கப்பட்ட தாள் - Used Polythene
V. கடதாசி ரோல் - Paper Rolls (Reels)
VI. பாவிக்கப்பட்ட வெற்று பொலிபேக் - Used E/ Poly Bags - Soya/ Maize
VII. பாவிக்கப்பட்ட வெற்று பொலிபேக் - Used E/Poly Bags - Mineral

- அரசு அனுமதித்த வரித் தொகை அறவிடப்படும்.

2) எழுத்துமூல வேண்டுதல் கடிதத்துடன் ஆவணங்களுக்காக காசாக ரூ. 5,000/- மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை செலுத்தியமைக்காக இலங்கை திரிபோஷ லிமிட்டட் இன் காசாளரினால் விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து ஜா - எல கப்புவத்தவில் அமைந்துள்ள இலங்கை திரிபோஷ லிமிட்டட் இன் நிர்வாகப் பிரிவில் 2023 மே 29 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.30 வரையான காலத்திற்குள் குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3) சகல கேள்வி ஆவணங்களும் 2023 மே 30 பி.ப. 2.00 இற்கு முன்பு தலைவர், பெறுகைக் குழு, இலங்கை திரிபோஷ லிமிட்டட் த.பெ. 17, கப்புவத்த, ஜா-எல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இலங்கை திரிபோஷ லிமிட்டட் நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் உள்ளிட்டு அனுப்பும் கடித உறையை சீல் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "திரிபோஷ தொழிற்சாலைகளில் அகற்றப்பட்ட கழிவுகளை விற்பனை செய்வதற்கான கேள்வி கோரல் (அரை ஆண்டு) - 2023/ 2024" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

4) கேள்விப் பத்திரங்களை ஏற்றல் 2023 மே 30 பி.ப. 2.00 இற்கு முடிவடைவதுடன் அது முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறத்தல் கீழ்க்காணும் முகவரியில் இடம்பெறும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்க இடமளிக்கப்படும்.

இது பற்றிய மேலதிக விபரங்களை சிரேஷ்ட முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே. இல.:- 011-2236588/ 0112237418

**தலைவர்,**
**பெறுகை குழு,**
**இலங்கை, திரிபோஷ லிமிட்டட்**
**த.பெ. 17. கப்புவத்த,**
**ஜா-எல.**

## பொது மக்களின் முன்மொழிவுகள் மற்றும் கருத்தினைப் பெறுவதற்கான கோரல்

### பதுளை பிரதேச சபை

2024ஆம் ஆண்டிற்கான பதுளை பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் முன் மொழிவுகள் 2023.07.31ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்களது கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை 2023.07.31ஆம் திகதி பி.ப. 4.30 மணிக்கு முன் செயலாளர், பதுளை பிரதேச சபை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவோ அல்லது bdpradeshsabha@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

**செயலாளர்**
**பதுளை பிரதேச சபை**
**பதுளை.**

## முன்மொழிவுகளுக்கான அழைப்பு

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு தடயவியல் கணக்காய்வை நடாத்துவதற்காக ஆலோசகர் ஒருவரைத் தெரிவுசெய்தல்**

**B/16/2023**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தடயவியல் கணக்காய்வை நடாத்துவதற்கான ஆலோசனைச் சேவையை பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான ஆலோசனை நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள ஆலோசனைப் பெறுகைக் குழு முன்மொழிவுகளை அழைக்கின்றது.

இது போன்ற பணிகளை மேற்கொண்ட ஆலோசர்கள் இந்த ஆலோசனைச் சேவைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர் மற்றும் குறைந்த விலை அடிப்படையிலான (LCS) அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் 2023-05-25ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் httpp://ceypetco.gov.lk/public-tenders/.

விலைமனுக்கள் 2023-05-31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு தொழில்நுட்ப முன்மொழிவுகள் பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். ஆலோசகர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் தொழில்நுட்ப முன்மொழிவுகள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

2023-05-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

தெளிவுபடுத்தல்கள் (ஏதேனும் இருந்தால்) முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அவர்களிடமிருந்து தொலைபேசி இல. 011-5455335 அல்லது மின்னஞ்சல்: suppliers@ceypetco.gov.lk ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.


**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09, இலங்கை.**

Best way
to fulfil
your
Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer



# சொரணதொட்ட பிரதேச சபை

## 2024ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை வரைவதற்கான முன்மொழிவுகளைக் கோரல்

சொரணதொட்ட பிரதேச சபையின் 2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினை தயாரிப்பதற்கு உத்தேசித்துள்ளதால் உங்களது முன்மொழிவுகள் இருப்பின் அவற்றினை 2023.06.30ஆம் திகதிக்கு முன் கிடைக்குமாறு கீழ் காணும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புமாறு அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**முன்மொழிவுகள் அனுப்ப வேண்டிய முகவரி:**

**செயலாளர்**
**சொரணதொட்ட பிரதேச சபை**
**துன்ஹிந்த, சொரணதொட்ட,**
**பதுளை**

**செயலாளர்**
**சொரணதொட்ட பிரதேச சபை**
**துன்ஹிந்த, சொரணதொட்ட, பதுளை**

**2023.05.10**

# afc தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 28.02.2023 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 23.05.2023 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹுவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரகோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

**ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:**
722, கோட்டை வீதி இராஜகிரிய
23.05.2023

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600

# மஹரகம நகர சபை

## பொதுக் கழிவறைகளைக் குத்தகைக்கு வழங்கல்

இந் நகர சபைக்கு உரித்தான பின்வரும் பொதுக் கழிவறைகளை சுத்திகரித்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவோரிடம் கட்டணம் அறவிடும் உரிமையை 2023.06.01 முதல் 2024.05.31 வரையான காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. மஹரகம பொதுச் சந்தை கழிவறை
2. மஹரகம வாரசந்தை பொதுக் கழிவறை
3. மஹரகம நகரின் 35ஆம் இலக்க காணியின் பொதுக்கழிவறை
4. தலவத்துகொட பொதுக்கழிவறை

இது தொடர்பான மேலதிக விபரங்களை மஹரகம நகர சபையின் இணையத்தளமான, Maharagama.uc.gov.lk மூலம் அல்லது mucmaharagama@gmail.com மின்னஞ்சல் மூலம் அல்லது தொலைபேசி இலக்கம் 0112745002/ 011-3656207/ மூலம் அல்லது நகர சபையின் சுகாதாரப் பிரிவிற்குச் சமுகமளித்து அறிந்து கொள்ளலாம். அதற்கு மேலதிகமாக whatsapp இலக்கம் மற்றும் Hotline இல. 0716664002 மூலமும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரங்கள் கருமங்கள் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அலுவலர்**
**- 2023.05.12**

## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்

### கலைமாணி பட்டப்படிப்பு மாணவர்களை தெரிவு செய்வதற்கான நுழைவுப்போட்டிப் பரீட்சை

### Competitive Entrance Examination to Select Students for Admit to Follow the BA Degree Programme 2020/2021

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு மாணவர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இதனடிப்படையில் விண்ணப்பத்தில் கோரப்பட்டிருந்த தகைமைகளினை பூர்தத்தி செய்த விண்ணப்ப தாரர்களுக்கான நுழைவுப் போட்டிப்பரீட்சை எதிர்வரும் 20.05.2023 ஆம் திகதி காலை 11.00 தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை 05 நிலையங்களில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கோரப்பட்டிருந்த தகைமைகளினை பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத மாணவர்கள் 067-2052801 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு15.05.2023ஆம் திகதியிற்கு பின்னர் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதிவாளர்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**13.05.2023**

**'∴ப்ரீசாட் லங்கா (பிறைவேட்) லிமிடெட்' (முன்னர் 'டிஷ் டி வி லங்கா (பிறைவேட்) லிமிடெட்' என்று அழைக்கப்பட்டது) 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ம் பிரிவின் கீழான பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்.**

(கம்பெனி பதிவு எண் பி.வி. 85639) முன்னர் 'டிஷ் டி வி லங்கா (பிறைவேட்) லிமிடெட்' என்று அழைக்கப்பட்ட நிறுவனம் '∴ப்ரீசாட் லங்கா (பிறைவேட்) லிமிடெட்' என 2023ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8ம் பிரிவின் கீழான சட்டத்தின் பிரகாரம் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 86/4, நீர்கொழும்பு வீதி, கந்தானை எனும் முகவரியில் அமைந்துள்ளது என்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியதருகின்றது.

**எம் என்ட் ஏ கம்பெனி செக்ரடரீஸ் (பிறைவேட்) லிமிடெட்**
**(கம்பனியின் செயலாளர்கள்) சி/ஓ நித்தி முருகேசு ரூ அசோசியேட்ஸ், சட்டத்தரணிகள்**
**இல. 28, (2ம் மாடி), டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு-02.**

# அறிவித்தல்

2024ஆம் வருடத்தில் கதிர்காமம் பிரதேச சபையினால் செயற்படுத்தப்படவுள்ள உத்தேச வரவு - செலவுத் திட்டத்திற்கு இப்பொழுது அபிவிருத்திப் பிரேரணைகளுக்கு இயைபான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

உங்களது பிரதேச அபிவிருத்தி பிரேரணைகளை 2023-06-30ஆம் திகதிக்கு முன் தலைவர், பிரதேச சபை, கதிர்காமம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**கதிர்காமம்.**

**2021-08-23.**

**047-2235275**

# பங்கு மூலதனத்தை குறைப்பது சம்பந்தமான அறிவித்தல்

2007ஆம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 69ம் பிரிவின்படி சிறி லங்காவில் முறையாக பதிவு செய்யப்பட்ட PV 108147 எனும் பதிவிலக்கத்தையும் இல. 116/5, 116/10, 116/15, மொரஹஸ்முல்ல, ராஜகிரிய எனும் பதிவு செய்யப்பட்ட விலாசத்தையும் கொண்ட S L MOBILITY (PRIVATE) LIMITED எனும் கம்பனியானது தனது மூலதனத்தினை (இது பிழையாக வழங்கப்பட்ட மிகையான பங்குகள் ஆகும்) குறைப்பதற்கு இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பிரிவு 143ன் படி 2023ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17ஆம் திகதி நடாத்தப்பட இருக்கும் பங்குதாரர்களின் விசேட பொதுக் கூட்டமொன்றில் கீழ் காணும் ஒரு விசேட தீர்மானம் ஒன்றினை 2007ஆம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 144(2)ஆம் பிரிவின் படி இக் கூட்டத்தில் செய்ய வேண்டிய சகல விடயங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தால் ஒரு சுற்றறிக்கை தீர்மானமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

'இக் கம்பனியின் மூலதனத்தினை அறுநூற்றி தொன்றூற்றி மூன்று மில்லியன் ஐந்து லட்சத்திலிருந்து (693,500,000/-) இருபத்தி நாலு மில்லியன் ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரத்தினால் குறைந்தது (624,150,000/-) ரூபா 10/- பெறுமதியான ஆறு மில்லியன் தொழாயிரத்து முப்பத்தி ஐயாயிரம் (6,935,000) சாதாரண பங்குகளைக் கொண்ட அறுபத்தி ஒன்பது மில்லியன் முன்நூற்றி ஐம்பது லட்சம் (69,350,000/-) சாதாரண மூலதனமாக குறைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**இயக்குநர் சபையின் கட்டளைப்படி,**
**ஏசியன் கோர்ப்பரேற் செக்கரட்டறிஸ் (பிவிடி) எல்டிடி**
**செயலாளர்கள்**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 மே 17ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 180,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123H186 | LKA18223K179 | LKA36424E174 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 90,000 | 45,000 | 45,000 | 180,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2023 மே 17 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2023 மே 19 |
| வழங்கப்படும் திகதி | : 2023 மே 19 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2023 மே 17, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✳ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

**வணாத்திவில்லு பிரதேச சபை**

## 2024ஆம் ஆண்டிற்காண வரவுசெலவு திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்

2024ஆம் ஆண்டிற்கான வணாத்திவில்லு பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக இப்பகுதியில் உள்ள பொது மற்றும் சமூக அமைப்புக்களை 2023 ஜுன் 30ஆம் திகதிக்கு முன்னர் இப்பகுதியில் வளர்ச்சி நடவடிக்கைகள் தொடர்பான திட்டங்களை சமர்ப்பிக்குமாறு தயவு செய்து கேட்டுக் கொள்கிறேன்.

**ஏச்.எம்.ஐ.பீ. ஹேரத்,**
**செயலாளர்,**
**வணாத்திவில்லு பிரதேச சபை,**
**தொலைபேசி இலக்கம்: 032 3297251, 071 0579337**

**பொது அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9ஆம் பிரிவின் பிரகாரம் இந்த கம்பனி 2023 மார்ச் 31ஆம் திகதி ஒன்றிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நிறுவனத்தின் பெயர்: **தோர பீடி (பிரைவட்) லிமிட்டட்**

நிறுவனத்தின் பதிவிலக்கம்: **PV 00274395**

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்: **இல. 381/3/C, ''மல்ஷானி'', பண்டாரவத்த, ஹொரொம்புவ, வாரியபொல.**

**பணிப்பாளர் சபையின் கட்டளை பிரகாரம்**
**G A கன்சால்டன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்,**
**செயலாளர்கள்**

0718244495/0778197041

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

# வெற்றிடங்கள்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி - **முகாமைத்துவ உதவியாளர்கள்**
**முகாமைத்துவ உதவியாளர்கள் (கணக்காய்வு)**
**கணக்கியல் உதவியாளர்கள்**

தகைமைகள் - **முகாமைத்துவ உதவியாளர்கள் - Management Assistants**
**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

கல்வி:

(அ) க.பொ.த. (சா / த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
i. சிங்களம்/தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொது வினாத்தாளைத் தவிர்த்து) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

ஆரம்ப நிலை - தேர்ச்சி பெற்ற, மற்றும் ஆரம்ப நிலை - தேர்ச்சியற்ற தகைமைகளைக் கொண்ட பணியாளர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
i. சிங்களம்/தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

மேலும்
மேற்கூறப்பட்ட பணியாளர் நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**முகாமைத்துவ உதவியாளர்கள் (கணக்காய்வு) மற்றும் கணக்கியல் உதவியாளர்கள்**

**Management Assistants (Audit) and Account Assistants**

கல்வி:

(அ) க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
i. சிங்களம்/தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொது வினாத்தாளைத் தவிர்த்து) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

ஆரம்ப நிலை - தேர்ச்சி பெற்ற, ஆரம்ப நிலை - அரைத் தேர்ச்சி பெற்ற, மற்றும் ஆரம்ப நிலை - தேர்ச்சியற்ற தகைமைகளைக் கொண்ட பணியாளர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
i. சிங்களம்/தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

மேலும்
மேற்கூறப்பட்ட பணியாளர் நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

மேலதிக நன்மைகள் - மருத்துவக் காப்புறுதித் திட்டம்
ஊழியர் சேமலாப நிதியம் அல்லது இலங்கை தோட்டத்துறையாளர்களின் சேமலாபச் சங்கத்திற்கு உங்கள் சம்பளத்தின் 10% தொகையை பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உங்கள் சம்பளத்தின் 12% ஊழியர் சேமபலாப நிதியத்திற்கும் மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யும்.

சம்பள அளவு - முகாமைத்துவச் சேவையின் 02/2016ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமான சம்பள அளவு MA 1-1 - 2016 ரூபா [27,910- 10 x 300- 7 x 350- 4X495- 20X 660 - 48,540] மேற்படி பதவிக்கு உரித்தாகும்.

வயது - 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

ஆட்சேர்ப்பு நடைமுறை - நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட நியமனக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு
- இயைபுடைய மேலதிக அனுபவம் - 30 புள்ளிகள்
- இயைபுடைய மேலதிக கல்வித் தகைமைகள் - 30 புள்ளிகள்
- ஏனைய சாதனைகள் - 15 புள்ளிகள்
- நேர்முகத் தேர்வில் காட்டும் செயற்றிறன் - 25 புள்ளிகள்

100 புள்ளிகள்

ஏனையவை - இந்த வகுதியான அனைத்து ஆட்சேர்ப்புகளுக்கும் இந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தின் இணக்கம் கண்டிப்பாக இருக்கும்.
சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பதவிக்கான கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் - விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களுடன் பிறப்பத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் சகல விபரங்களுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
அரசாங்கம் / கூட்டுத்தாபனம் / சட்ட நியாமனம் என்பவற்றில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களின் திணைக்களத் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் - 2023 மே 30ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,** **2023-05-11**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை,**
**கொழும்பு-10.**

# உலகக் கிண்ண தகுதிகாண் தொடருக்கு இலங்கையின் உத்தேச குழாம் அறிவிப்பு

## திமுத் கருணாரத்ன, சந்திமாலுக்கு இடமில்லை



சிம்பாப்வேயில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண தகுதிகாண் போட்டி மற்றும் அதற்கு முன்னர் அடுத்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆப்கான் அணியுடனான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடருக்கான 30 பேர் கொண்ட இலங்கை உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் குசல் ஜனித் பெரேரா, சதீர சமரவிக்ரமவும் பந்துவீச்சாளர் வரிசையில் துஷ்மந்த சமீரவும் இடம் பெற்றுள்ளனர்.

இந்தியாவில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்திற்கு எஞ்சி இருக்கும் இரண்டு இடங்களுக்குமாக பத்து அணிகள் பங்கேற்கும் தகுதிகாண் போட்டியிலேயே இலங்கை அணி ஆடவுள்ளது. இந்தப் போட்டிகள் வரும் ஜூன் 18 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இதற்கான உத்தேச குழாத்தில் லெக் ஸ்பின் சுழற்பந்து வீச்சாளர் துஷான் ஹேமந்த மற்றும் ஐ.பி.எல் தொடரில் சோபித்து வரும் வேகப் பந்து வீச்சாளர் மதீச பத்திரணவும் இடம்பெற்றுள்ளனர். அவர் ஹம்பாந்தோட்டையில் வரும் ஜூன் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் ஆப்கானுடனான ஒருநாள் தொடரில் தனது கன்னி ஒருநாள் போட்டியில் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் புதுமுக வீரராக இடம்பெற்றிருக்கும் துஷான் ஹேமந்த அண்மையில் நடைபெற்ற அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட் குழாத்தில் இடம் பெற்றபோதும் போட்டியில் ஆட வாய்ப்பு கிடைக்கவில்லை. வனிந்து ஹசரங்க சோபிக்கத் தவறிவரும் நிலையில் மாற்று வீரராக ஹேமந்த உள்ளார்.

நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் இரண்டு ஆண்டுகளின் பின்னர் ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கு அழைக்கப்பட்ட அஞ்சலோ மத்தியூஸ் 30 பேர் கொண்ட குழாத்தில் இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார். எனினும் நியூசிலாந்துடனான மூன்று ஒருநாள் போட்டிகளிலும் அவரால் மொத்தம் 18 ஓட்டங்களையே பெற முடிந்தது.

எனினும் அனுபவ வீரர்களான தினேஷ் சந்திமால் மற்றும் திமுத் கருணாரத்ன இந்த உத்தேச குழாத்தில் இருந்து விடுபட்டுள்ளனர். தற்போது டெஸ்ட் அணித் தலைவராக உள்ள கருணாரத்ன நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தில் நடந்த ஒருநாள் உலகக் கிண்ணத்தில் இலங்கை அணித்தலைவராக செயற்பட்டபோதும் தற்போதைய தேர்வுக் குழு பதவிக்கு வந்த பின் ஒருநாள் அணியில் அவரது இடம் பறிபோனது. இந்த உத்தேச அணி இன்று (15) தொடக்கம் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கை உத்தேச குழாம்: பத்தும் நிசங்க, குசல் ஜனித் பெரேரா (வி.கா.), குசல் மெண்டில் (வி.கா மற்றும் உப தலைவர்), அஞ்சலோ மத்தியூஸ், நுவனிந்து பெர்னாண்டோ, சரித் அசலங்க, தசுன் ஷானக்க (தலைவர்), தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்ரம (வி.கா.), அஷேன் பண்டார, அவிஷ்க பெர்னாண்டோ, லசித் குரூஸ்புள்ளே, சஹன் ஆரச்சிகே, சாமிக்க கருணாரத்ன, வனிந்து ஹசரங்க, துஷான் ஹேமந்த, துனித் வெல்லாலகே, லஹிரு குமார, துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுஷங்க, கசுன் ராஜித்த, மதீஷ பத்திரண, மிலான் ரத்னாயக்க, நுவன் துஷார, பிரமோத் மதுஷான், அசித்த பெர்னாண்டோ, மஹீஷ் தீக்ஷன, லக்ஷான் சதகன், ரமேஷ் மெண்டிஸ், பிரவீன் ஜயவிக்ரம.

### தீசன் விதூஷன் அபார பந்துவீச்சு

# ஜப்பானை மீண்டும் வீழ்த்தியது இலங்கை வளர்ந்துவரும் அணி





ஜப்பான் தேசிய அணியுடனான நான்காவது டி20 போட்டியிலும் இலங்கை வளர்ந்து வரும் அணி 45 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இதன்மூலம் இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடரில் இலங்கை 4–0 என முன்னிலை பெற்றுள்ளது.

சானோ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று (14) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை வளர்ந்து வரும் அணி 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 131 ஓட்டங்களை பெற்றது.

மத்திய வரிசையில் வந்த ரன்மித் ஜயசேன 27 பந்துகளில் 39 ஓட்டங்களை பெற்றதோடு சகுன லியனகே 19 பந்துகளில் 31 ஓட்டங்களை குவித்தார். இரண்டு துடுப்பாட்ட வீரர்கள் மாத்திரமே இரட்டையிலக்க ஓட்டங்களை கடந்தனர்.

கெண்டெல் கடோவாகி பிளெமிங் 33 ஓட்டங்களையும், அலெக்ஸ் பெட்மோர் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க ஏனைய வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் வெளியேறினர்.

பதிலெடுத்தாடிய ஜப்பான் அணி 18.4 ஓவர்களில் 86 ஓட்டங்களுக்கே சுருண்டது. அபாரமாக பந்துவீசிய யாழ். மத்திய கல்லூரி முன்னாள் வீரரும் ஜப்னா கிங்ஸ் அணி வீரருமான தீசன் விதூஷன் 4 ஓவர்களுக்கு 18 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

விதூஷன் இந்தத் தொடரில் நேற்றைய போட்டியிலேயே முதல் முறை களமிறங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

டெலோன் பீரிஸ், சிதும் திசானாயக்க மற்றும் லக்ஷான் கமகே ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவது மற்றும் கடைசி டி20 போட்டி இன்று (15) இதே மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பஹ்ரியா முதலிடம்



**கல்முனை மத்திய தினகரன், பெரிய நீலாவணை விசேட நிருபர்கள்**

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட கல்முனை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் இந்த வருடம் பவளவிழா காணும் கல்முனை அல்–பஹ்ரியா மகா வித்தியாலயம் சம்பியன் பட்டத்தை வென்றது.

கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று இந்த விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்றது.

கல்முனை கோட்டத்தில் உள்ள கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியதுடன் 125 போட்டி நிகழ்சிகள் நடைபெற்றதோடு வெற்றிபெற்ற வீரர்களுக்கு இறுதிநாள் நிகழ்வில் பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதில் கல்முனை அல்–மிஸ்பா மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தை பிடித்தமை குறிப்பித்தக்கது.

# இலங்கை–பாகிஸ்தான் இடையே ஒருநாள் தொடரை நடத்த பேச்சு



எதிர்வரும் ஜூலை மாதம் இடம்பெறவுள்ள பாகிஸ்தான் அணியின் இலங்கை சுற்றுப்பயணத்தில் ஒருநாள் போட்டிகளையும் உள்ளடக்குவதற்கு இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டிக்கு தயாராகும் வகையிலேயே போட்டி அட்டவணையில் மாற்றங்களை கொண்டுவர இலங்கை மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைகள் உத்தேசித்துள்ளன.

இது தொடர்பில் இரு நாட்டு கிரிக்கெட் சபைகளின் உயர்மட்ட அதிகாரிகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருப்பதாகவும் இன்னும் அந்த பேச்சுவார்த்தைகள் தொடர்வதாகவும் நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகி உள்ளது. சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்தில் இரு டெஸ்ட் போட்டிகளில் ஆடுவதற்காகவே பாகிஸ்தான் அணி இலங்கை சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்நிலையில் இந்த டெஸ்ட் தொடருடன் சேர்த்து ஒருநாள் தொடர் ஒன்றை நடத்த அல்லது டெஸ்ட் தொடருக்கு பதில் ஒருநாள் தொடரை நடத்த இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் தீர்மானிக்க வாய்ப்பு உள்ளது. இதன்போது ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்திற்கான போட்டி அட்டவணையை மாற்றி அமைக்கவும் வாய்ப்பு உள்ளது.

இதில் ஒருநாள் போட்டிகளை இணைப்பது குறித்து பாக். கிரிக்கெட் சபை இன்னும் தீர்மானிக்காத போதும், இரு சபைகளும் டெஸ்ட் போட்டிகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருநாள் தொடர்களை உள்ளடக்குவது உலகக் கிண்ணத்திற்கான பயிற்சியாக அமைக்கும் என்றும் இரு சபைகளும் நம்புகின்றன.

## சர்வதேச செய்திகள்

### ஐந்து நாள் மோதலுக்குப் பின்

# காசா மற்றும் இஸ்ரேலுக்கு இடையே குழப்பத்துடன் போர் நிறுத்தம் அமுல்



காசாவில் பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் போராளிகள் மற்றும் இஸ்ரேலுக்கு இடையெ ஐந்து நாட்கள் நீடித்த மோதலுக்குப் பின் போர் நிறுத்தம் ஒன்று அமுலுக்கு வந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை (13) இரவு போர் நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மணி நேரத்திற்குப் பின்னரும் இரு தரப்புகளும் தாக்குதலை தொடர்ந்த நிலையில் குழப்பமான சூழலிலேயே போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (09) தொடக்கம் காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 33 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் குழு இலக்கு வைக்கப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டது.

காசாவில் இருந்து தொடர்ச்சியாக நடத்தப்பட்ட ரொக்கெட் குண்டு தாக்குதல்களில் ஒரு இஸ்ரேலியர் மற்றும் இஸ்ரேலில் பணி புரியும் ஒரு பலஸ்தீனர் என இருவர் கொல்லப்பட்டனர்.

மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்ட எகிப்து, போர் நிறுத்தத்தை இரு தரப்பும் கடைப்பிடிக்கும்படி வலியுறுத்தியுள்ளது. போர் நிறுத்தத்தை வரவேற்றிருக்கும் அமெரிக்கா, தீர்வொன்றை எட்டுவதற்கு பிராந்திய கூட்டாளிகளுடன் இணைந்து செயற்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

போர் நிறுத்தம் சனிக்கிழமை இரவு 10 பணிக்கு அமுலுக்கு வந்த நிலையில் காசாவுக்கு நெருக்கமாக உள்ள டெல் அவிவின் புறநகர் பகுதியில் காசாவில் இருந்து ரொக்கெட் குண்டுகள் வந்ததால் சைரன் ஒலி எழுப்பப்பட்டது. தொடர்ந்து இஸ்ரேல் காசா மீது மீண்டும் வான் தாக்குதல்களை நடத்தியது.

இந்த குழப்ப சூழலை தொடர்ந்தே போர் நிறுத்தம் அமுலுக்கு வந்ததாக இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் அமைப்புகள் உறுதி செய்துள்ளன. இதில் பொது மக்கள் மற்றும் மற்றைய தனி நபர்களை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துவதாக இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன போராளிகள் இணங்கி இருப்பதாக எகிப்து உளவுத் தகவல்களை மேற்கோளாகக் கொண்டு பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஐந்து நாட்கள் நீடித்த மோதல்களில் காசாவில் இருந்து குறைந்தது 1234 ரொக்கெட் மற்றும் மோட்டார் குண்டுகள் வீசப்பட்டிருப்பதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

மறுபுறம் காசாவெங்கும் 371 பலஸ்தீன ஜிஹாத் அமைப்புகளின் இலக்குகள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தி இருப்பதோடு இந்தத் தாக்குதல்களில் அந்தக் குழுவின் மூன்று தலைவர்கள் கொல்லப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் கொல்லப்பட்ட 33 பேரில் பாதி அளவானவர்கள் பொது மக்கள் என்பதோடு அவர்களில் ஏழு சிறுவர்கள் மற்றும் நான்கு பெண்கள் இருப்பதாக உள்ளூர் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# துருக்கியின் தீர்க்கமான தேர்தலில் வாக்குப் பதிவு



துருக்கியில் இருபது ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான் ஆட்சியில் நீடிப்பது குறித்து தீர்மானிக்கும் தீர்க்கமான தேர்தலில் நேற்று மக்கள் வாக்களித்தனர்.

எர்துவானை எதிர்த்துப் போட்டியிடும் கெமால் கிளின்டரொக்லு, ஜனாதிபதி எர்துவான் வைத்திருக்கும் பல அதிகாரங்களை இல்லாதொழிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார். 2016 இல் தனக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தோல்வியடைந்த இராணுவ சதிப்புரட்சியை அடுத்தே எர்துவான் தனது அதிகாரங்களை பலப்படுத்திக் கொண்டார்.

பரந்த எதிர்க்கட்சிக் கூட்டணியின் கீழ் போட்டியிடும் கெமால், எர்துவானுக்கு கடும் சவாலாக உள்ளார். எனினும் இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற 50 வீதமான வாக்குகளை வெல்ல வேண்டி உள்ளது. இல்லாவிட்டால் இரண்டு வார காலத்தில் இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு நடைபெறும்.

கடும் நெருக்கடியான சூழலிலேயே துருக்கியின் 64 மில்லியன் வாக்காளர்கள் தமது வாக்குகளை பதிவு செய்துள்ளனர்.

நாட்டில் பணவீக்கம் சுமார் 44 வீதம் அதிகரித்திருப்பதாகக் கூறப்பட்டபோதும், அது கூறப்படுவதை விடவும் அதிகம் என பெரும்பாலான துருக்கியர்கள் நம்புகின்றனர். மறுபுறம் துருக்கியில் அண்மையில் இடம்பெற்ற இரட்டை பூகம்பத்தில் 50,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் நான்கு வேட்பாளர்களில் ஒருவரான முஹர்ரம் இன்ஸ், அவதூறு பிரசாரங்களை காரணமாகக் கூறி போட்டியில் இருந்து நான்கு நாட்களுக்கு முன் விலகியபோதும் அவரது பெயரை வாக்குச் சீட்டில் இருந்து நீக்குவதற்கு அவகாசம் இல்லாமல் போனது.

தீவிர வலதுசாரியான சினான் ஓகன் மற்ற வேட்பாளராக உள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தவிர 600 எம்.பிக்களைக் கொண்ட பாராளுமன்றத்திற்காகவும் நேற்று தேர்தல் நடைபெற்றது. 2018 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அமுல்பத்தப்பட்டபோது பாராளுமன்றம் அதிகாரத்தை இழந்தபோதும் சட்டங்களை நிறைவேற்றும் முக்கிய பணியை அது செய்து வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 15ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.